திலையென்னிற் கேளாதென் னீங்குயர்ந்தோர் சொல்லைக்
கலைவலிர் மேலிதெனக்கண்டு. (கூச)

உள்ளஞ் சுயஞ்சோதி யொவ்வொருவர்க் கும்மென்னில்
உள்ளபடி காணும்வகை யோராது-கள்ளமதக்
கற்பனைய தாக்கியதைக் காணுவதோ நும்புலமை
சொற்கடங்கார்க் கேதுயர்ந்தோர் சொல். (கூடு)

புச்சாண்டிக் காட்டுவர்போற் பொத்தையுடல் மேற்போ
டச்சமுற நாடித்த லாயாது-லச்சையின்றி [ர்த்திட்
இங்குழல்வம் வெட்கமிலா தெவ்வுயிரி னுண்மைவடி
வங்கண்டு நிற்பதென்றே வந்து. (கூசு)

செத்தபின் னின்னகதி சேர்ந்தோ மெனவந்து
சொற்றதுண்டோ வெம்மதத்துஞ் சொற்றதெனில்-அ
[ற்றதுபொய்
இப்போதிங் கில்லையதா லீதொழித்து ஞானநிலை
கப்பாதிப் போதருமே தான். (கூஎ)

அறிவுமயம் லோகமய மாமிரண்டின் ஞானிக்
கறிவுமய மேனையர்க்கே தன்று-பிறிதாகும்
ஒன்று சுகமயமே யொன்று துயர்மயமே
யின்றிவற்றுள் யாமெதுவோ விங்கு. (கூஅ)

உலகமயம் யாமெனற்கிங் கொன்றுமிலை யையம்
விலகவுயர் நாட்டமதை மேவோம்-அலமுயல்வால்
தீருமோ மாப்புலவீர் தின்று கொழுக்கற்கே
பாருலகி னிற்பம் பரிந்து. (கூக)

ஏட்டுமுழு ஞானத்தா லிம்மயக்கந் தீராது
நாட்டமுழு ஞானமன்றி நாடுங்கால்-கேட்டுணரீர்
எல்லாம் படித்தாலு மெங்ஙனநாட் டஞ்தெரியும்
வல்லார்பாற் கீழ்ப்படிமின் வந்து. (ஈ)

நாட்டமிழி வாம்பந்தம் நாட்டமுயர் வான்முத்தி
நாட்டபே தத்தளவே நண்ணுகதி-காட்டுதும்யாம்
எந்தவிதத் தேனு மிறையளவும் வேறிலையென்
நந்தமில்கம் நீருணர்மி னங்கு. (ாக)

இப்போதிச் சென்மத்த னின்னாநா னிப்பெயரன்
இப்பால னென்றிருக்கைக் கேதென்னை-எப்போதும்
இன்னதுபோற் சென்மாமக் கில்லையெனற்கேதுண்டாம்
என்னதினும் சென்மபய மில். (ாஉ)

அன்னியமாய் முன்னோநா மாகா திருக்கிலிப்போ
தன்னியநா மாயிருத்தம் காதரவென்-அன்னியமாய்ப்
பின்னுநா மாகோமோ பேசுமினே ஞாயமுண்டேல்
இன்னதற்கு மாறுக விங்கு. (ாஊ)

உணர்வுடலென் றில்விரண்டி லோர்வ துணர்வே
யுணர்வுநா மென்பதன்றி யொன்று-புணருடனுன்
நாற்றப் பொருளதனை நாமென்னல் முன்பழக்கம்
நாற்றமதைத் தின்பவர்போ னன்கு. (ாசு)

ஒருவர் சுகமா யொருவர்மா றுகி
இருவகைய தாதற்கிங் கேதென்-ஞெருவகையால்
இட்டமிறை யாலென்னி லிட்டமுன்பின் னில்லையோ
விட்டிடுமோ சென்மமுன்பின் விண்டு. (ாஎ)

அவரிட்ட நம்மா லறியப் படாதேல்
அவரிட்ட மென்றே னறைவை-எவர்செயலும்
அல்லதனு லென்னி லவர்க்கேது பாரபட்சம்
இல்லையென்றுன் சொல்லவிடை யிங்கு. (ாஅ)

நீதிபர னுக்குலகி னேர்வதெவன் பாரபட்சம்
ஆதிபர னுக்கிதுபோ லாகாதே-ஏதெதனு
லென்னிற் பலன்விதிப்ப னெவ்வெவர்செய் கைக்களவா
அன்னதுபோற் செய்வா னவன். [ய் (ாஎ)

எப்படியா னேற்பனிதை யென்னின் மறுமைபலன்
எப்படியா னேற்பனின்சொல் லீதழகோ-அப்பா
மறுமைவினை யால்விதிப்பை மாறுக விம்மை
இறப்பன்யா னும்வினையா லிங்கு. (ாஅ)

நாமாரோ முன்பிறப்பி னுமாரா வோம்பின்னர்
ஆமோ வுனைக்கவெனி லாமோதான்-நாமா
உரைக்கவெது சொன்னலு முண்மையல வென்றிங்
குரைப்பதெவன் ஞாயமோ வுற்று. (ாகூ)

ஞாயமோ நும்மொழிதா னண்ணுங் கடைமுடிவில்
தூயபக வான்மீது தோன்றியே-மாயமாய்
மாண்டா ரனேவரையும் வந்தெழுப்பு வானென்னல்
ஈண்டுயா மேற்க விசை. (ாஐ)

வேதமெனி னெம்வேதம் வேறு மொழிவ தெவன்
நாதன்மொழி யன்றென்னி னுட்டோமோ-நாதன்மொழி
யன்றென்ன நும்மறையு யாகுமே யிவ்வாறே
இன்றுநீ சொல்வதெலா மிங்கு. (ாகக)

சுத்தமொன்று மில்லையே சூழுங்கா லெம்மறையும்
யுத்தியொத்த தின்றதனு லுண்மையன்று-எத்தடையும்
இன்றியா மாய்தமிங்க னெம்மறைதா னுள்ளமென
அன்றவனு மேற்று னதை. (ாகஉ)

ஒருங்குதிக்கில் யாரு மொருங்குதிப்ப மென்பம்
ஒருங்குதிப்பம் ஞாயமிலா தோதில்-திரும்பியுந்தான்
முன்னுடலா யென்பதெவன் முன்னுடற்பே ரம்மபினர்
இன்னதனை யாரோற்ப ரிங்கு. (ஈகஈ)

அவரிட்ட மென்னி னதுமுன் நடுத்தோம்
அவரிட்ட மன்றென்ன வாங்கே-அவாவென்னின்
ஆதியெங்ஙன் வந்ததென்பை யாதி யியற்கையெனின்
ஈதெங்ஙன் போமென்பை யிங்கு. (ஈகச)

அவாவிரண்ட தாமென்ப ரன்னியத்தைத் தன்னை
அவாவுதலாற் போகித்தற் காகும்-அவாவுதறுன்
ஆன்மாவை யாகி லதுவே யியற்கையெனல்
என்சொல்வ மற்றையதை யிங்கு. (ஈகஞ)

அதுமறத்தல் பந்த மதுகாண்டல் முத்தி
இதுவிரண்டுந் தோற்றமதே யில்லை-எதுவுந்தான்
வந்ததிலை போனதிலை வஸ்துவொன்றே யுண்மையெனு
இந்துவே தம்போலு மில். [ம் (ஈகசு)

பந்தம் விலகற்குப் பாடுபடுஞ் சாதனமேன்
பந்தமெலாந் தன்னுருவாப் பார்த்தற்கு-இந்த
முடிவெங்கு மில்லை முழுதுஞா யந்தான்
திடமுண்டே லிங்கிதுபோற் செப்பு (ஈகள)

இவ்வண்ணா மெம்மறையு மெல்லா மறையுமெனின்
இவ்வண்ணங் காட்டுதியே லீங்கேற்பன்-செவ்விதா
என்ன வவன்முனிவும் நீதெல்லா ஞாயமென்றுன்
உன்னுதற்கு மாறு யுற. (ஈடஅ)

ஞாயமதே லென்றடிப்ப ணுடாதென் னுங்குற்றம்
ஞாயமுறை யையாநீர் நாட்டுமெனின்-பேயர்மதத்
தப்புவழி நீமறந்து சாயாது நீகேட்கில்
செப்புவன்யா னுண்மைதனைத் தேர்ந்து. (ாகசு)

அறிவதுவுந் தோற்றுவது மாங்கண்ட காட்சி
பிறிதெதுவுங் கண்டிலம்யாம் பேசல்-வறிதேயாம்
எங்கே யறிகின்றே மெல்லா வவத்தையுந்தா
னெங்கேதான் றோற்றுதோ வின்கு. (ாஉய)

அங்கேநீ யெங்கு மசையா திருந்தறைதி
எங்கு நினைவொழித்திங் கென்னவே-தங்க
இடமறியே னென்றுரைத்தா னென்வேலை யல்ல
திடமாக வுன்வேலை செய். (ாஉக)

இருந்திருந்து பார்த்து மெதுவு நிலைக்கா
திருக்குதே யென்செய்வே னென்றுன்-சிரக்குறியைக்
காலமது பார்த்திருந்து காட்டாமற் காட்டிணன்
காலங் கடந்தகுரு கான். (ாஉஉ)

எங்குஞ் சுயஞ்சோதி யேகவுந் வாக்காண
அங்கிங்கு பேத மழித்தொளியாய்த்-தங்கி
யிருந்துநெடு நோ மெழுந்திறைதாள் வீழ்ந்து
பெருங்குர லிட்டழுது பின். (ாஉங)

வலமிடமா வந்து வணங்கி வணங்கிப்
பலகால்கூத் தாடிப் பழிச்சி-நிலஉனையக்
கண்ணீர் பெருகிக் கசிந்துருகிப் பேரின்பம்
விண்ணுநொய் தாக்காண மிக்கு. (ாஉச)

சிரசதனிற் கைகுவித்துத் தெய்வமே யப்பா
அருமணியே நாயகமே யண்ணு-ஒருவருக்கும்
எட்டானே மானிடனு யிங்கே யெனக்குவிழிப்
பட்டானே யென்முன் பணிந்து. (ாஉடு)

சொல்லுதெலாஞ் சொல்லிவிழி தூக்கத் தமர்த்திகுரு
செல்லுமிடத் தேகியபின் சீடனுந்தான்-அல்லுபக
லின்றிச் சமாதி யிருந்ததனைத் தானடைந்தான்
இன்றுபோல் முத்திநிலை யிங்கு. (ாஉசு)

உபயமதசித்தாந்தவாதம்-முற்றிற்று.

படலம்-நூ-க்கு ஆ சுவி-நூசு.



திருச்சிற்றம்பலம்.

ச-வது.

சைவமதசித்தாந்தவாதம்.

அப்பா லொருசைவ னங்கவர்பால் வந்துமிகத்
தப்பாக வைய்யாநீர் சாதிப்பீர்-எப்போதும்
ஏனில்லை யாகு மிருக்கும் பதியாதி
யானிதனை யேற்க விசை. (க)

சைவமதந் தன்னைத் தலைநிறுத்த வல்லீர்காள்
சைவமத முண்மையெனல் சத்தியமே-சைவம்
சரியைகிரி யாயோக சத்தியஞா னத்தால்
தருவதுபோல் முத்தியிலை தான். (உ)

பசுபதி பாசப் பகுப்புண்மை யென்பீர்
நிசவடிவீ தென்றறிவை நீக்கி-வசமாகக் [பம்
காட்டுதிரோ லோரணுவுங் கண்டிவற்றை யுண்மையென்
றாட்டுவன்யா னின்னுமொன்று ணர்கு. (ங)

உளனிறைநீ யென்னி லொழிப்ப னொருவன்
உளனெக் காட்டு முலகேல்-உளனிற்
காணை வென்பன் கருதற்கு மெட்டானேற்
காணற்கேன் பேச்சென்பன் காண். (ச)

கண்டிலன்யா னேனுமுனங் கண்டவரின் சேருவென்னில்
உண்டிவனு மப்போது முண்மையெவன்-உண்மை
அனுதியெனி லென்ப னவனு மனுதி
அனுதியென லேதுண்மை யாம். (ஞ)

தப்பதுவென் முலவனும் தப்பிதுவென் பானலவோ
ஒப்பா ரொவருமெனி லோதாமே-இப்படியே
அன்புவரற் கேதென்னே யன்பாலென் கண்டதெவர்
இன்பமிகையென்னி னிது. (சு)

கருதுவதின் முரம்மமென்பன் கண்டுவந்த தல்ல
கருதுவதா லெங்ஙனிது காணும்-வருவதன்மேல்
கண்டுவந்த தென்பதெலாங் கட்டுரையேகாட்டென்பன்
கண்டிடுமன் பர்க்கென்னில் காண். (எ)

தற்பாவ மன்றியொன்றுந் தானே வாதென்பன்
கற்பாவ மோசகளங் தந்திடுமோ-அற்புதமேல்
இவ்வாறிங் குண்டாத லெல்லாஞ் சுபாவமென்பன்
எவ்வாறிங் கேற்பனெனி லின்று. (அ)

காகதாலி யம்போலுங் காணுமிவை யொத்ததென்பன்
ஆகவிங்ங னேதென்ன வாமென்னில்-எகுமென்றே
தன்கொள்கை வாதித்தல் சற்றுமல வேறென்ன
என்கண்டோ வேற்பனென்ப னிங்கு. (கூ)

காட்சியனு மானத்தாற் கட்டடங்கா தேனுமுளன்
சாட்சியாய் நின்றபரன் முனென்னில்-மாட்சியே
சின்னமவிச் சின்னமதிற் சேரா துணர்த்துதியேல்
இன்னதென வேற்றிடுவ னிங்கு. (ஙு)

எல்லாமா யல்லவுமா யேகமாய் நிற்பதெனில்
எல்லா மசத்துசட மேற்பதெவன்-அல்லதெனில்
சூனியமாம் வஸ்துநிலை சொல்லறியாய்க் கேன்வாதம்
ஏனெதிரி னின்றிடுவை யிங்கு. (ஙக)

ஏகமெனி லொன்றே விருக்கச் சுசாதிமுதல்
ஏகமெனிற் சிற்சடங்க ளேனுகும்-ஏகமல
என்ற லதுதள்ளி யேதுமய லாக்காட்டாய்
ஒன்றுமல பல்லவல வோது. (ஐஉ)

எத்வழியும் போகா திறுக்கிலென் செய்வன்
மதியாலென் செய்வன் மறுக்க விதிகாணேன்
என்றனே நோக்கி யிதுநிற்க மற்றொன்று
நன்றுகக் கேட்டி நயந்து. (ஐங)

உலகமதா லுண்டிறையென் றேதிடுவை மற்றோர்
கலிவலா னின்றென்பன் காண்டி-உலகஞ்
செயற்கையென்பை யன்றென்பன் செய்யுமோ தன்னே
இயற்கையென லேனேற்ப னிங்கு. (ஐச)

அணுசையோ கத்தா லகண்டமாக் கண்டிங்
கணுவாக மீண்டுமே யாகும்-அணுவுந்தான்
ஆயுங்கா னுட்பநுட்ப மாகியெட்டா தாகுமெனில்
மாயுஞ் செயற்கையெனல் வந்து. (ஐஞ)

தனக்கென் றுருவுளதாச் சற்றுமிலை யுண்டா
யெனக்குநீ காட்டிலன்றிங் கேற்பன்-அனைத்துமே
ஆக்கப் படுபொருளென் றுரேற்பர் நின்கொள்கை
வாக்கடங்கிக் கேட்டுய்தி வந்து. (ஐசு)

இல்லை யெதார்த்தமென்று மெங்கெங்குமாய்கினுந்தான்
எல்லாம்விகாரவுரு-விவ்வுருவால்-வல்ல
படைப்பா னுளனென்றல் பாமாரின்மிக்கதெவன்
அடைக்குங்கல் லிவ்வுத்தி யாம். (ஐஎ)

எல்லாஞ் சிவமயமே யென்சொலினு மென்றுணைத்தாய்
எல்லாம் பிரமமய மென்றுலென்-சொல்லாதே
நாவமெனி னோராய் பரியாய சொல்லெனவும்
ஆவதென்ன வுன்னே டகல். (ஙஅ)

உருவருவ முள்ளதில தொன்றுபல வன்றே [பேல்
முருகனெனச் சொன்னதெவன் முன்னோர்-தெரிந்தனை
என்முன் வழக்கிடலே னெங்கேநீ சைவனெனல்
என்கண்டோ வீன்பிரளி யேகு. (ஙசு)

உபாதிதுணஞ் செய்கை யுயர்பரம தென்பீர்
அபாவமிவை யுண்மையுரு வாமோ-உபாதிமுதல்
போக்கறியார்க் கென்னசுகம் புன்னியர்போற் செய்தி
நீக்குவதென் றேகவலே நின்று. [டினும் (உ஧)

கண்ணபிரா னர்ச்சுனற்குக் காட்டுண்மை யொன்றேமுக்
கண்ணனன்றுநால்வர்க்குக் காட்டுண்மை-எண்ணுங்கால்
எங்கே மகபேத மேனிழிந்து பேதிப்பீர்
இங்குணர்ந்தே னுஞ்சிறுமை யின்று. (உக)

வழக்கறுத்திங் கின்னதென வஸ்துநிலே தேரும்
உழைப்பிதுவோ நிட்டையன்றி யோராய்-கழுப்பகற்றி
எட்டரிதிங் கேனு மினியொன்று கூறக்கேள்
நட்டெங்கு காடாம னன்கு. (உஉ)

இந்தநீ யாரென்ன வென்றுரைத்தான் பண்டிதன்யான்
இந்தநிலே கல்வியென வீங்கெவரும்-வந்திக்கும்.
ஆசான்யா னென்று னதுவோ குருத்துவங்கான்
ஏசா வமிசன்யா னிங்கு. (உங)

வமிசமல னீயென்ன மாவருணத் தேன்யான்
உமதுமொழி யேயன்றி யுண்டோ-உமதுடலில்
யான்சங்கி யாசியென்ற னெங்கேவே டத்தன்றி
யான்சொல்வ னுண்மையினி யிங்கு. (உச)

மூருகையர் பிள்ளையென்ரு ன்முற்றுணர்ந்தோய்கேளிங்
கொருவனே தந்தைமக னும்முட்-கிருங்கணவன்
மூதாதை பேரனெடு முன்பின்ன னென்றிருப்ப
னீதாகா துன்னுள்ளமை யிங்கு. (உடு)

ஆறுமுகன் யானென்ரு றுறவத னங்காட்டில்
ஆறுமுக னுகுமென வையாகேள்-தேறீர்
இடுகுறியா மென்ரு னிஃதனர்த்த மாமே
யிடுகுறிக்கு வத்துவின்றே யிங்கு. (உசு)

இவ்வுருவா மென்னி லெதுகுட்டை நெட்டையதோ
இவ்வகையெல் லாங்குணமா மீதலவே-செவ்விதாக்
கண்டுணரீ யென்னக் கடுங்கோபத் தாலிதென்ரு ன்
உண்டுபெயர் மார்பிதற்கென் ரோர். (உள)

இப்படியே யெவ்வுறுப்பு மிப்பெயர்போ லேற்பதனுல்
இப்பொருளென் றீக்குணாத்தி யென்னவே-செப்பினுன்
ஐந்தறிவு நானென் றமையுமே சொந்தபெயர்
எந்தவுரு வீயா மினி. (உஎ)

வாய்வுரு னென்னின் மறந்துறங்கு நித்திரையில்
வாய்விரும்து மோர்தலிலே மாருதிங்-காய்கிலைகொல்
மூர்ச்சையினு மோராமை மூடமதா னீயன்று
தேர்ச்சியிலார் போன்மொழியேல் தின்று. (உசு)

உடல்காவ் லன்றி யுணர்வுக்கே யல்ல
விடுமொழியீ தென்ன விழைந்திங் - கடுமனமே
யானென்னி லென்னபொரு ளீதுசட சித்தென்னில்
உளனுருவி லெங்கே யுறும் (சுவ)

நெஞ்சதனி லென்னி னினைவு கனவுகளில்
நெஞ்சிடத்திற் காண்பவைகணின்றலவே - நிஞ்சித்தும்
ஓராதென் னிற்கவதிங் குள்ளதுவோ வில்லதுவோ
போராது நிற்பதனும் பேசு. (சுக)

உள்ளதெனிற் கற்பிதமோ வுண்மையோ போதன்னோ
உள்ளதனிற் கண்டுகொலோ வூரார்கள்-விள்ளும்
மொழிப்பழக்க மோவெழுத்தோ மூடர்போம் சொல்லே
விழித்துணர்ந்தீ தென்று விளம்பு. [ல் (சுஉ)

இல்லதெனிற் போக்குவரத் தேதிச்சை யாதிவரம்
கில்லையே திங்குலைவ தேதின்னும்-எல்லையின்றி
யோர்கணத்திற் பல்லுலகி லோடித் திரும்புவதே
தோர்ந்தமொழி யையமற வுற்று. (சுஙு)

இருவழியுஞ் சொல்லா திருக்க மொழிந்தீர்
ஒருவகையாற் சத்தசத்தென் றோர்வன்-றிரிபின்றி
யென்னிற் குணமாகு மெந்தமுதற் கோவென்ன
அன்னதறி யேனென்று னங்கு. (சுச)

என்போலு முன்பா லிருக்குநிலை யீதன்றே
உன்செயலே கண்டிதென்றிங் கோர்ந்துசொலல்-என்செ
என்னவெகு நோமலை வின்றித் தனித்தங்கே [யலேன்
யுன்னியறி யேனென்று னுற்று. (சுரு)

சரியையகிரி யாயோகந் தப்பென்று ஞானஞ்
சரியென்று சைவத் தலைவர்-தெரிவாகச்
சொன்னதெவ னம்மதத்தர் சொன்னதெவ னூற்குரை
அன்னவரி னென்கண்டூ ராய்ந்து. [தான் (ரூசு)

சரியையகிரி யாயோகந் தந்திரமே யன்றிச்
சரியல்ல ஞானம்போற் சற்றுந்-தெரிந்தவர்போல்
ஞானமல்ல வற்றையெலா ஞானமென்பி னென்மடமை
ஞானியெனப் பேரிட்டு நன்கு. (ரூள)

எட்டிலரன் மாலருக னேசல்லர் வர்தியெனக்
காட்டுவதி லென்னுயர்வு காணுமே-நாட்டுவதென்
னெம்மதமே யுண்மையென வெங்கும் திரிசமயேல்
எம்மதமுங் கம்பிதமே யிங்கு. (ரூஅ)

துவிதம் விசிட்டாத் துவிதமத் வைதம்
அவசாமே யுண்மையினை யன்று-இவைமுறையே
ஒன்றினென் றொன்றதிக முண்மையுரு வாதலிங்
இன்றபிமா னங்கொள்ளீ ரிங்கு. (ரூசு)

பூசைசெய் பேர்க்கேனும் பூசிக்கப் பூசிக்க
ஆசை யணுவணுவா வாங்கோங்கும் பூசை
மகிமையன்று கண்டிடுவை மாறுது செய்தி
மகிமைமுன் கண்டார்போல் வந்து. (சமி)

சிவசிவவென் றென்றுஞ் செபித்தாலு மென்ன
சிவமெனுஞ்சொற் காழமதைத் தோரா-தவமாகக்
கோரணையே நுங்கோலங் கும்பிடைக் கேட்டறியீர்
ஓருமி னெம்மொழியை யும்று. (சக)

அரகரா சம்போவென் றன்புளர்போற் காட்டி
இருகணீர் சோர வியம்பித்-திருநீற்றை
அங்கமெலாம் பூசி லகலுமோ சற்றேனும்
அங்கலிக்க பேத மகம். (சஉ)

திருமேனி தன்னைச் சிவபழம்போற் காட்டி
ஒருவா மயக்க மொழியீர்-பெருவாயால்
மூற்றுணர்ந்தார் போற்பேசி முன்னேன் வழக்கறுக்கீர்
கற்றுணர்ந்து மென்னபயன் காண். (சங)

சத்தா யசத்தாய்ச் சதசத்தாய் நின்றதிது
சத்தாதி யிம்மூன்றுந் தானுமல-பித்தாகேள்
எல்லா நினைப்புமறப் பிம்மனதின் சேட்டையதே
எல்லாத் தொழிலன் றிது. (சச)

விழிப்பிற் சகத்தாய் விழிப்பொழிவி லன்றுய்
இழித்தகைய தாயன்று யெங்குஞ்-செழித்திருத்தல்
இம்மனமே யற்பமதா யெண்ணு திதைக்காணில்
எம்மயலு மாங்கே யிறும். (சடு)

நினைப்பு மறப்பொழித்து நில்லென்ன வாங்கே
அனைத்தாக நிற்பதெங்ங னேயா-இனைத்தொழித்தால்
என்செயலே தென்னி னினையநின்றி நிற்றலுந்தான்
உன்செயலே கண்டுசொல் லுற்று. (சசு)

நிலைக்கவிலை யென்னி னெடுவனத்தி னல்லோர்
நிலைக்கவலை வோசெய்த னிட்டை-நிலைக்குமட்டும்
நீங்காது நிட்டையினி னின்றறைதி யென்றுரைக்க
நீங்காது நின்று னிலை. (சஎ)

நின்றுநெடு நாள்வருந்தி நேடியிவர் பாற் சென்று
நின்றநிலை யின்குறிப்பை நேயமோடங்-கன்றறைய
அப்பாலென் னென்ன வளவிலாச் சோதியென்றுன்
அப்பாலென் கண்டறைதி யங்கு. (சஅ)

நித்தரங்கம் போல நிறைஞான பூரணமே
எத்தடையு மின்றி யிலகுவதே-அத்தனை
ஐயா வருமணியே யண்ணலே யென்றேத்தி
மெய்யாவுந் தோயநிலம் வீழ்ந்து. (சக)

எழுந்து வலமிடம்வந் தேத்தியெனை யிங்கே
யுழுந்தருளும் போழ்தி லுணர்த்த-எழுந்தருளி
வந்தகுரு வேயொன்றும் மாறுகக் கண்டிலன்யான்
அந்தமுடி வற்றவொளி யாம். (கூ)

பசுபதி பாசப் பகுப்பெங்குங் காணேன்
நிசவனுபூ திக்தெளிவே நீங்கா-தசைவின்றி
நின்ற கதுவாக நிற்கின்றே னென்னகுறை
யென்றடியில் வீழ்ந்தெழுந்தா னிங்கு. (கூ)

ஆதார நானே யனைத்தினுக்கு மல்லநான்
ஆதார வாதேய மாமிரண்டுஞ்-சேதார
மாந்தகைய தாலிங் கறையவிட மின்றியுப
சாந்தமதா நின்றேன் றனித்து. (கூ)

நினைக்கிற் செகத்தரம் நினைப்பொழிக்கிற் பாழாம்
நினைப்புமறப் பிவ்விரண்டு நீக்கித்-தனித்திருந்து
கண்டேன் மனநிலையைக் காணுமறி வின்ஸ்புரிப்பாக்
கண்டறியார் வேறென்பர் கற்று. (கூ)

அறிவே செகமா மறிவே பதியாம்
அறிவே பசுவாகு மாயின்-அறிவாக
ஆவதிலுற் பின்னு மணுவளவு மையமிலை
யாவர்தான் வெல்வா னெனை. (நுச)

யானே படமாகு மெவ்வுலகப் பாவைகட்கும்
யானேநீ ருப்புலக மென்றுணர்ந்தேன்-யானே
அறிவுருவ மேயன்றி யன்னியமே யல்ல
இறையாணை மெய்யா மிது. (நுரு)

பாச மயலென்பர் பாரா ரறிவினிலை
ஈசனிலை சொல்வதவ னென்னென்பன்-ஈசனுக்கிங்
கன்பரோ யாயினுமென் னுந்தன் னிலைகற்றுத்
தன்சொரூபங் காணுர்க டாம். (நுசு)

வேதாந்த மென்றிருந்தேன் வேறுஞ்சித் தாந்தத்தை
வேதாந்த மல்லவே மெய்யாக-நாதாந்தங்
கண்ட தெரிசனத்துங் கட்டுரைப்பார் மூன்றெனவே
கண்டவுண்மை யெங்காகுங் காண். (நுஎ)

மண்ணுறம் கடபடம்போல் வத்துவன்றி யாதுமிலை
நிண்ணமதா யான்சொல்வன் றேர்ந்ததனுல்-கண்ணிலர்
மூன்று மனுதியெனல் முற்றுமுணர்ந் தாரன்று [போல்
சான்றுரைமை யன்றியுண்டோ தான். (நுஅ)

சித்தசுத்திக் கேற்றதுவே சித்தாந்தத் துண்மைநிலை
மூத்தியதற் கேற்றநிலை மூதுணர்வைச்-சத்தியமாக்
கண்டவே தாந்தநிலை காட்சியெலாந் தானுகுங்
கண்டவரே யேற்பரிதைக் கண்டு. (நுசு)

எல்லாஞ்சின் மாத்திரமா வீங்கறியப் பாவனேயேன்
எல்லாஞ்சின் மாத்திரமா வீங்கிருக்க-எல்லாஞ்
சலமாகப் பாவிப்பேன் முக்குயலே யாதி
சலமயம தாயிருக்கத் தான். (கூ ம)

எப்பொருளுங் காட்டுவென்யா னீங்கே யறிவுருவா
யெப்படிதான் றோற்றிடினு மீதுண்மை-தப்பின்றி
யீதெல்லா நின்னருளே யென்றடியில்வீழ்ந்திறைஞ்சி
யேதுங் குறைவுமிலை யிங்கு. (கூ க)

என்ன விறைவாழ்த்தி யேகத் தனதிடத்தில்
அன்னவனு நிர்விகற்ப மாகியே-சொன்னநிலை
யாகித்தா னைபின்ன ரப்பாலே வைணவத்தை
யூகத்துக் கொத்தறைது முற்று. (கூ உ)

சைவமதம் வாழி தனைநிறுத்தி னர்வாழி
சைவமதந் தன்னிலுண்மை தங்கியதால்-சைவராய்
நின்றுமறியார்வாழ்ந்தென் றேயமதைக் கண்டுணர்ந்தே
என்றுமிது வாழ்ந்திடுக வே. [ன்()

சைவமதசித்தாந்தவாதம்.

முற்றிற்று.

படலம்-ச-க்கு ஆ சுவி-டகூகூ.



ஸ்ரீ

ஸ்ரீராமானுஜாயநமஹ.

இ-வது.

வைணவமதநிராகரணம்.

வைணவநிற் காக்கத்தில் வல்லான்வங் கையாளீர்
வைணவத்தை யும்பொய்யா வாதிப்பீர்-வைணவமே
முக்கியமீ தெம்மதத்து முன்னோர்க ளேற்றிருக்க
எக்கருத்தா லேலீ ரிதை. (க)

எவ்வுயிருக் கெப்பிறப்பிங் கீதுல்லை யென்றுணாக்கில்
அவ்வுயிருக் கிம்மதமென் றுங்கறைதுட்-அவ்வகைய
தில்லென்னி லீதுமிலை யிப்போதிங் கேதுண்மை
சொல்லென்று கேட்கத் துணிந்து. (உ)

எம்மதமே யுண்மையெனி னிவ்வா றெவரொருந்
தம்மதமே யுண்மையெனச் சாதிப்பர்-அம்மர்
விதுவாமோ வென்னி னிதுவாமோ வென்பர்
இதுவேயறுதி யெனின். (ங)

இதுவேயறுதியதா மென்றெவருஞ் சொல்வர்
இதுவீசன் சொல்லென்னி லீதும்-அதுபோலாம்
என்பர் கெடுவகொனி னிவ்வாறே யெவ்வெவரும்
என்பரவ ரற்பகொனி னிங்கு. (ச)

அவருமித போற்சொல்வ ராதலினு லொன்றும்
அவமாயி னீயுளையே லப்பா-தவறுவரும்
என்ன வவனுந்தா னெம்பெருமான் பள்ளிகொளல்
என்ன கலட்ட காட்சி யிது. (ஞ)

இதுபோல்வை குத்தத்தி லென்னவென்று சொல்வன்
முதுமறையு ஙாகூசு முன்னே-யிதுகானை
இந்திரனுங் கண்ணு யிரம்பெற்று னற்பமதா
யெந்தவகைச் சொல்வீ ரினி. (கூ)

எம்மதத்த ருஞ்சொல்வ ரிவ்வாறே தத்தமிறை
அம்மா விதென்னவென வையாகேள்-எம்மாள்வார்
கோவிற் பிரசாதங் கொள்ளைகொள்ளை யாக்கிடைக்கும்
யாவருக்கு மின்னதுபோ லில். (எ)

திண்டிக்கே கும்பிடாத் தீர்ப்பாயிற் றேதும்மால்
திண்டிக்குப் பின்னன்றே சேர்பதவி-கண்டிலைகொல்
சோற்றமூட்டை யென்றடலைச் சோதிக்கி லென்றுனை
ஆற்றுபசிக் கேகோயி லாம். [க்கில்(அ)

இம்மைபோ லெம்மானு மீயு மறுமைபலன்
இம்மையே சாட்சியதா மீங்கடைந்தார்க்-கெம்மையினு
மென்னி லிலையோ வெவர்மதத்துஞ் செல்வமயம்
இன்னதுபோ லாகா தெளின். (கூ)

இதனினுங் கோடிமடங் கெவ்வெவர்தே யத்தும்
இதலேடிங் காள்கையுமுன் டென்ன-இதுபோதும்
என்னிட்ட மென்னி னிதுமூடர் சம்மதத்துக்
கென்னப்பின் னிட்டதுவோ விங்கு. (ஙி)

இட்டபடி யான்மாக்க ளீங்குழல வோவேதம்
கட்டம் விதித்தமுறை சாற்றுதியேல்-இட்டபடி
எங்கிருப்பை யெக்கலையு மீதுக்கோ கற்றுணர்தல்
இங்கெதினு ணைமுனக் கில். (கக)

னதையெம்பி ரானென்பை யீதென்னிற் கல்லே
இதைக்கொண்டு பாவிப்ப தென்னிற்-கதையாகும்
பாவிப்பாற் றோடமென்னே பாவமுயிர் கற்பிதமே
யாவதுவே றில்லைவழு யாம். (கஉ)

நினைவளவே சாக்கிரந்தா னின்பா வனையும்
நினைவளவே யன்றியிலை நிகான் - நினைவதுவும்
காணுந் திரிசயமாக் காணுமிது போற்பாவம்
காணுமோ வோர்நிமிடங் கான். (கஊ)

தோற்றி மறைவதினும் சொல்லேற் பரமென்று
தோற்றுவதெல் லாம்பொய்யே சொச்சமன்று-சாற்றேல்
இதுதெய்வ மென்றினீ யென்னவவன் சிறி
யெதுவோநின் றெய்வமென்றுனிங்கு. (கச)

சுட்டில் விடயமதாஞ் சுட்டொழிக்கிற் சூனியமாம்
விட்டிரண்டும் நிற்கநிற்க மெய்யாகப்-பட்டவருந்
தத்தளவாக் காணுஞ் சதோதயமாய் நின்றவரி
இத்திறத்த தென்றுணர்தி யிங்கு. (கடு)

முருகன் சடகோபர் முன்னுரைத்த தீர்ப்பில்
பெரிது சிறி தென்கண்டாய் பேசேல்-ஒருநிலையே
கண்டால் வழக்கேது கண்டபடி பேதிக்கேல்
தொண்டர்போற் காட்டித் தொடர்ந்து (கஎ)

ஆண்டா னடிமையகற்றுநெறி யிதாகும்
வேண்டா மெமக்கென்னின் மெய்யாகும்-ஆண்டான்
நிலைபோ லடிமை நிலையும் வீணுகக்
கலைவதிலா யிசொல்லேல்கடிந்து. (கஏ)

என்ன வவனு மிதுவா னுடலென்றான்.
என்னதென்று சொல்பவெலா மீங்கன்று-நின்னதரு
வாதலினைக் கண்டனைதி யப்பா வெனச்சொல்ல
ஏதுமறி யேனென்று னிங்கு. (கஅ).

அறியேனென் றானுமீ யன்றே விருக்க
அறியே னெனையென்ன லாமோ-பிறிதலையே
ஆய்ந்துணர்ந்து சொல்லென்ன வையோ வெனைவிடை
சாய்ந்தாலு மீர்விடுர் தான். [ன்று(கசு)

எட்டவறி யாததினு லில்லாமம் போயிற்றே.
எட்டிற் சகுணமதா மீதேற்கும்-எட்டப்
படாததினு னிர்க்குணமாம் பாராய்நீ யென்ன
எடேனென்று னிம்மொழியை யிங்கு. (உம)

யாதினு லென்ன விசைக்கிற் சகுணத்தை
யீதேற்ப னென்று னிதன்விபரம் - ஓதியபின்
னின்னதெலாஞ் சம்மதமே யின்னதற்கு மாறுப
ஆன்னகுணம் யாதெனவே யன்று. (உக)

இன்னதின்ன தென்றுரைக்க வீதேலோமென்றுரைத்தா
ஆன்னதெதி னுலென்ன வையாகேள் - இன்ன [ன்
சுகுணத்தை நீக்கிலது சூனியமாக் காணும்
சுகுணமே காட்டுந் துணிந்து (உஉ)

அல்லவினை யன்றுந் கசத்தாதி சொன்னமறை
அல்லவுல கென்றுந் கவற்றெதிருஞ்-சொல்லுமலோ
இன்ன தவசாரமே யிதுன்மை யாமோதான்
அன்னவஸ்து நிர்க்குணமே யாம் (உங)

தர்க்குணமேயில்லெனற்குச் சொல்லிற்பே லேதுதான்
நிர்க்குணமென் றோராதென் னீசாயா - நிர்க்குணத்துக்
கேகருத்த மாயி னிதுபாச மல்லவென
ஓதியதென் சத்தாதி யோர்ந்து. (உச)

கூறியதே கூறலெனுங் குற்றமதா லோராதென்
கூறினேம் வேறுக்கிக் குற்றத்தில் - தேறிலைகொல்
மூன்றுருவும் லக்கணையில் முன்லக் கணையார்த்தம்
சான்றோர்க் கிதுமுறையோ தான். (உரு)

சுகுணங் குறியாச் சுயவடிவங் காணில்
சுகுணக் குறியுஞ் சொரூவும் - சுகுணநிலை
நிர்க்குணம தாக்கி நிகரின்றித் தானுக்கும்
நிர்க்குணமே வஸ்து நிலை. (உசு)

சுகுணமு நிர்க்குணமுந் தோயாது தோய்ந்த
மகிமையதா நிற்பதே வஸ்து - உகந்தறிய
விட்டுவிடா லக்கணையை வேதம் விதித்ததுதான்
மட்டிகள்போற் சொல்லேல் மறுத்து (உள)

அறிந்தார்போற் பேசே லதுநிற்க நீகண்
டறியிவ் வுலகநிலை யப்பா - குறிகொள்ளக்
காட்டுதியே லுண்மையதாங் கண்டுகாக்கு நின்வசனம்
ஏட்டறிவா லேனு மிசை. (உஅ)

என்ன வவனு மிதுவுலக மென்றாக்க
இன்னதெனச் சுட்டியுரை யென்னிவே-அன்னதுதான்
பூதப் பவுதிகமே பூரணமா நிற்பதிதென்
றோதவறி லொன்றதனை யோது. (உக)

அதிலொன்று மண்ணிதெனி லல்லவெனை துண்ணை
யிதுவென்று யானேற்க வீங்கே - மெதுவாகச்
சொல்லென்ன வன்னேனுஞ் சொல்லிசொல்லிக் கை
இல்லையென வுண்மையுரு விங்கு. [சோர்ந்தான்()

வெளியிலா வோரணுவும் வேறுக வின்றுல்
வெளியன்றி யுண்டென்னேம் வேறு-வெளியோடு
நான்கு மகத்தாக நன்னுவதா லின்றென்னேம்
நான்மொழிவ துண்மையெவ னன்கு. (கக)

வெளிஞட்டத் தெல்லாம் வெளிமயமாக் காணும்
வெளிநாட்ட நீக்கத்து வேறுய் - எளிதறிதி
நாட்டபே தத்தளவாநன்னுமுல கெங்ஙனிதை
நாட்டுது முண்மையென நன்கு (கஉ)

நாட்ட மிருவழியு நாட்டாதிங் கேசமமா
நாட்டமது பெற்றறைதி நாயேற்பம் - எட்டறிவால்
ஆகா திதுசொல்ல வாராலு மீதுண்மை
ஏகாது சொல்லென்ன விங்கு. (கங)

ஓதியக்கன் ணுங்கவனு மோடத் தலைப்பட்டான்
வேதியனே யீதழகோ மேலோர்க்கு - நீதியே
யன்றி யமைகிலன்யா னேயோவென் போதிப்பீர்
இன்றுலகில் போதகரா யிங்கு: (கச)

என்றுனைத்தங் கேளாம லேகித்தன் னூர்சென்று
நன்றுணர்ந்த சாஸ்திரிபா லுடியே-அன்றவர்க்கங்
கிதெல்லாஞ் சொல்ல வெமக்குவலி யில்லெனவே
யோதவவ னுந்திகைத்தா னுற்று. [(கஞ)

வேங்கடேச ஜீர்பால் விளைந்தோடி நம்மதந்தான்
சங்கடங்கொண் டேகத் தவிக்குதே-அங்கொருவர்
ஞாயத்தால் யூகத்தா ஞமுமறியா ரசத்தாம்
காயத்தை யேன்சுமப்போங் கண்டு (சுசு)

அவருந்தன் பட்டத் தலங்காரம் போர்த்துச்
சிவிகையே றிக்கடிதிற் சென்றங்-கவர்கண்டு
சாரமற்ற தாவிங்கே சாற்றுவதென் வைணவத்தை
ஓரயா னிங்கே யுளை. (சுஎ)

இன்னவஸ்தை நாமென் றிருக்குமே லுன்மையதா
வின்னமத நாமென் றிருப்பமே-யின்னதொடு
நானெனற்கிச் சென்மமென நாட்டுதியேலி ன்னமதம்
நானெனற்கிங் காகு நயந்து. (சுஅ)

இல்லாத கேள்வியெலா மீங்கிசைத்தல் ஞாயமதோ
இல்லா தனுபவமோ விம்மொழிகள்- இல்லாதன்
றென்னி லிதுவுமிலாதன்று கண்டமைதி
யுன்னைவிட சொல்வாரா ருண்டு (சுகூ)

இப்படிசொன் னுல்விடதா னெப்படியான் சொல்வ
தெப்படியுங் கூடாதே யேட்டறிவால்-தப்புவரும் [னை
ஆதலிறைக் கௌரவமா யப்பாலே போவென்ன
ஓதென்று ரற்பமதா வொன்று. (சுஏ)

எதுமுன்று தோற்றுமுயிர்க் கெவ்வவத்தை தோறும்
மதியன்றி யில்லையெலின் வாய்மை-மதியன்றி
எந்தமத மெவ்வுயிர்க்காம் யார்க்கு மதியில்லை
வந்தவழி செல்லுதி வாய். (சுக)

கண்டிலேயோ ஜீயர்நான் கண்டார் வணங்குவார்
கண்டபடி வைவதெவன் காணென்று-விண்ட
மதியினும் சித்துவித்தை மானதமும் பேதித்
ததிசில காட்டினை ரங்கு. (சஉ)

உலகமெலா மேல்கீ ழுருண்டாலு மஞ்சோம்
அலகில் துயரிழைக்கி லஞ்சோம்-நிலைகலங்கச்
செய்யினு மஞ்சோமே ஜீயரோ வந்தவழி
பையவே போகும் பரிந்து. (சஙு)

என்றுரைக்கச் சீறி யெழுந்து விசிட்டாத்துவிதம்
நன்றறியாய் தூஷித்தல் ஞாயமோ-இன்றென்றூர்
சங்கற்ப மன்றிச் சகநிலைமை காட்டென்ன
சங்கற்ப மாமோ சகம். (சச)

என்ன மணுவேனு மின்றித் தரும்பி தெனத்
தின்னமதாக் காட்டுதியேற் றீவென்ன-என்னைத்
துணைக்கருவி யன்றியெங்ஙன் சொல்லவெவர்க் காகும்
துணைக்கருவி யாகாத் தரும்பு. (சடு)

என்னமன்றி வேறுக வீங்கறியக் காட்டென்ன
கன்னிலதா லின்றுமோ காணுலகம் என்னிலைகொல்
என்னிற் றரும்புந்தா னென்னபொருள் சொல்லென்ன
அன்னதுரு வாமென்று ரங்கு. (சசு)

விகாரமோ வுண்மையோ மேவுமித வென்ன
விகாரமே யென்னிலெது மேவும்-விகாரமதா
வென்னப் பிரிதிலெனி னீதியல்போ வன்றுசொல்
லென்னவியல் பேயென்று ரங்கு. (சஎ)

இயல்பாயின் வேறொன்று லேன்மாறுமையா
செயலாயி னுர்செய்தார் செப்பில்-செயலென்பம்
என்னிலுரு மாறுவதா லிவ்வுணுவின் சையோகம்
இன்னவழியாக்காட்டிற் றிங்கு. (சஅ)

இப்படியிங் காவதிலு லீதியல்யா மென்றுணாக்கில்
இப்படிசொன் னுலீச னில்லெனற்காட்-தப்பிலையே
நாஸ்திகனீ யென்றற்கு நான்ஜீய ராமென்றுர்
ஆஸ்திகத்துக் கெல்லா மடி. (சசு)

உயிர்செயலன் றுதலிலு லோதினுர் மேலோர்
இயற்கையென மாறுக விங்கே-செயற்கைக்கு
இக்கருத்தை யோராதென் னென்னச் செயற்கை யென்
இக்கருத்தைக் கேட்டபின் னிங்கு. (ருர் (ருல)

மண்ணின் விகாரமதால் மண்ணுருவைத் தள்ளியெங்
மண்ணுதரும் பாக வலியுண்டோ-மண்ணுக்கிங் (கே
கில்லேனு மென்னபொரு ளிங்குருவாக் காணுதெனில்
நல்லாய்கே ளென்னதினை நன்கு. (ருக)

உருட்சி மீட்சி யாதியிவை யோர்முதலின் பண்பே
மருட்சியா லொன்றையொன் றுவாயால்-பரிட்சையிலார்
சொல்வதுபோற் சொல்லேல் சொரூபமெலாந் தோற்ற
சொல்வதனைக் கல்லட்றிந்து சொல். (டதே(ருஉ)

குணங்குணியா காதென்னிற் கோதிலோய் கண்டு
குணிமாத் திரமிதென்று கூறுய்-அணுவேனுங்
குற்றமின்றி யென்னவவன் கூறவிட மில்லையென்றுன்
உற்றதுமண் ணேயிங் குறும். (ருக)

குணங்கா ரணமல்ல கூறும் தருப்பு
கணித்தபெயர் வேறதனும் கண்டு-இணக்கமுறச்
சொல்லென்ன மட்குத் தரும்பென்னில் காரியமிங்
கில்லைபொருள் வேறு யிதில். (நுச)

தனித்தித வென்றற்குத் தடைவருவ தாலே (கென்
தனித்தெங்ஙன் சொல்வனெனிற் முக்கோய்-தனித்திதற்
றுள்ளபெயர் வீணுமே லோதுகின்ற வெப்பொருட்கும்
உள்ளபெயர் வீணு யுறும். (நுந)

இருக்குதெனிற் காட்டென்றீ ரில்லையெனி லுண்டாய்
இருந்து விவகரிக்க வீங்குறுமோ-சரங்கென்றீர்
என்செய்வ னென்னி லெவருமிலை சொல்லவலார்
நின்னிலும் தீர்ப்புசெய நின்று. (நுசு)

முன்னுண்டாய்ப் பின்னின்றுய் முற்று முடியு மெனில்
இன்னவா றுபதெதிங் கீதன்மேல் அன்னதனை
யாய்ந்துணர்ந்து சொல்லென்ன வையா நினைவென்னில்
ஆய்ந்துரா னேற்க வுறை. (நுஎ)

தரும்பெனற்குச் சொற்பொருடான் சோதித்துங் கா
தரும்பிங்கே தோற்றமுஞ் சொல்லா-யிருந்தேனேன்
உண்மையாத் தோற்றுவது முண்டா யறிவதுவும்
உண்மை நினைவா யுறும். (நுஅ)

நினைவே தருப்பதனு னீங்கிற்றே யன்றுய்
நினைவன்றி யுண்டில்லை மேரோ-யினைபதெனக்
கண்டறியே னுதலினுங் கட்டுரைத்தே னின்னதென
வில்லுரைக்கக் கேட்டிவரு மேல். (நுசு)

தூல்வுரு வார்துரும்பு சோதிக்கச் சென்றதங்கே
தூலவுரு வுண்டாகிற் சொல்லலாம்-தூலமாத்
தோற்றல் மனதன்றித் தூலவுரு வில்லென்னில்
தோற்றுமனங் கண்டாய்ந்து சொல். (சுய)

ம்னத்துரும்பும் போயிற்றே மாறுது நோக்க
மனதும்பா ழாக்காணு மாறி-மனதென்னும்
பேருமிலை யூருமிலை பின்னுமிலை முன்னுமிலை
யாருமிலை நானுமிலை யங்கு. (சுக)

அகலாதங் கேநின் றறிந்துசொல் லென்ன்
அகன்றெளிருஞ் சோதியெங்கு மையா-புகன்றிடநான்
அன்னியமல் லாததினு லங்கிலைமை சொல்லறியேன்
என்னவிழுந் தானடியி லிங்கு. (சுஉ)

என்னகத்தை யெல்லா மிமைப்போதி லேகெடுத்திங்
கென்னே விளக்கியதற் கென்செய்வேன்-அன்னையே
என்று வலமிடம்வந் தேத்திப் பணிந்தெழுந்து
நின்றுருகி னேன்சோ நீர். (சுங)

ஆண்டா னடிமைநிலை யையாவறைதி யென
ஆண்டவனே யொன்றுமறி யேனே-யீண்டுநான்
உன்னருளாற் சோதியன்றி யொப்பிலா யென்சொல்வன்
என்னதவப் பயனே விங்கு. (சுச)

நம்மாள்வார் கண்ணன்மொழிகன்னிலையை யின்றுணர்ந்
தெம்மானே நான்குருவா யிங்கழிந்தேன்-சும்மா [தேன்
பெருமைக்கே யல்லாற் பெறும்பயனென் றில்லேன்
அருமையனே யப்பாலென் றங்கு. (சுசு)

விழிக்கி லுலகா விளக்குதே யென்னில்
விழிப்பொளியா நிற்கவிங்கு மேவில்-பழிப்பின்றிச்
சின்மாத் திரமாகுஞ் சிந்தித்துக் காணென்ன
சின்மாத் திரமெல்லுஞ் சேர்ந்து. (சுசு)

இன்னுமைய முண்டாயி னீங்கறைதி யென்னவவர்.
என்னபடி யானிருக்க வீங்கென்னில்-தன்னே
மறவாது நில்லென்ன மாறுது தன்னில்
இறவா திறந்தா னினி. (சுஎ)

வைணவம் வாழி வகுத்தோ ரடிவாழி
வைணவத்தி லேயுண்மை மன்னியதால்-வைணவரார்ய்
நின்றுமறி யாரிருந்தென் னேசாடி யார்வாழி
என்றுமென் னுள்ளத் திருந்து. (சுஅ)

சுருதியுத்தி யோடு சுவானுபவ மொகக்ச்
சரியாகக் காட்டுமதந் தானிவ்-விருமதமே
பல்லாண்டு வாழி பரிபாகர்க் கின்பநீலை
யுல்லையினி னல்க வுவந்து. (சுக)

வைணவமதசித்தாந்தவாதம் - முற்றிற்று
படலம்-ரு - க்கு - ஆ - கவி - சசுஅ



வ

திருச்சிற்றம்பலம்.

சுவது

சாத்தேயமதசித்தாந்தவாதம்.

சாத்தேயன் வந்து தனித்தெதிரி னின்றையா
சாத்தேய மும்பொய்யாச் சாற்றுவதென்-சாத்தேயம்
முத்திக்கு வித்தாகு மூதுலைர்ந்தோர் கொள்கையிது
சத்திமய மாதலினுற் முன். (க)

சத்திவயப்படார் தாமெங்கு மில்லையெனின்
சத்தியெனற்கருத்தஞ் சாற்றென்ன-சத்திக்கு
வல்லமையென் பாரில் வலிமையையே பெண்ணுக்கி
வல்லபையென் றேதொழுவோம் வந்து. (உ)

ஒன்றையொன்றுக் கொண்டதென வுன்சொல்லே காட்டு
இன்றறைதுங்கற்பனையென்றென்னேயம்-மன்றுய்[வதால்
முதற்கோண லாயிற்றே முற்றுமென்ன வென்பன்
இதற்கென்ன சொல்வா யினி. (ங)

மாதர் வசத்தில் மனங்குழம்பி யாடவர்கள்
வது நிலையறியா தேங்கியே-மோதும்
பிறவிக் கடலிற் பெயரவகை யில்லார்
அறிகிலையோ வையா வதை. (ச)

அ

அப்பா வதுமெய்யே யாடலர்பால் மோகித்துத்
தப்பாது சிந்தையவர் தாமாகி-யெப்போதும்
பித்தாவார்க் கெச்சத்தி பேதாயாண் சத்தியுண்டோ
எத்தாற் படித்தையோ விங்கு. (ரு)

சத்தியே தேவாகச் சாதித்த லெங்கள்மதம்
சத்தனையே தேவாகச் சாதிப்பர்-மற்றமதம்
சத்தியே முக்கியமேம் சத்தனே யென்பரவர்
சத்தியின் வல்லமைகேள் சற்று. (சூ)

இச்சத்தி தானே யிருக்குமைந்து சத்திகளாய்
இச்சையாதி யென்றுரைக்கு மெம்மறையும்-இச்சத்தி
யில்லாப் பரமுயிர்க ளெங்கெங்கும் தேடிலிலை
யில்லா வுலகெங்கு மில். (எ)

சத்தி யிலாவிடத்துச் சத்த னெதுசெய்யும்
சத்திக்கே யைந்துதொழில் சந்ததமும்-இத்திறத்தால்
எம்ப்ரம்ம மென்றெவரு மேசுவதைக் கண்டிலைகொல்
எம்ப்ரம்மம் போன்றவனா யிங்கு. (அ)

நான்குவாக் காலெங்கு நாட்டிற்றே சத்தியையே
நான்மறையைக் கண்டிலைகொன்காய்ந்திங்-கேன்காணு
ஐயமிதி லென்னி லசைக்குமிதை யாதசைக்கும் [ம்
பையவிது கண்டு பகர். (கூ)

தன்னை யசைக்கத் தனக்கோர் முதலின்றுல்
தன்னசைவி லப்பரமுந் தானசையும்-இன்னதே
சத்தியமா மென்னிற் றனியே யிதினுண்மை
இத்தகைய தென்றிங் கிசை. (ஏ)

உருவா யருவா யுபயமுமாய் நிற்குங்
கெரிவாகி யன்றுகிச் செப்பிவ் விருமையுமாய்ப்
பின்ன மபின்னமுடன் பின்னுபின் னந்தானு
யின்னு மநந்தமுள விங்கு. (கக)

சத்தா யசத்தாய்ச் சதசத்தா யெப்போதும்
மெத்தகட னுகடனுய் வேறுகி-யித்தகைய
தென்றுனைக்கக் கூடா திருப்பதுவே சத்திநிலை
யென்றுனைக்கிற் கேளா யினி. (கஉ)

உன்ன லுணர்த லொழித்துநின் சத்திநிலை [வோ
யின்னதெனக் காட்டென்ன வீங்கெவரும்-சொன்னது
வாக்குமன மெட்டாத மாமாயா சத்தியென்றுர்
நாக்குநாக் கென்பதொக்கு நாம். (கங)

அவாச்சியமா மென்னி லஃதுண்டோ வின்றே
தவாதிருப்ப தாலுலகஞ் சத்தே-அவாவளவாம்
ஈதேயெஞ் சித்தாந்த மென்னி லுலகநிலை
ஓதா தசத்தாக வோது. (கச)

கண்டிருக்க நீவுலகைக் காட்டென்ன லென்னமதி
கண்டாலும் வஸ்துநிலை காணேனுன்-கண்டுணரப்
பூதப் பவுதிகத்திற் பொன்று தொருபொருளே
ஈதென்று காட்டுகென விங்கு. (கரு)

கையிதென்று கண்டிலேயோ காட்டென்ன லென்னமதி
கையிதென்று வேறுபொருள் காட்டாது-கைநாமம்
ஏற்கும் பொருளிதென்றிங் கென்கண்முன்சுட்டியேல்
ஏமபன்யா னப்போதே யிங்கு. (கசு)

இதவென்று சுட்ட விதற்குப்பேர் தோலாம்
இதற்குள் ளிருப்பதெனி லென்புஞ்-சதையாதி
யாமிதற்குப் பேருண்டே யையோகை யெங்கேயோ
காம மகர்த்தமதா கன்கு. (கள)

இல்லாயிற் றோற்றுமோ வீங்கிருக்கிற் காட்டாதென்
இல்லாயிற் செய்யுமோ வெத்தொழிலும்-நல்லாய்கேள்
வேறுபொருள் சையோக மேவுமே கையாதி
தேறிலையோ யப்பாநீ செப்பு. (கஅ)

தத்தமக்கே யுள்ள தனித்தனிகா மங்களெலாம்
மித்தையாப் போக விளம்புவதென் சத்தியமாக்
கண்டிருப்ப மென்றுரைக்கிற் கைபோலக் காட்டவல்லை
அண்டமெலாம் போது மடக்கு. (ககூ)

காரியமே பொய்யாகிற் காரணமென் சொல்லுதும்யாம்
காரணமு மித்தையே கண்டிலைகொல்-ஆரணத்தின்
ஞானகாண் டத்தி னவின்றபொரு ளுண்மைதனை
எனபிமா னத்தையொழி யிங்கு. (உ ய)

மித்தையாப் போகாது வேறுபொரு ளுண்டென்று
சத்தியமாச் சாதிக்கத் தக்கதுண்டோ-எத்தடையு
மின்றியெனில் மெய்யை யினிவிளம்பக் கேட்கவலை
யன்றுநீ யென்ன வவன். (உக)

எல்லா முணர்ந்த வெனக்கருமை யோவென்ன
எல்லா முணர்ந்தாலு மீதருமை-நல்லாய்கேள்
வித்தையிலெல் லாம்பிர மவித்தையெனக்கேட்டிலையோ
எத்தலத்து மீதொப்ப தில். (உஉ)

இருந்தபடி யென்று மிருந்தொளிர்சிற் சோதி
யிருந்தபடி யென்று மிருக்கத்-தெரிந்ததுவாய்
நில்லா ததனை நினைத்தபடி கம்பித்துப்
பொல்லா மயலழிவம் புக்கு. (உஙு)

உடலுறுநா னென்ன லுண்மையா யெப்பால்
இடமென்ன வென்றுரைக்க வீதோ-திடமாகக்
கண்டிருக்கக் கேட்பதென்னை காணுமுட னுனலவே
கண்டுரைப்பா ரெங்குமிலை காண். (உசு)

நானென்ன லென்னபொரு ணானென்னு வில்லையுயிர்
ஆனதினுற் சொல்லென்ன வையறிவே-நானென்னில்
நானுள்ளே சொற்பனத்தி னுமெவை யின்றேனும்
நானென்ன லாகுமன நன்கு. (உஞ)

மானதமெங் கேசுழுந்தி மாறுதா னிருக்க
நானென்னல் சீவனெனி னன்கயலைத்-தானறியும்
அன்றித் தனையறியா தாதலினு ணுகா
தென்றுறையப் பின்ன ரிவன். (உசு)

தன்னையே தானறியத் தக்கநா னெங்கணுந்தா
னின்னதெனக் கேட்டறியே னென்றுரைக்கில்-அன்ன
தருமையே யார்க்கு மருமையல ஞானிக்
கிருதிறத்த நானுமிது. (உஎ)

ஒன்றுசுக துக்கத்துக் கொன்றுபே ரின்பத்துக்
கென்றசுத்த சுத்தமதை யீங்குரைத்தார்-அன்றுமறை
தொம்பதத்திற் கண்டிலெகொல் சோதித்துப் பாரென்ன
கம்பமென நின்றுன் முனித்து. (உஅ)

நானென்ன லெத்தனையோ நாடிற் கணக்கில்லை
நானெல்லாஞ் சேர்த்தொன்று நாடென்ன-நானுடலாக்
காணுதெனி லெவ்வுடலுங் காணுது நில்லென்ன
காணுதொன்றுந் தோன்றுமை காண். (உகூ)

அப்படியே சாயா தனவாத நில்லென்ன
அப்படியே நிற்கநிற்க வானந்தம்-ஒப்பில்
கடலணுவா வெங்குங் கரைபுரளக் கண்டங்
குடல்படிய வீழ்ந்தா னுவந்து. (ஙூ)

ஆண்பெண் ணலிபேத மாங்கொன்றுங் கண்டறியேன்
ஆண்பெண் ணலியா யழிந்தநான்-மாண்புடைய
சற்குருவே செய்தவமே தாக்கற்ற பூரணமே
அற்புதனே யென்றேத்தி யங்கு. (ஙூக)

ஆனாயார் கண்டிடுத லானாயார் போகித்தல்
ஆனாயார் சுற்றமென வலையையோ-ஆருமிலை
மண்ணையன்றி யெண்ணமொடு மாறுக நானுனேன்
என்னைமெலாஞ் சிற்சோதி யிங்கு. (ஙூஉ)

அகம்பிரம மென்பதனை யையமறக் கேட்டிங்
ககவிளக்க மேயெங்கு மாகி-மிகத்தெளிந்து
நிர்விகற்ப மாநின்று னீங்கா ததுவதுவாய்ச்
சர்வம் பிரமமெனத் தான். (ஙூங)

சாத்தேயமத சித்தாந்தவாதம்.

முற்றிற்று.

படலம் - சு - க்கு - ஆ - கவி - நூாக.



உ

திருச்சிற்றம்பலம்.

எ-வது

பிர்ம்மசமாச்சியமத சித்தாந்தவா தம்.

பிரமசமாச் சத்தான் பெரியோன்முன் வந்து
பிரமமன்றி யாதொன்றும் பேணேங்-திரமாக
என்னத் தெரிவன்றி யீதென்று காட்டுதியேல்
அன்னதே தீர்வெமக்கிங் காம். (க)

இவ்வுலக மீங்கிருக்க வீதா லவருண்டாம்
இவ்வுலகு ஞெப்தியன்றி யீங்குனைக்கிற்-செவ்விதா
எற்பமென வன்னேனு மீதாகா தென்றுனைக்க
எற்பதெவர் மூடான்றே விங்கு. (உ)

சிற்றறிவு நம்மாற் சிவம்பே ரறிவுண்டாம்
சிற்றறிவிங் கெம்மட்டோ செப்பென்ன-உற்ற
உடலளவா மென்னி லுறக்கத்திற் காணும்
உடலேது சொல்லதனே யுற்று. (ஊ)

வாசனேயா லென்னிலது வாசனேயாத் தோற்றலெது
வாசனேயாத் தோற்றுவது மானதமே-யோசிக்கில்
என்னில் மனமின்றே லீரிடத்து மீருடலும்
என்னவித மாக்காணு மில். (ச)

இன்னிலேல்யால் மானதமே யீங்குயா னென்பனெனில்
அன்னமன துண்மையுரு வாராய்ந்திங்-கின்னதெனக்
காணுது சொல்லற்க கட்டுலாக்கி னீகெடுவை
நாணுது சொல்பவர்போ னுடி. (ரு)

இன்னதெனச் சொல்லற்கிங் கென்னுலா காதென்னிற்
சின்னமவிச் சின்னமதாய்த் தேருமே-இன்னவிரண்
டன்மையுமா நிற்கு மதுகண்டு நிற்றியேல்
தன்மை விளங்கத் தகும். (சு)

ஞாயமே யுன்வச னாடுவழி யாதென்னில்
நீயிங் ஙனமிருந்து நில்லென்று-மாயோக
மைந்து முறைவழியே யாங்காங்கு காட்டியக்கண்
ஐந்துநிலை காட்டிற் றகம். (எ)


அக்கணமே யாகந்த மாகி யடிவீழ்ந்திங்
கிக்கருத்தை யோரா திகழ்ந்தேனே-மெய்க்குருவே
ஐயனே யான்செய் யபசார நீபொறுத்தி
பொய்யகல வெண்ணுட் புகுந்து. (அ)

சந்தேக மெல்லாந் தவிர்ந்தத் துவிதநிலை
அந்தமுத லின்றியே யாயினன்-இந்தநெறி
கண்டார் விழுவரோ காணுலகப் பாழ்காகில்
அண்டாதே யெப்பற்று மங்கு. (கூ)

இவ்வாறு பற்பலவாயேத்தி வலம்வந்து
ஓவ்வா வனுபூதி யுன்மைநிலை-செவ்விதாக்
கண்டபடி யேற்கக் கழறி யடிவீழ்ந்து
கொண்டுவிடை சென்றுன் குழைந்து. (ஙி)

பிர்ம்மசமாச்சியமத வாதம்-முற்றிற்று.

படலம்-எழுக்கு ஆ கவி—நிகக



உ

திருச்சிற்றம்பலம்.

அ - வது-

காலபிர்ம்மமதசித்தாந்தவாதம்.

காலபிர்ம்ம வாதி கடிதலர்பாற் சென்றையா
காலமும் பொய்யாக் கழறுவதென்-காலதிலே
இன்னதெனக் கேட்டறியி ரீதே யெவைக்குமுடி
இன்னதுபோற் றீர்ந்தநிலை யில். (க)

எக்கா லமுமுள்ளா னெம்மிறையென் றேசொல்வீர்
அக்காலத் துட்பட்டா ணையிற்றே-யிக்காலத்
தன்றிச் சடசித்தை யாயுங்கா லில்லையே
என்று மொருபடித்தா மிங்கு. (உ)

எவ்வுயிருந் தோன்றி யிறத்தலுங் காலத்தில்
எவ்வுலகு மிங்ஙனமே லென்செய்வம்-எவ்வெவையுங்
கண்டு மறைவனவுங் காட்சியும் போகந்தான்
உண்டு கொலோ வேறெதிலு மோர். (ங)

மூக்குணத்திற் றோன்றினர் மும்மூர்த்தி யென்னுமிடத்
திக்கூற்றே காலமதி லென்றுணர்த்தும்-எக்கலையும்
கற்று யறிகிலையோ காலத்தை யார்கடந்தார்
அற்று மெனல்சொல்லே யாம். (ச)

காலங் கடந்தபொருள் காலங் கடந்தவிடம்
காலங் கடந்தவுயிர் கட்டடங்காக்-காலங்
கடந்தபர முண்டென்று கற்றுணைப்பார் காணும்
கடந்தீரோ நீருமதைக் காண். (நி)

நேற்றின்று நாளையென னீங்கு நாருமிலை
நேற்றின்று நாளையென னீக்கமெவன்-சாற்றீர்
அணுமகத்தாங் காலநுட்ப மார்தா னறிவார்
கணிதரு மையமுறல் காண். (சு)

நுட்பத்து ளெட்டாத நுட்பமாய்ப் போகுமெனில்
நுட்ப மறிவடங்கா நுட்பமாம்-நுட்பம்
மனவாக்குக் கெட்டாத வஸ்துவெனில் வேறெங்
கினியெதுவுண் டேது மிலை. (எ)

எம்மதத்தோர் மூர்த்திகளு மிக்காலத் துட்படலால்
சம்மதியோ மிம்மதப்போற் சாதிக்கில்-எம்மதமும்
பஞ்சகிர்த்தி யந்தானும் பார்க்கி லிதினிகழும்
பஞ்சகர்த்தா வேறுண்டோ பார். (அ)

என்ன வவரு மிலையெல்லாஞ் சத்தியமே
உன்னலொழித் திக்கால முண்டெனவே -என்னெதிரிற்
காட்டுதியே லேற்பமெனக் கண்ணெதிரிற் றோற்றுவ
காட்டென்ன லென்னமதி காண். [தைக் (கூ)

தெரிவதனைத் தள்ளித் தெரிய வெவர்க்குந்
தெரிவியெனக் கூடாதேற் செப்பப்-பெரிதாய்
காலமின்றே வென்றிடிலோ காலமெங்கே கேவலத்தில்
காலமெங்கே மாறிற்று காண். (ஐ)

மாறிலதே லென்று மறைவானேன் கேவலத்தில்
மாறதற்கன் றேலெதற்கோ மானதனுக்-கேறலெனில்
உன்டேல் மனங்கால முண்டா மொடுங்கிலிலே
உன்டாகத் தானே யுரை. (கக)

எந்தக் கணமு மிருக்கு மனமிருக்கில்
இந்தவகை யில்லென்பா ரொங்குமிலை-அந்தமுதல்
இன்றேனுங் காலந்தா னெங்கே மனமன்றி
என்றுமுண்மை யிங்கிலையென் றெண். (கஉ)

காலநோக்கி லுண்மையதாக் காணுமே-காலந்தான்
காலநோக்கை விட்டுக் கருதுவதிற்-சாலவே
நாட்டமுறின் மானதந்தா னண்ணுமே யுண்மையதா
நாட்டுவன்யா னின்னுமிதை நன்கு. (கங)

பழநாட்டந் தன்னிற் பழமே விளங்கும்
விழிநாட்டந் தன்னில் விழியே-வழுவின்றிக்
காணு மனுபவத்தைக் கண்டிலேகொல் மாறுமோ
நாணமிலார் போலுனையே னன்கு. (கச)

ஒருதலைத் தீர்ப்பினு முண்மையென யாரும்
இருதலைத் தீர்ப்பே யெடுப்பர் பெரிதுந்தாம்
கேட்டிலேயோ விம்மொழியுங் கிட்டிப் பெரியவர்பால்
நாட்டமதைக் கற்றிடுக நன்கு. (கஙி)

அறிபொரு ணுட்டத் தறிவேன் விளங்கும்
அறிபொரு ளேன்காணு மறிவைக்-குறியாகக்
காணுங்கா லிதருமை கண்டா லெவருமிலை
தூணைப்பார் காணுர் துணிந்து. (கசு)

இருநாட்டப் பன்டிதமு மீங்ககன்று சாயா
தொருவா திடைநாட்டத் தொன்றில்-மருவுநிலை
சத்தியஞ் சத்தியமே சந்ததமும் வேறில்லை
இத்திறத்தைப் போலெங்கு மே. (கள)

என்றளவி லன்னே னிறைஞ்சியரு ளென்றேத்த
நன்றெனவே யங்கொன்றை நாடென்ன-அன்றே
நியதி களைந்ததனை ஞேயமதைக் காட்டப்
பயகம் பனமொழிந்தான் பார்த்து. (கஅ)

வேதாந்தம் போலுண்மை வேறெங்குங்கண்டிலன்யான்
நாதாந்த போத நழுவுங்கால்-ஏதாந்தம்
இல்லை யெனவிறைஞ்சி யேத்திப் பலவாறுக்
கல்லையொத்து நின்றுன் கடை. (கசு)

சின்னுள் கழிந்து சிறைதவிர்ந்தான் போலுவந்து
பன்னுள் மலமயக்கைப் பார்த்தழித்து-நன்னுள்
சுயஞ்சோதி யென்றிருந்தான் சுத்த மசுத்த
வயப்படா தெங்கு மகிழ்ந்து. (உஅ)

தன்னிறைதா ளேத்தித் தனிடத்திற் கொண்டுவிடை
மன்னிபரிச் சின்னமதை மாற்றியே-எங்ஙகையுங்
கண்டப்பாற் றோர்ந்த கலங்கா நிலைநின்றுன்
விண்டுனாயா தெங்கும் விளைந்து. (உக)

காலபிரம்மமத-சித்தாந்வாதம்.

முற்றிற்று

படலம் - அ - க்கு - ஆ கவி-நிகழ

திருச் சிற்றம்பலம்.

கூ-வது

சூன்யபிர்ம்மமதசித்தாந்த

வாதம்.

சூன்யபிர்ம்ம வாதி தணிந்தவர்பாற் சென்றையா
சூன்யமதை யும்பொய்யாச்சொல்வதெவன்-சூன்யமதில்
இல்லாப் பொருளாதி யில்லா வுயிராதி
இல்லாப் பாணதி யில். (க)

இன்னதென வாக்குமனக் கெட்டாச் சுயம்பிரமம்
அன்னதனை யாரறிவா ராஆஆ-அன்னோயார்
மூப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமாய்
அப்பாலுக் கப்பாலென்றுள். (உ)

எங்கணுஞ் சூனியத்தை யிக்கணமே காட்டவலம்
இங்கங் கெனுதபடி யேனையம்-பங்கமுள
நம்பிக்கை யன்றிததா னுட்டோ மதத்தனைப்போல்
இம்பரோ காண்மினிதை யின்று. (ங)

எப்பொருளைச் சோதிக்கி னெல்லாம் வெளிமயமே
மெய்ப்பொருளீ தன்றியெங்கும்வேறில்லை-தப்புமதப்
பித்தர்போற் பொய்சொல்லோம் போறிவுஞ்
இத்தையன்றி யெங்குதிக்கு மில். [சிற்றறிவும்()

கொண்டுபோவ் தொன்றுமிலை கொள்ளைகொள்ளை டிரா
[வாழ்ந்தும்
சுண்டிலிரோ வெம்மதத்துங் கற்றுணர்ந்தீர்-சண்டபார்
[போல்

முன்பின் பிறழ்ந்துளர்வீர் முன்னேனைக் கண்ணெதிரில்
அண்டப் புரட்டனென லாம். (டு)

மாறுத் திருத்தி வருவிப்ப தொன்றுமிலை
பாறுத சூன்யம்போல் வல்லீர்காள்-மாறுகக்
கண்டசக சிந்தனையாற் காண்டெய்வ பாவனையால்
உண்டுகொலோ வாயிங் குமக்கு. (கூ)

போக்குவர வில்லாத போதமெனல் சூனியமே
தாக்கற்ற பூரணமுந் தானுகும்-சூக்கத்திற்
சூக்கமிதே வேறென்று சொல்லா ரறிவில்லார்
நீக்கியறி யார்பொய்ம்மை நின்று. (எ)

சும்மா விருத்தலிலை சூனியமே யான்வனை
எம்மாலும் யாராலு மெட்டரிது-சும்மா
அயலென்ப தெல்லா மறிவீனர் கொள்கை
மயலகல்வ தென்றே மகிழ்ந்து. (அ)

கண்டதே காட்சியன்றிக் கண்டவர்போற் பேசுவதென்
கொண்டதே கோலமன்றிக் கோலமிலை-உண்டோ
இறந்தாற்கண் டிங்கே யெவர்வந்து சொன்னர்
பிறந்தும் பயனடையாப் பேர். (கூ)

பூதத்தின் காரியத்தைப் பூதமென்பீ ரெட்டறியீர்
ஆதாரஞ் சூனியத்தை யன்றியிலை-ஆதாரங்
கண்ட புலவர்மொழி கற்பனையன் றீதுண்மை
கண்டதிலை நம்பிக்கை காள். (ஐ)

நானு னென்பதினு நாட லவனவனென்
றுனு மகிமையென்பீ ராச்சரியம்-ஏனே
இருவரு மொக்க வியம்பி யிறப்பானேன்
பெருமையிலே துஞ்சொல் பிழை. (கக)

சூனியத்தின் காரியமாந் தொல்லுலகை வெல்லறியீர்
சூனியத்தையாவெல்வீர் சொல்லளவே-கோணுளதாய்ச்
செய்கோல மெல்லாஞ் சிறிதெங்கோ லத்திலன்றே
பொய்க்கோல மீதெல்லாம் பொய். (கஉ)

சுசாதி விசாதி சுகதபேத மின்றி
நிசாணுபூ திப்பொருளா நிற்கும்-உசாவுங்காம்

சூனியத்தி னுண்மைநிலை சொல்லளவே துங்கொள்கை
எனிதற்கு மாறுவீ ரிங்கு. (கங)

நிட்டையன்றி யிக்தநிலை நேடியெட்டு வாரில்லை
கட்டமென்றே பொய்க்கோலங் காட்டுவீர்-மட்டிகள்
[போல்
வாசித்த தின்னதற்கோ மாண்டிடுமுன் பார்த்துய்ம்மின்
நெசித்தென் றுனவரு நேர். (கச)

சூனியமென் றுலில்லை சொற்கருத்த மென்றனையெய்
சூனியமோ வோர்தலுந்தான் றோற்றுதென்-சூனியத்தை
விட்டுனுத துன்குற்றம் விட்டா லுலகமதேல்
விட்டிரண்டு நில்லென்ன மேல். (கஙி)

விட்டிடுதல் கட்டமதேல் மெய்யென்று கொள்வதெதை
ஓட்டா வுனர்வொன் றுளதாகத்-தட்டுதெனில்
உற்றதனைப் பாவென்ன வோயாக் கலக்கமெனின்
மற்றொன்றுங் கேளுண்ண மகிழ்ந்து. (கசு)

உணர்வொன் றுளதென்று முன்னையன்றி வேறோர்
உணர்வோகா னென்னி னுடலார்-உணர்வதனைக்
கண்டிலதா னுனென்றுன் காட்டுமிது செய்தானே
உண்டடிமை யாண்டா னுனில், (கஎ)

போகவிச்சை நீங்களவும் போகிப்ப தெங்ஙனுண்டாந்
தேகமன்றி யித்தேகஞ் செய்திலம்யாம்-மாகர்த்தா
உண்டவனே நம்பி யுயிர்க்குறுதி வேறிலதாத்
தொண்டுசெய் முன்னே துணிந்து. (கஅ)

சரியையுத னுன்கும் தனைப்புனித னுக்கி
உரியவழி வாக்க வுணர்த்தும்-பெரிதுந்தான்
ஆதலினு லிம்மெறியி லற்பமுங்கோ ணுதிருக்கிற்
சாதுசங்கத் தேதுமழைக்குந் தான். (கக)

அப்பா லதுதன்னை யாரொன்று தேடவித்துத்
தப்பா தடைவிக்குஞ் சற்குருவை-யப்பாற்
சுருதியுத்தி யொக்கச் சுவானுபவங் காட்டித்
தெரிவுமய மாகச் செயும். (உய)

அறிவயலென் றின்றி யனைத்துமறி வாகப்
பொறிகரணத் தாக்கனைத்தும் பொய்யாய்-நிறைவாகிச்
சச்சிதா னந்தமதாந் தன்னிலையிற் சேர்க்குமதால்
உச்சிதமா மென்றே யுணர். (உக)

என்ன வவரடியை யேத்தி யுறுதிமொழி
யின்னதெனக் கேட்டோ ரிடத்திருந்து-உன்னியுன்னித்
தானேதா னுயினுன் சற்குருவின் ருள்வாழ்த்திக்
தானுவா ரீதுணர்வர் தாம். (உஉ)

சூன்யபிர்ம்மமதசித்தாந்தவாதம்.

முற்றிற்று.

படலம்-கூ-க்கு-ஆ-கவி-நிருசு.



உ

திருச்சிற்றம்பலம்.

ம—வது

மாயாமதசித்தாந்தவாதம்.

மாய்வா தத்தலைவன் வந்தவர்பா னண்ணியே
மாயா நிலையதனை வஸ்துவென-ஆயாதிங்
கெண்ணிப் பகவா னிலையென்ப தெங்ஙனென்றான்
அண்ணனிலை யாயாதவன். (க)

எதைப்பகவா னென்பை யெதையில்லை யென்பை
இதுவென்று சுட்டாதென் னிங்கே-இதையெல்லாம்
ஆக்கினை னில்லையோ யாராக யானேற்பன்
நாக்கையடக் கென்று னலிந்து. (உ)

கோபித்தாம் தீருமோ கொண்ட வழக்கதுதான்
கோபித்து மஞ்சாதென் குற்றமின்றே-கோபத்தை
எற்குமிடத் தேற்ப மிதின்வழக்கை நீக்காதென்
எற்கயான் சொல்வனென்று னிங்கு. (ங)

ஆணென்னி னென்ன வடையாளத் தாலென்ன
ஆணலதேல் யாவு மமைக்குமோ-ஆணன்று
பெண்மாயா சத்தியெனப் பேசுவதென் சாத்தேயன்
பெண்ணுண்டே லாணிலதோ டேசு. (ச)

சத்தியற்ற போதுள்ள சத்தனெது செய்வன்
சத்தனின்மேற்சத்தியெங்கேதங்குமிடஞ்-சத்தியன்றிச்
சத்தனிதுவென்னச் சாற்றுதற்கிங் கேதுண்டு
சத்திசத்தன் பேதமல தான். (டு)

சத்திசத்த னுகுமோ சத்தன்து வாகுமோ
சத்தி மபமன்றிச் சத்தனெங்கே-சத்தன்
ஆகோசரமேற் பாழாகு மவ்வாறே சத்தி
யகோசரம தாலங்ங ணும். (கூ)

இருவர் வழக்கதனு லில்லையென்றே காட்டும்
உருவருவ மென்றுலு மோடும்-தெரிவிலதால்
இல்லையுண் டென்பனவு மிங்ஙனமா மாயுங்கால்
எல்லையின்றிக் கற்றேய்சொல் லிங்கு. (எ)

அனுமானத் தீர்ப்பிங் ககலுமே யெங்கும்
அனுமானத் துண்மையுரு வாயில்-அனுமான
வல்லவுமக் கேதக்க மாயாவா தப்பெயரை
அல்லர்மேம் சொல்லினெவ ணும். (அ)

உபாதிகுணஞ் செய்கை யுயிர்பரம தென்பீர்
உபாதிகுணஞ் செய்கைமுத லோரீர்-உபாதியையே
வத்துவென்பீர் மாயையன்றே மாயாவா தக்குரியீர்
எத்திறத்தா லேற்போ மிது. (சு)

மாயைதனை வஸ்துவென வந்திப்பீர் நாமன்றே
மாயாதி தப்பொருளே வந்திப்போம்-மாயாவா
தப்பெயரீர் மன்னுவீர் சாற்றுவதென் பற்றலர்மேல்
இப்படிசெய் தாற்பெருமை யென். (ஐ)

கண்ட மகண்டமெனக் காண்ட லுபாதியதே
கண்டதிலை ரீவேசர் கண்ணதனும்-கண்டவர்போற்
காட்டுவீர் பொய்க்கோலங் கற்ற வலியதனல்
நாட்டுவீர் பொய்யதனை நன்கு. (கக)

பாவ் மபாவமதாப் பாழ்படுதல் கண்டிருந்தும்
பாவனையைத் தெய்வமென்ப் பார்ப்பதெவன்-பாவனை
சித்தனையின் கற்பிதமே சித்தந் தெளிவதெவன் [தான்
இத்தமயக் கோசாமை யென். (கஉ)

தம்பெயரை யன்னியர்மேற் சாற்றிக் களிப்பதெவன்
தம்பெயரென் றேர்வதென்றே தாமறியீர்-நும்போல்வார்
கண்டு மகிழ்வதலாற் கண்ணுளோர்க் கென்னுவீர்
ஆண்டப் புரட்டனை லாம். (கஙு)

தன்னைப்போல் மூடனென்பீர் சன்மார்க்கர் தம்மையுமீர்
உன்னிலுமக் கொப்பாரிங் குள்ளரோ-என்னமதி
மாயாவா தப்புலவீர் வஸ்துநிலை கேட்டறியீர்
ஆயாதென் னுண்மை யகம். (கசு)

ஒன்றே யனேத்தென்ப மொன்றுகு மீன்டென்பம்
ஒன்றையன்றி யில்லென்ப மொன்றென்பம்-அன்றுகத்
தோற்றமெலாம் பொய்யென்பஞ் சோதியேமெய்யென்
றூற்றுவதென் னெம்மைத் தொடர்ந்து. [பம் ()

மறந்துமே சொல்லோம்யா மாயாவா தத்தை
அறிந்திடு ருண்மையிதை யன்றி-அறிந்தவர்போற்
காட்டுவதை விட்டுக் கடைப்பிடிமி னுண்மைதனை
ஓட்டுமே மாயை யொருங்கு. (கசு)

ஒன்றுமல் லப்பிரம மொன்றுமிலை வேறுக
என்றுநிலை யெம்முடிபுங் கைதொக்க-அன்றுணர்ந்தோர்
ஒன்றுகீ யன்றொன்று முன்னையன்றி யில்லென்றார்
என்றுமித போலுண்மை யில். (கள)

என்ன வவனு மிருதாள் வணங்கிமுனஞ்
சொன்னநிலை காட்டெனவே சோர்வின்றி-யன்னநிலை
காட்டக் களித்துக் கலக்கமெலாம் விட்டுண்மை
நாட்டமதி னின்று னயந்து. (கஅ)

மாயாமத சித்தாந்தவாதம்

முற்றிற்று.

படலம்-ல-க்கு ஆ—கவி—(நுளஉ)



திருச்சிற்றம்பலம்.

கக-வது

நாஸ்திகமதக் கற்பித்தக்கழற்றி.

(*)

நாஸ்திகன்வந் தையாநீர் ஞாயமய மாயுள்ள
நாஸ்திகமும் பொய்யென்று நாட்டுவதென்-ஆஸ்திகர்
அல்ல நமதமத மாயுங்காற் கண்டனவே [போல்
இல்லையென நம்பிக்கை யிங்கு. (க)

நாஸ்திகமே கேண்மினிதை நானென்ன லொன்றல்ல
நாஸ்திகமென் றீரிலையு நல்லதே-நாஸ்திகமேல்
இவ்வுலக போகந்தா னெவ்வுயிர்க்கு மொவ்வாதென்
எவ்வுயிரு நாதனமே லிங்கு. (உ)

உலகியல்பா மென்னி லொருபழத்தா யேனின்
றுலகியல்ப திங்ஙனெனி லுண்மை-நிலையிலதாப்
போவதென வன்னதெனிற் போகமுளர் வுக்கன்றே
ஆவதிலை மாறென் னவாக்கு. (ங)

மாறிடும்பின் னுலென்னின் மாறுதென் னிப்போது
மாறிடுங்கா லத்தென்னின் மாறிற்றே-தேறிலைகொல்
சொன்ன சுவாவந்தான் தூண்டா தகர்த்தத்வம்
இன்னகா லந்தானு மிங்கு. (ச)

அன்னியமாய் நின்றபலே யாசித்தல் ஜீவதர்மம்
அன்னியந்தா னீங்கிலிச்சை யன்றறுமோ-என்னமதி
இச்சை யொழிபளவு மெவ்வு றயனீங்கும்
இச்சையன்றி யெப்பிறப்பு மில். (கு)

இச்சை யினியெழா தேற்ற செயல்முடிக்கின்
இச்சைதலை காட்டுமோ வெண்ணமேன்-எச்செயலும்
எல்செய்ய வேண்டுவதின் றெப்படிதான் சென்மம்வரு
நன்குணர்ந்தி சோர்மினிதை நன்கு. [ம்()

ஆதலினுன் முன்பின் னளவிலதாஞ் சென்மங்கள்
சதுரஞ் சித்தாந்த மெய்கொழிப்பீர்-யோதுறும்
வாய்மூடிக் கேட்டுய்ம்மின் வல்லார் சரணடைந்து
பேய்மதமென் றெண்ணுவீர் பின். (எ)

இம்மையிலே காண்மி னெவரெவருஞ் செய்கைபல்ன்
இம்மையிரு னேயடைத லில்வாறே-யெம்மையிலும்
தான்றுன்முன் செய்தவினை தாமே யனுபவிப்பர்
என்காணு மையமிதி லிங்கு. (அ)

எவரெவருஞ் செய்கைபல னிவ்கே றுகரின்
பவமே னெவரெவர்க்கும் பாராய்-எவராலும்
எண்ணக் கடல்காண்டற் கில்லை யிதுலேசம்
அண்ண லளத்தளிப்பா ரங்கு. (கூ)

அகப்பற் றழுக்கறுக்கி னன்றதுவீ டென்பர்
அகப்பற்றே காமாதி யாகும்-மிகப்பயத்தீர்
ஞானி யெரிப்பனதை கல்லீச னேர்ந்தளக்கும்
கோனளிக்குங் கண்டளவு கொண்டு. (ய)

எவரெவர்க ளிச்சைகடா னெவ்வாறங் கவ்வா
றெவரெவர்க்கு மீசனறிங் நீவன்-தவறின்றித்
தேகாதி யாவென்னிற் சேதமெவ னேற்கிலிதை
யேகாதோ நம்மிட்ட மிங்கு. (கக)

இட்டமெலா மிங்கவர்பா லிட்டு வணங்குநிலை
கட்டமெலா முன்டோநீர் காணுமினே-கட்டடங்கார்
சொற்போலு நுங்நடைதான் சோநிக்கில் வேறன்று
கற்பதெலா மீதுக்கோ கன்டு. (கஉ)

ஈச னுளனென்றிங் கெவ்வாறேற் போமென்னின்
ஈசனன்றித் தேகாதி யிங்குண்டாய்-நாசமெவன்
வாய்க்குமென வீதெல்லாம் வாய்த்தல் சுபாவமெனின்
வாய்க்குமோ தானே பனை. (கங)

கருவிதனைக் கொன்டிதுபோற் கர்த்தா வெதுகொன்
டிருவாதி செய்வனெனி னுண்மை-தெரிகில்லாய்
இட்டமே செய்கருவி யென்றுந் நடையென்னை
இட்டமெங்ங னுங்கருவி யிங்கு. (கச)

இட்டமே யாதிதனை யென்னுங் கருவியதாங்
கட்டியனை பூச்சதுபோற் கன்டொழிமின்-இட்டமொழி
தன்னிடத்தி லின்றனைத்துந் தன்னிடத்தி லேசெய்யும்
தன்னிலனை நோயாமம் முன். (கஞ)

ஏற்றம் கிடமெங்ங னென்னிற் கூனம்போல்
சாற்றலா மென்றிடிலோ சாற்றன்மின்-தோற்றமதே
சூனியம தாமென்னிற் சூனியமாம் நம்மிடமும்
சூனியமாம் நாமுந் துணிந்து. (கசு)

இருப்பமே யென்னி லிருக்கு மிடமும்
இருப்பதனும் சூனியமென் மறன்னேல்-இருப்பதுவே
எட்டப் படாதெனினு மில்லாமற் போயதல
தட்டன்மி னெம்மொழியைச் சாய்ந்து. (கள)

காரியந்தர் னேரிரண்டிற் காரியமொன் றேலாதென்
காரணனென் கண்ணுக்குக் காணுதென்-ஒருணர்வாய்
ஐயுணர்வும் நின்றெளிரி லக்கண்ணுக் கேகாண்பன்
மெய்யுணர்விங் கில்லையிதின் வேறு. (கஅ)

இக்கண்ணுக் கென்காணு னீங்குருவ மல்லனக
மக்கண்ணுக் கோவுபய மல்லனுமாம்-மக்கினத்திற்
சீவனெனுங் கண்ணுக்குஞ் சேயா னருவமுலன்
யாவனென்ப னிவ்வறிவா லிங்கு. (கஈ)

அறியும் பொருளென்னி லாகு முலகம்
அறியாப் படுபொருளே லாகும்-வெறுமையதா
எங்ஙிலைய னென்றனைப்ப மீக்கவனு மாகுமட்டும்
அன்னநிலை யெட்டவரி தாம். (உ).

எட்டவரி தாமதனு லில்லையென நாமிருப்பம்
பட்டிமா டொத்துமனம் பாய்வதினுற்-கட்டமுடன்
ஓயாக் கவலை யொழியாத் துயர்சோர்வு
தீயாத் தகிப்பதற்கென் றீர்வு. (உக)

ஈதெல்லா மெப்போது மெங்குஞ் சுபாவமெனின்
ஈதெல்லாந் தள்ளி யிருப்பதெவன்-ஏதியதேல்
தன்னுலே யிதெல்லாஞ் சார்ந்து தவிர்ந்திருக்க
என்னுகு நின்வாத மிங்கு. (உஉ)

ஆசை யடக்கார்க் களவில் கவலையதாம்
ஆசை யடக்கி லவர்க்கிலவே-ஆசைநிலை
கண்டறியார் போலுங்கின்சொல் காணு மியற்கையெனல்
தண்டமதி காக்குமோ சொல். (உஙு)

எந்தலக்கா லாசைதனை யீங்கடைதல் போக்கிவிடல்
அந்தலக்கிங் கோரிரண்டா மாயுங்கால்-இந்தவுல
கொன்றறிவொன் றிவ்விரண்டி லொன்றறிவை மற்றதனை
என்றுமறி யாய்கேட்டு மிங்கு. (உச)

உன்னைவிட வேறன்றிங் குன்னு லதுகாணுய்
உன்னிடத்தி லுன்னுனீ யுற்றுணர்வால்-பன்னுகுரு
தந்திரத்தா லீதுண்மை தள்ளி லதுதவிரத்
தந்திரம்வே றெங்குமிலை தான் (உரு)

என்னமோ சொல்லுகின்றீ ரீதெமக்கு வேண்டுவதின்
றென்னில் சுகபோக மிவ்வுலகன்-றன்னியமே
இச்சை தவிர்தற்கே மீங்குன் விசாரணையேல்
இச்சையை யென்மொழியி லிங்கு (உசு)

தன்னூர் கலகத்தைத் தானரசன் போக்காதிங்
கின்னசுபா வந்தானென் றேனிருப்பன். அன்னதுபோற்
காமாதி தன்னுட் கலகமதைப் போக்காதென்
போமாறிங் கேது புறம். (உஎ)

உன்னை யயலா லொழியாத் துயர்செய்யில்
இன்னசுபா வந்தானென் றேனிருப்பை-அன்னதுபோற்
சிந்தை சிதறனீ தீர்க்காதிங் கார்தீர்ப்பார்
அந்தவகைக் கேதென் னறை. (உஅ

சுபாவஞ் சுபாவமெனச் சொல்லியொன்றுஞ் செய்யா
தபாவமா நிற்குதியோ வந்தோ-உபாயமாய்ச்
செய்து சுகிப்பதுபோற் சித்தஞ் சகமாகா
தெய்துமுழைப் பெம்மதே யிங்கு. (உசு)

அந்தவுழைப் பேதென் றறிந்தார்பாற் சென்றறிதி
அந்தவுழைப் பாலன்றி யையமறு-தெந்தவிதத்
தானுமது சொல்லே யறிந்தா ரிலையென்னேல்
ஏனவனைத் தேடவிலை யிங்கு. (ஊ)

தேடிலெங்குங் காண்பரவர் தேடாதார்க் கேதுண்டாம்
தேடவெமக் கக்கனையென் செப்புதியேல்-சாடுவன்யான்
இல்லேபக வானென்னி லெந்தவிதத் தாற்சொலியும்
இல்லையுமக் கக்கனைதா னிங்கு. (ஊக)

நித்தியமாந் தீர்த்தனே நேசியா லெங்குமிலை
யெத்திறத்தா லெப்போதெங் கேயென்றிங்-கித்திருத்தி
வாய்க்குமெனற் கேதென்னே மண்ணுலகி லில்லையே
வாய்க்குமெனக் காத்திருந்தும் வந்து. (ஊஉ)

ஆன்மாமுன் பின்னில்லை யாமெனிலிப் போதேதிங்
கான்மா வரற்குடலா லாமென்னில்-ஏன்வந்த
திவ்வுடனுன் காண்கிலையோ வீது சுபாவமெனின்
இவ்வுத்தி யேன்முன்பின் னில் (ஊங)

சுபாவமிப்போ தென்னிற் சொல்லாதென் முன்பின்
சுபாவமொரு போதலவே சோர்வாம்-சுபாவமெனுஞ்
சொற்கருத்தந் தேராய்நீ சொல்வழக்கிங் காறேற்பர்
அற்பருக்கே நின்வாத மாம். (ஊச)

அல்லவெனின் ஞாயஞ்சொல்லார்கண்டார்முன்பிறப்பின்
கில்லையெனி னிப்பிறப்பார்க்கே துமக்-கொல்லுமெனின்
எப்பிறப்பு மிப்படியே யேலோமோ முன்பிறப்பார்
இப்பிறப்பிங் கெந்தமக் கின்று. (நடு)

இந்தநா மென்றிங் கிருந்தாற் சொலப்படுமேல்
இந்தநா மில்லையென்பா ரிங்கெவரோ-இந்தநாஞ்
சைதன்ய மாந்தர்மந் தப்பாது முன்பினிலை
சைதன்ய மாங்கலப்பாற் றான். (நசு)

உடல்கா ரணத்தாலிங் குற்றதெனச் சொல்லி
முடிவி லுணாயிறந்தாய் முன்னே-விடுமொழிதான்
எந்தவிதத் தாலு மிலையேதுஞ் சித்தாந்தம்
இந்தமட்டும் நானமிலா தென். (நஎ)

இனியுலக முன்மையென வீங்குரைப்பம் யாமும்
தனக்கென் றுருவுளதேற் சற்றும்-தனக்குள்ள
தூலதேகந் தள்ளித் தொல்லுலகத் தம்சமன்றே
ஏலுமோ நின்னுலு மிங்கு. (நஅ)

என்செய்வேன் காட்ட விருக்கு முடனுள்ளி
என்செய்வே னேற்றற் கிடங்காணேன்-என்செயலால்
ஆகா தெனிலுலகெங் காகுமுன்மை நீயேசொல்
ஏகாரார் தோற்காம லிங்கு. (நக)

நனவவத்தை யன்றிசகம் நாட்டவலா ருண்டேல்
கனவினுநா மில்லென்றல் காணுறும்-நனவவத்தை
யுள்ளளவு முன்மையெனி னுண்டோ நினைவன்றித்
தள்ளுதும் நுங்கொள்கை தான். (சவி)

வெற்றவெளி தள்ளியணு வேறுகக் காட்டுதியேல்
முற்றுலகு முண்மையதே மூதுணர்ந்தோய்-சற்றும்
அறிவிலர்போற் பேசாதே யானமட்டும் வாயால்
நெறியுளோர் சன்னிதிக்க ணின்று. (சக)

எவ்வுயிரும் பாடுபடல் யாதுக்கென் றேர்ந்திலெல்கொல்
செவ்விதா யுன்பாட்டைச் சிந்திக்கில்-அவ்வாழும்
நீயே தெரிந்திடுவை நீங்காச் சுகமதற்கென்
றேயா துயிர்க்கியற்கை யோர். (சஉ)

ஆரா வியற்க்கை யவாவென்றூர் வள்ளுவரும்
தேரரய்கொ லன்றுரைத்த சேய்க்கண்ணும்-பாராய்நீ
கூகூவென் றேனழுகை குன்றுச் சுகமதற்கே
னகாதென் னின்கொன்கை யிங்கு. (சங)

இச்சையே யெவ்வுயிர்க்கு மென்றுஞ் சுபாவமதால்
இச்சை யடங்கிலையே யிப்பிறப்பில்-இச்சை
அடங்காமை யால்முன்பின் ஞமனந்த சென்மம்
இடங்காணும் நின்கொள்கைக் கிங்கு. (சச)

கண்ணுலே கண்டவைபோற் காண்பதெது சிந்தனையில்
கன்னெதுக்குக்காணுமவை காண்பதெவன்கண்ணுலே
கண்டனவுட் சென்றவல காணுமவை பூதமல
விண்டுரைசெய் வல்லியோ மேல். (சரு)

ஈதெல்லா மிங்கியற்கை யென்னிற் சுவாணுபவ
போதத்தா னீருக்கப் போவதிலுல்-ஓதியற்கை
எல்லாஞ் செயற்கையதே யீங்கியற்கை யொன்றுமிலை
நல்லார்பாம் கேட்டுய்தி நன்கு. (சகூ)

பசுபதி பாசப் பகுப்புண்மை காணேன்
நிசவடிவீ தென்று நிகழ்த்தில்-வசையென்றீர்
என்னிலும் மூடரோ யெந்தமதப் போதகரும்
அன்னவர்பா லென்னழுவே னன்டி. (சஎ)

சுருதியுத்தி யோடு சுவானுபவ மொத்துச்
சரியாக வுண்மைநிலை சாற்றல்-அரிதெங்கும்
இந்துமதந் தன்னி லிருப்பா ரிதுசத்யம்
எந்தமதத் தும்போலி யே. (சஅ)

அறிந்தளவு சொல்லுமதி லேயாவென் றேத்த
அறிந்திடுதல் தோற்றிடுத லாகும்-பிறிந்தாண்டாய்த்
தோற்றுவதைக் காணுது சும்மா விருவென்ன
தோற்றுவதென் செய்வேன் சுரந்து. (சக)

சுரக்குமிடங் கண்டதனைச் சொல்லென்ன வையா
சுரக்குமிடம் பாழாமென் சொல்வன்-இருட்டிடத்தை
உற்றுநீ பாரென்ன வோயாப் பெருவெளியாய்
நிற்றலெனி னுற்றதனி னில். (நுஐ)

நிற்கநீற்க மின்மினிபோ னீங்கா தொளிருமெனின்
நிற்குதிநீ கண்டதனை நீங்காது-கற்போல
என்ன வணுவணுவா யெங்குமொளிர் கின்றதெனின்
அன்னதனைக் கண்டுநில் லங்கு. (நுக)

சோதிமய மாயொளிருஞ் சொன்ன பெருவெளிதான்
ஏதயலுங் கண்டிலன்யா னென்சொல்வன்-போதமதை
என்னினீ யவ்வா றிருக்கிலெது காணுமதை
அன்னியமா காதங் கமை. (நுஉ)

ஆகந்த மேமயமா யாகி யொளிர்வதெனின்
ஆகந்தங் கண்டப்பா லாகுநிலை-நீகந்தா
தங்கிருந்து சொல்லென்ன வாங்கே யகோசரமாம்
எங்கேகான் சொல்வே னிருந்து. (நஉ)

ஆகந்த மேயுருவா யன்பாகத் தேயிருந்தே
யானந்த மாக்கடலா யாங்கொளிர்வை-யானிந்த
உண்மைதனை யோராதே யோர்மா னிடனீயென்
றெண்ணினே னீபொறுப்பா யிங்கு. (நசு)

இந்தவப சாரமதை யெள்ளளவு நீனினையா
தெந்தவிதத் தாலுமெனை மீடேற்றுய்-அந்தமுதல்
இல்லாச் சுயஞ்சுடரே யெந்தையே யெங்குருவே
பொல்லேனுக் கார்சொல்வார் புத்தி. (நஎ)

இவ்வற் புதமெங்கு மில்லையே யென்சொல்வேன்
எவ்வெவர்க்குங் கண்மணியே யென்றேத்திச்-செவ்விதா
யஞ்சலிதன் குஞ்சியதா யங்கே விழுந்திறைஞ்சி
அஞ்சிவிடா நின்றே னடி. (நஅ)

இன்னு மகந்தழுள விவ்வஞ்சூ திக்குப்பின் [நிலை
அன்னையான் சொல்லுவன்கா ணுங்காங்கே-சொன்ன
காக்குந் திறங்கண்டு காதலித்த தென்கிடையா
காக்குமவர்க் காசான்சொல் காண். (நஎ)

புறம்பில் வெளிநாட்டம் போக்கா தகத்தில்
நிறைஞான விண்ணூட்ட நீக்கா-திறையேனும்
நிற்பார்க்கெப் பற்றுண்டு நின்மலாஞ் சீவன்முத்தர்
அற்பமுமேன் பாவ மவர்க்கு. (நஅ)

க-வது. மகாவாக்கிய விளக்கம்.

செயற்கையே யென்றுணர்ந்தேன் சிந்தனேநின் கண்ணுல்
இயற்கையென லில்லாம லிங்கே-புயற்குதவி
இல்லதுபோ லென்செய்வ னிங்குன் னருட்குதவி
பொல்லனே னையா புகல். (நுசு)

அப்பாவனுபூதி யையமற நீவிளங்கல்
தப்பாத கைம்மாறு தானுகும்-எப்போதும்
என்ன வவனடியை யேத்தி விழுந்திறைஞ்சி
இன்னுமுள தோர்குறைதா னிங்கு. (சுல)

இந்த வனுபவமே யெம்முன்னேர்க் கென்றுனர
அந்தமகா வாக்கியத்தி னந்தரங்கம்-இந்தநிலை
என்றுனரப் போதிப்பை யென்றுனுக் கோதுவன்கான்ன
நன்குணர்ந்த ஞானகுரு நாடு. (சுக)

ஈசனன்று நால்வர்க்கு மெம்பகவா னர்ச்சுனற்கும்
நேசத் தயன்சுரர்க்கும் நின்றுனர்த்தும்-பாசமகல்
ஞானமிது வேயாகும் நன்காய்ந் தனைபார்க்கில்
ஏனுன்னக்கிங் கையமிதி லிங்கு. (சுஉ)

வசிட்டர் சுகர்சனகர் வல்லகும்ப யோனி
நிசப்பரத்து வாசர்முத னேசர்-கசக்காத
விந்நிலையே பெற்றுய்ந்தா ரீங்கவர்நூ லாலேற்பை
அன்னவற்றை யாராயி னங்கு. (சுஙு)

வேத மசரீரி மிக்கமகா வாக்கியந்தான்
ஓதுமே நான்கதனி னென்றுகேள்-காதற்றுப்
ப்ரக்ஞானம் ப்ரம்மமெனப் பேசுமுதல் வாக்கியந்தான்
ப்ரக்ஞான முள்ளமையது பேண். (சுஈ)

அறிவென்லே ப்ரக்ஞான மன்றியர்த்த மில்லை
பிறிதோவா நந்தமதாம் பேதம்-அறிவதுவே
யானந்த மன்றி யயலாகா தெங்ஙனெனில்
ஆனந்த மல்லமுத லாம். (சுரு)

சத்தாதி யைந்துந் தவிரவின்ப முண்டாமேல்
சித்தையன்றி யின்பஞ் செனிக்குமென்பம்-இத்தகைய
தில்லையெனி னிப்படியே யிங்கிதுவு மில்லையென்பம்
அல்லமுத லானந்த மாம். (சுசு)

திரிசியமு மின்பஞ் செனிப்பிடமா நிற்கத்
திரிசியவா நந்தமெனச் செப்பா-தொருவிதந்தான்
சொன்னதுயா துக்கென்னிம் சொல்லி லறிவன்றி
யின்னதென வில்லையதா லிங்கு. (சுஎ)

அறிவே சுயஞ்சோதி யற்பமும்வே றில்லை
அறிவுநாட் டத்தவர்க்கங் காகும்-பிறிதாகும்
அங்கியநாட் டத்தவர்க்கிங் காதலினும் சித்துண்மை
அங்கியமா நந்தமல வாம். (சுஅ)

இங்கிலையைச் சொன்னலு மிட்டம்வே றுனர்க்கிங்
கன்னியமே யின்பநிலை யாலும்-இங்கிலைதான்
வன்பொய்யாந் துட்டர்கடா மேலாதா னீதுபொய்யோ
வன்காணு மையமிதி லிங்கு. (சுசு)

அறிவின்ப மாயி னயலின்ப மின்றே
அறிவன்றி யின்றே லறியேன்-அறிவாக
இன்ப நுகர்வானை யென்னி லதுசுகிப்பை
இன்பமதாக் கண்டிங் கிருந்து. (எடி)

உள்ள தறிவே யொழிந்தவெலாந் தோற்றமதாம்
எள்ளளவு மையமிலே யேதானும்-உள்ளதிதே
யாகும் பரமபர மந்தவிரண் டுண்மைநிலை
எதுதும்யாஞ் சொல்லவினி யிங்கு. (எக)

ஏட்டறிவு காலவறி வீங்குகிரி யாயோக
நாட்டறிவிம் மூன்றபர ஞானமதாம்-நாட்டம்
அயலா கலின்ஞான மல்லவே யல்ல
மயலகற்றற் கில்லை வழி. (எஉ)

தன்னை யறியுந் தனக்கபலுந் தானறியும்
என்ன மயறனையு மீங்கக்ற்றித்-தன்னந்
தனியா யொளிர்வதுவே சாற்றுபர ஞானம்
இனியநிலை யீதொப்ப திற். (எங)

தன்னை யறியாது வேறுண்டாய்த் தானறியா
தென்னுநிலை சித்தாந்திக் கீதேற்கில்-துன்னுசடம்
வத்துசித் தாந்த வகைதெரியார் சொல்வதொக்கும்
இத்துறையி னீயிழியே லிங்கு. (எச)

திரஞான வுண்மைநிலை செப்புதுமுன் சொன்ன
இருவகைக்கு மாதார மீதால்-பரமபதம்
ஆகுந் திரஞான மப்பா விதுலாய்த்தற்
கேகுநெறி சொல்லுதும்யா மிங்கு. (எஙி)

இல்லை பரஞான மீங்கபர ஞானமின்றேல்
இல்லை திரஞான மிந்தபரம்-இல்லையதேல்
அத்திரஞா னந்தானே யாம்ப்ரக்ஞை யென்றதுவும்
இத்திறங்கள் டாலைய மேன். (எசு)

பராபரமா மிங்கிலேயே ப்ரக்ஞான மேற்கும்
தாதலத்தில் வஸ்திதபோற் சாற்றுர்-நிராசனமே
வஸ்துங்கே யிதெனற்கே மாவாக் கியத்தெழுவாய்
அத்திபா ரம்போலு மாம். (எஎ)

உ-வது-வாக்கியம்.

ஈனென்னு ரில்லேயதா ஞனென்ன லின்னதெனத்
தாணுணர்த்த ஞானமுதல் சாற்றிற்றே-ஆனதிறம்
பின்னாகம் ப்ரம்மாஸ்மி பேசுமிரண்டாமொழியில்
பன்னுமறி வேயகமாம் பார். (எஅ)

அகமெனலிங் காரியமே யாதலினு னென்பர்
மிகவுரார் பாஷைகிலே வேறென்-றகமதனுற்
கண்டபடி தூஷிப்பார் கற்றுரிவ் வுண்மைகிலே
கண்டதனி லிற்பார்கள் காண். (எக)

அறிவல்ல ஈனெனலிங் காகுமய லென்பார்
வெறியெல்லாம் வேதாந்தம் வென்றிங்-கறிவாக்கும்
ஆதலினு னைறிவேன் முய்ந்தவிடத் தேபிரமம்
ஓதயிக்க மேயஸ்மி யோர். அ

ஊ-வது-வாக்கியம்.

அடுத்தமா ணக்கனீ யாென்று சொல்லி
தடுத்தாள வேண்டுமதாற் றக்கோய்-அடுத்தமொழி
மூன்றதனிற் றத்தொமசி முன்பின் பிரகடிதம்
ஆன்றவதிற் றெம்பதநீ யாம். (அக)

நீயெனலு மான்மாவாய் கேருமத னுலறிவே
நீயிலாய்க் கண்டொளிர நில்லென்றிங்-காயமொழி

அப்பாம் பிரமாஸ்மி யாகுகிலே சானேயாம்
இப்பகுப்பைக் கண்டொளிர்வை யிக்கு. (அ2)

ச-வது-வாக்கியம்.

அறிவெனலே யான்மாவா மாகா தயலென்
றறியவய மான்மாவென் றுங்கே-நெறிமுறையே
நான்கா மொழியதனி னுட்டியது மோருணர்வாய்
ஆன்மா வொளிர்வதறகே யாம். (அங)

அறிவே சிவமவ் வறிவேனு மவ்
வறிவேகீ யாமவ் வறிவே-நிறையான்மா
என்றுனர்த்த லிங்நான்கு மேகவறி வாக்காண
அன்றுமறை யின்கருத்தே யாம். (அச)

நீங்ன் சிவமான்மா நீங்கா வழக்கமதால்
ஆனு மறையிவற்றை டாய்ந்தொன்றுய்த்-தானுக்கச்
செய்தகரு ணைமொழியே திவ்யமகா வாக்கியந்தான்
எய்துமோ வீதெவர்க்கு மிங்கு. (அஙு)

அவனிவனீ நானென்ன நடங்கிற்றே யாவும்
இவற்றினுண்மை காணி னெவையும்-இவைபோலாம்
ஓர்துறையின் மூழ்கி னுவர்நீர் முழுதும்போன்ம்
ஓர்மினிதை யுய்யும்வகை யுற்று. (அசு)

நான்மறையுமோர்மொழியா னுட்டாதென்னேர்பொருளை
ஏன்போகு ன்மயமதிங் கேனையதில்-நான்மொழியில்
மூன்றுவ தேற்பதென்னே முக்கியமா யெவ்வெவரும்
ஆன்றவுப தேசமொழி யாம. (அஎ)

இம்மொழியா லெவ்வெவரு மேற்பானேன் பற்பலவாய்
இம்மொழியின் சத்தமதா லெங்ஙனெனின்-இம்மொழிக்
பாஷியமே தத்தாற் பகர்ந்தசத்தார்த் தங்காணும் [குப்
பாஷியமே தங்களிலீ பார். (அஅ)

சங்காமே பாஷியத்திற் சத்தியமா மேனியவை
பங்கமதாஞ் சோதித்துப் பார்க்குங்கால்-இக்கணுவும்
ஐயமிலை யெங்ஙனெனி னற்பமும் வேறுண்டாகில்
மெய்யறிவுக் கங்கவையே மெய். (அக)

அனுபவத்துக் கொவ்வாமை யற்பமதாம் யாதும்
அனுபவமோ சித்துசட மாகா-தினியசிற்
சோதிவடி வாய்விளங்கல் சொல்லல்ல மெய்ம்மையே
ஆதிவடி வாதலினு லங்கு. (கஅ)

வத்துபரி சோதிப்பால் மண்ணுதி தத்துவங்கள்
எத்திறத்து மில்லனவா யீங்கமையும்-அத்தகையால்
எல்லாமு மித்தையதே யீங்கறிவே யுண்மையதாம்
நில்லாதென் கண்டிங் கிலை. (கக)

கல்விச் செருக்காற் கருதும் பொருமையினுற்
செல்வச் செருக்காற் றிடமுடலால்-வல்வினையின்
காரணத்தால் மூடத்தாற் கண்டிங் கிலையேலார்
ஆரணத்துக் கென்னட்ட மாம். (கஉ)

எந்தையே வாக்கியத்தை யீங்கு விளக்கிவித்தாய்
இந்தமுறை முன்பின்னென் றீங்குறைப்பை-யந்தமிலாய்
என்றிறைஞ்ச வாசானு மெம்பெருமா னுண்மைநிலை
யென்றுமுதற் சொன்னதா மிங்கு. (கங)

நானென்ப தின்றே னவிலுவது மின்றதனுல்
நானெனலைப் பின்னிங்கு நாட்டியதாம்-நானென்பான்
முன்னிலையி லென்று மொழிந்தார்பின் னீயென்றிங்
கின்னென்று சொல்வ னினி. (கூச)

நானெனலு நீயெனலு நாடுங்கா லான்மாவாம்
ஆனதிறம் பின்னீ தறைந்ததாம்-ஏனிதனுல்
எல்லா மொருபொருளென் றீங்கதனைக் கல்லெய்ய
நல்லாய் வகைதேடு நன்கு. (கூஞ)

அறிவி னிலையை யறிந்ததுவாய் நிற்கில்
அறிவைமே லிட்டநிலை யப்பால்-நெறியாகக்
காட்டாதிங் கென்றதனுற் கட்டுரைத்தோமுக்கியத்தை
பாட்டதனுற் கிட்டும் பதிந்து. (கூசு)

அறிவாஞ் சுயஞ்சோதி யாமெனற்கிங் நான்கும்
நெறியே மறையுரைத்த னீதி-அறிவேநான்
நானே யறிவென்று நானறியக் கூறுமென
ஞானகுரு தாள்பணிந்தா னன்கு. (கூஎ)

யுத்தி.

சுயஞ்சோதி தன்னையே சொல்வரறி வென்னச்
சுயஞ்சோதி யெங்ஙனஞ் சொல்லும்-நயந்தென்று
பல்கால் விழுந்து பதம்பணிந்திங் கேத்திநிற்க
ஒல்காது கூறு முவந்து. (கூஅ)

இவ்வுலகந் தீபாதி யிந்திரிய மானதம்பின்
னிவ்வுயிர்சை தன்யமுந்தா னிம்முறையே-செவ்விதா
யொன்றையொன்று நின்றிங்கே யோயாம லேவிளக்கும்
இன்றுன்னுள் ளேயறிதி யிங்கு. (கூகூ)

சைதன்ய மேதாலே தான்விளங்கு மென்னுதே
சைதன்ய மேதன்னைத் தான்விளக்கும்-சைதன்யம்
உன்னு ளொளிர்வதுவே யொன்றுல் விளங்குவதோ
உன்னுளே காண்டி யுவந்து. (ஈ)

ஒளிர்வதே சத்தி தணர்வதுவே சித்திங்
கொளிர்வதுவா நிற்ற லுவப்பாம்-எளிதறிதி
சச்சிதா நந்தமதைத் தக்கோ யெனவுணாக்க
நச்சி யடிதொழுதா னன்கு. (ஈக)

ஒளிர்வதுவே சத்தாதிக் குண்மைவடி வந்தான்
ஒளியாதி தீபத்துக் குண்மை கொளுமுனமபோல்
இன்ன தறிவினிலே யீங்குன் னிலையுமிதே
அன்னதனல் வேறன்ற தாம். (ஈஉ)

சத்தாதி யேகவுரு சாற்றுவது வேதாந்தம்
சத்தாதி மாறுஞ் சமயநிலை-பித்தாகி
ஞாயந் துவிதமதா னல்லா யதுசாலே
தூயநிலை யீங்கிதுவோ சொல். (ஈங)

சுருதியுத்தி யொத்துச் சுவானுபவங் கண்டாய்
திரிவுமய லின்றித் திகழ்ந்திங்-கிருவென்று
சொல்லித் திருவடியைச் சூட்டி யநுபவத்தை
நல்லா யுரையென்ற னன்கு. (ஈச)

அன்ன னெடுநோ மாங்கே சமாதியிருந்
தன்னநிலை யாய்விழித்திங் காசான்முன்-அன்னையே
அப்பனே யானு வழுதேயென் றேவணங்கிச்
செப்பலுற்ற னன்ன தெரிந்து. (ஈடு)

சிந்தனைவிளக்கம்.

எத்தனையோ சிந்தையில்வந் தேகுவதாற் சொந்தமல
எத்தனைக்கு வாடுவதிங் கீதறிவன்-றத்தனைக்குஞ்
சிந்தையிட மாவதன்றிச் சிந்தை யவையல்ல
சிந்தைசயஞ் சோதியென்றுன் தேர்ந்து. (நசு)

ஜீவனிலை.

தானுப்பா சத்தறிவாய்த் தானேர் முதலன்றுய்
கோனுய் மனுதிக்குக் குற்றமதாய்-நானுதல்
அல்லவற்றிற் கென்றறிந்தே னேயனே ஜீவநிலை
பொல்லனே னின்னருளிற் புக்கு. (நஎ)

யானெனதென் றன்னியமா யாவுமது வாய்த்தோன்றத்
தானகத்தாற் கற்பித்துச் சத்தியமாய்த்-தானெண்ணி
நிற்குநிலை சாக்கிரமா நித்தியனே யென்றுணர்ந்தேன்
சற்குருவே நின்னருளாற் றுன். (நஅ)

இவ்வழுத்தந் தானேநின் றிங்னினைவு சோர்வதனில்
இவ்வுலகா யானெனதா யெவ்விடத்துஞ்-செவ்விதாய்த்
தோன்றி யுழல்வதுவாய்த் தோன்றல் கனவென்று
சான்றுநான் கண்டேன்றனித்து. (நகூ)

இவ்வழுத்த முஞ்சோர்வி லொன்றுமின்றிப் பாழாக
எவ்வுயிர்க்குங்காண்பதினுலெங்கெங்கும்இவ்வகையைக்
கண்டேன் சுழுத்தியதாக் கண்மணியே நின்னருளால்
தொண்டனே னின்னுருவிற் றேய்ந்து. (நஐ)

இப்பா ழறியுமறி வீங்ஙகலா நின்றுவிழித்
தப்பாழ் நிலையுனைக்கு மாங்கறிந்து-தப்பா
தறிவிருக்கை யுண்மை யதுவே துரியக்
குறியறிந்தே னின்னருளைக் கொண்டு. (ஈகக)

ஈசனிலை.

ஆனைத்துலகும் தானு யனைத்துயிரும் தானுய்
ஆனைத்தும் படைத்தழிப்ப தாகி-இனைத்தன்றுய்
நிற்குநிலை யீசனென நின்விழியா லின்றுணர்ந்தேன்
அற்புதமென் சொல்லே னறிந்து. (ஈகஉ)

அவ்வறிவே தாக்கம் றகன்டபரி பூரணமாய்
எவ்வண்ட முந்தானு யிங்கன்றுய்-எவ்வகையும்
நிற்குநிலை யென்றுணர்ந்தே னீங்காச் சிவமனவாய்க்
கற்பனைவிட் டங்கதனைக் கண்டு. (ஈகங)

இன்னநினை வின்றடிப்பே யிங்னினைவு சோர்வதனில்
இன்னவித மாய்க்காண்ட லீதுகன-விங்நிலையும்
சோருமிடம் பாழே சுழுத்தியதென் றேயுணர்ந்தேன்
ஆரியனே நின்னருளா லங்கு. (ஈகச)

இப்பா ழறியுமறி வீதே சிவதுரியம்
எப்பா லுயிரவத்தை யெம்மூன்றும்-இப்பாலுக் [லே
கோரொன்றே யென்றுணர்ந்தே னுன்னருணோக்கத்தா
சாருமோ வையமிதி ருன். (ஈகடு)

பாநிலை.

இவ்வீ ரறிவாக வீங்கொளிர்வ தெந்தவறி
வவ்வோ ரறிவேதா னுகுபரம்-எவ்வெவ்

வுபாதி கடந்தாரு மோர்தலரி தாகும்
உபாதிமய மல்லதா லுற்று. (ாகசூ)

இவ்வி ருபாதி யிழந்தறிவு தாயொளிர
எவ்வசத்து மாகா தினிதிருந்து-எவ்வடிவுஞ்
சின்மாத் திரமாகச் செய்தல் பாநனவென்
றுன்கருணை யாற்கண்டே னுற்று. (ாகள)

சுயஞ்சோதி யாநினவுஞ் சோருமிடத் தங்நன்
வியந்தொளிர்வ தேயன்றி வேறுய்-நயந்ததுவாப்
நில்லாமை யேகனவாம் நின்னருளா லென்றுணர்ந்து
சொல்லாமற் சொன்னேன் றுணிந்து. (ாகஅ)

இவ்வா சனையுந்தா னீங்கே நழுவுமிடத்
நவ்வறிவே யாநந்த மாய்மிக்கு-எவ்வசத்து
மன்றி மவுனமதா யாதனன விம்சுழுத்தி
இன்றே நிலைபோ லிது. (ாகக)

அம்மவுன மேலிட் டதுவிதலா யீததுவாய்ச்
சும்மா விருத்த றுரியநிலை-யெம்மானே [ன்
என்றுணர்ந்தே னின்னருளா லெப்பிறவிக் கும்மஞ்சே
உன்பணிக்கே யாளா யுறில். (ாஉஎ)

எக்குணமும் தானகி யீங்கல்ல வாய்க்கானே
மிக்கெங்கும் தானுய் விழுமியதாய்ச்-சிக்கதிலா
நிற்முறுரி யாதித நித்தநிலை யென்றுணர்ந்தேன்
உற்றுணரார்க் கீதே றறம். (ாஉக)

அயிக்கமதிங் கேலா தகத்தாற்றா டிப்பர்
மயக்கந் தவிர்க்கறியா வல்லோர்-மயக்கமதோ
ஓர்போ தறிவாகி யோர்போதிங் கின்பமதாய்ச்
சார்வதெவன் சந்ததமும் தான். (ாஉஉ)

அறிவே யுறக்கத்தி லாநந்த மீதே
யறிவாம் விழிப்பிலிதை யாயார்-வெறியதனுல்
ஆநந்த மேயறிவா மவ்வறிவே யாநந்தம்
ஈனந்தா னெங்கே யிதில். (ாஉங)

ஆநந்த மேனினைவா யாகித் திரைத்தெளிவில்]
ஆநந்த மன்றியிலை யாயுங்கால்-ஆநந்த
மாத னினைவேயா மாகா ரிலையிவ்வா
ருதலினும் நல்லோ மவர். (ாஉச)

நான்ருனீ தானென்றும் நண்ணுமவன் ருனென்றும்
மூன்றிடத்துந் தானென்ருன் மூவாது-தான்றனியே
நில்லா மொழியிலைபோ னில்லா வெவையுமிலை
எல்லாந்தா னகு மியைந்து. (ாஉஞ)

தானே யறிவாகுந் தானே சுகமாகும்
தானன்றி யிவ்விரண்டுந் தானிலையால்-தானறிவா [யென்
நந்தமென்ருர் மூதுணர்ந்தோர் நண்ணுமுடி வாமொழி
நெந்தை யடிதொழுதா னிங்கு. (ாஉசு)

எல்லாமா யன்ரு யிருக்குநின் னுண்மைநிலை
பொல்லனேன் கண்டு புகல்வதெவன்-இல்லார்க்கு
மாநியம் போற்கிடைத்தை வந்தடியேற் கென்றேத்தி
மோநமா நின்ருன் முடிந்து. (ாஉள)

இவ்வாறு தானங் கிருந்து கொடுநேரம்
ஒவ்வா வனுபூதி யோடிழிந்-தெவ்வாறும்
ஐயமிலா தின்னு மடியேற் குரைப்பதுண்டு
மெய்யனே யென்றுன் விழுந்து. (நாஉஅ)

உலகமாத் தோற்றுதிங் குள்ளமை வடிவா
யிலகுமுறை யெங்ஙனெனி னென்றும்-பலபலவாக்
காணும்போ தெல்லாங் கலங்கா தறிவுருவாக்
காணிலுல கெங்கே நீகாண். (நாஉக)

திரிபுடி பேதத்தைச் சேதிப்ப தெங்ஙன்
றிரிபுடியின் ஞானமொன்றைச் சிந்தித்-திருக்கவே
யேனை யிரண்டு மெழின்ஞான மாய்விளங்கும்
ஏனைய முண்டா மினி. (நாஉம)

மூன்றுக முத்தி மொழிவர்சிலர் யாதுக்கேல்
மூன்றுக வல்ல முடிவிலதா-நான்றுனே
யேம்பனறி வன்றியணு வீங்குளதாக் காட்டுவரோல்
ஏற்பரோ மூடருந்தா னிங்கு. (நாஉக)

பொன்னுற் பலபணியும் புந்தியாற் காண்பவர்போல்
நின்னுருவா யெவ்வெவையு நீகாண்டி-இன்னபடி
வாழ்த்திகுரு செல்ல வணங்கித்தன் னுள்ளமைதனில்
ஆழ்த்தித்தா னுனை னவன். (நாஉஉ)

நாஸ்திகமதக்கண்டிதக்கழற்றி


முற்றிற்று.

படலம்-கக-க்கு ஆ—னி—(எஎச)

திருச்சிற்றம்பலம்.

கஉ-வது

ஆஸ்திகநாஸ்திகர்கட் குணர்வுறுத்தல்.



உலைவழி போகிற் கிடைக்குமுள் கள்ளர்
களைந்து பெருவழி காணில்-உலைவுறுமோ
இல்லையுள் டென்னன்மி னெல்லா மவசரமே
அல்லவிது வஸ்துநிலை யாம். (க)

இல்லையெனிற் பாழா மிருக்குதெனிற் றேற்றமகாம்
இல்லையுண் டென்னன்மி னீதுணர்ந்தும்-கில்லறியீர்
ஆய்ந்து நடுநிலையி லாஸ்திகர்காணாஸ்திகர்கள்
சாய்ந்திவற்றிற் போகாது தான். (உ)

இல்லையென்று கண்டதெவனென்னகண்டுருண்டென்று
இல்லையெனப்போய்விடுமோவெத்துயரும்வல்லமைக்கு
ஆய்ந்துணார் தென்னகற்றி ராஸ்திகர்காணாஸ்திகர்கள்
வீய்ந்துநீர் போவதே மேல். (ங)

இருவர் வழக்கதனி லில்லையுப்பு சப்பு
ஒருவா மயக்கே யுடையீர்-பெருவாயால்
நாட்டுவதா லென்னபய னஸ்திகமு மாஸ்திகமும்
ஒட்டுமோ நும்மயலை யோர்ந்து. (ச)

இல்லதல வுள்ளதல வென்பவர்சொல் கேளாதென்
வல்லமோ தீர்ந்தாரின் வஸ்துநிலை-அல்லவற்றை
நானெனலைப் போக்கறியீர் நாஸ்திகர்கா ளாஸ் திகர்காள்
எனுமக்கு வீண்வாத மிங்கு, (டு)

இல்லதெங்கே யுள்ளதெங்கே யேதுநீர் கண்டறியீர்
இல்லையென்பீர் சொல்லாலே யெத்துயரும்-தொல்லைமய
அற்றதெனற் கேதுகுறி யாஸ்திகர்கா ளஸ்திகர்காள் [ல்
இற்றைநா னென்றறியீ ரிங்கு. (சு)

ஒருபோது தூல மொருபோது சாயை
ஒருபோது பாழா யுலகம்-திரிவதெவன்
நாடறியீ ரீதுண்மை நாஸ்திகர்கா ளாஸ்திகர்காள்
ஏடகற்றிச் சொன்மினிதை யிங்கு. (எ)

இவ்வாறிங் காகுங்கா லெவ்வா றிருந்தறிவம்
அவ்வாறிங் காகுநா மாரறியீர்-எவ்வாறு
நாட்டுவீர் நும்மதத்தை நாஸ்திகர்கா ளாஸ்திகர்காள்
நாட்டுமினே யென்னெதிரி னன்கு. (அ)

விரிலொடுக்க மின்றி விளங்குஞ் சகத்து
விரிலொடுக்க மேற்பானேன் மெய்யாத்-தெரிகிலிரோ
நாடோறுங் கண்டிருக்க நாஸ்திகர்காளாஸ்திகர்காள்
நாடாதென் னிம்மயக்கை நன்கு. (கூ)

ஏதற்கு வெளிப்படுத லிம்மூன்று காட்சி
அதர்குரிய வுண்மைநிலே யாயீர்-எதற்குமே
ஆசிர் விடைகொடுத்தம் காஸ்திகர்கா ணஸ்திகர்காள்
ஏகாதென் சான்ரோ ரிடை. (ஐ)

அறிவதொன்று தோற்றுவதொன் ருகு மிரண்டே
பிறிதிருக்கக் கண்டிலம்யாம் பின்னும்-பிறழ்வுதான்
நண்ணலெதற் கென்றறியீர் நாஸ்திகர்கா ளாஸ்திகர்காள்
எண்ணுவதென் வல்லவொன் றிங்கு. (கக)

தோற்றமதையுண்மைபெனச்சொல்லவலீர் சொல்லறியீர்
தோற்றமதம் காதாரஞ் சுத்தமா-ஏற்றிடுது
மல்லதுஞ் சித்தாந்த மாஸ்திகர்கா ணஸ்திகர்காள்
நில்லுமி னுண்மைதனி னேர். (கஉ)

அறிவதற்கு மாறலெனி லங்கங்கே நின்று
அறிவதெது தூலாதி யவ்வா-றறிவதற்கன்
ருனலென் வாதிப்பீ ராஸ்திகர்கா ணஸ்திகர்காள்
எனனீர் வல்லவொன் றிங்கு. (கங)

உபாதித் திரியமதா வுற்ற வறிவு
உபாதித் திரிபமல வோரில்-உபாதிகடம்
தாயநீர் வல்லரலி ராஸ்திகர்கா ணஸ்திகர்காள்
வாயுமக்கேன் பேச வலிந்து. (கச)

அறியும் பொருளெல்லா மன்றிங் கறிவேல்
உறுதியதம் குண்மையுரு லோரீர்-வெறியர்போல்
நாட்டுதற்கோ நும்புலமை நாஸ்திகர்காளாஸ்திகர்காள்
கேட்டுய்ம்மி னல்லோர்பால் கிட்டி. (கடு)

அறிவினிலே யாழுத்தை யாய வறியீர்
அறிவணுவாக் கொண்டளப்பீ ராஞல்-வெறியனென
லாகாதோ நுந்திறத்தா லாஸ்திகர்கா ணஸ்திகர்காள்
ஏகாதோ நும்வாத மிங்கு. (கசு)

தூலாதி மூன்றுகத் தோற்றமுத லேதெனிலோ
தூலமென்பீ ரோரவஸ்தாத் தோற்றமன்றே-தூலமதை
ஆயி லணுவன்றி யறியோ மகத்துருவம்
ஞாயமிலே உண்மையென னன்கு. (கள)

நனவெங்கெங் கேயுண்டோ நாடு முலகம்
நனவெங்கெங் கேயிலையோ நாடா-நனவளவே
யன்றியெங்குங் காணுதென் ஞஸ்திகர்கா ணஸ்திகர்காள்
என்றடங்கு நுங்கர்வ மிங்கு. (கஅ)

தூலமும் மற்றவைபோற் றோன்றி மறைவதினுற்
றூலமுத லென்றேலோஞ் சோதனையில்-தூலமுதல்
மூன்றுகத் தோற்றலெது முற்றுமுணர்ந் தார்க்கரிது
ஊன்றினின் றேதம் குறில். (கசு)

அந்தமுத லிம்மூன்று மல்லவினை மாறுவதால்
அந்தமுத லேதோவென் றுயாதென்-எந்தமட்டும்
ஆகுநுஞ் சித்தாந்த மாஸ்திகர்கா ணஸ்திகர்காள்
ஏகுமின் சான்றோ ரிடை. (உ)

அறிவுசக மிவ்விரண்டிற் காகு மயக்கை
அறிந்தகற்றம் கேற்புநெறி யாயீர்-திறந்தெரிந்து
நாட்டுவிரா நும்மதத்தை நாஸ்திகர்கா ளாஸ்திகர்காள்
ஓட்டுவோ மெங்கு முமை. (உக)

நம்பிறப்போவன்றியிங்கு நாடுஞ் சகம்பிறப்போ
வம்பகலா தீதுனரு மட்டுமேலோ-நம்பன்மின்
ஆயாது நும்மதத்தை யாஸ்திகர்கா ணைதிகர்காள்
ஓயாது நல்லோர்பா லுற்று. (உஉ)

எம்மயலுந் தீர்க்கறியீ ரெப்போ தகற்றுநிற்பீர்
இம்மை யகலுமெனி லென்செய்வீர்-இம்மைபோல்
ஆகுமோ வெப்பிறப்பு மாஸ்திகர்கா ணஸ்திகர்காள்
ஏகுமின் சான்றோ ரிடை. (உங)

நமக்குப் பிறப்பிறப்பு நஞ்செயலோ வன்றே
நமக்கிறையுண் டேலாதென் னட்டுத்-தமக்குரிய
போகத்தைத் தள்ளாதென் பொய்யலவோ நாஸ்திகர்காள்
ஏகத்தை யேதறிவ திங்கு. (உச)

ஏத்திட்டு மென்னபய னெம்பகவா னுண்டென்று
போற்றுவதென் னல்லவற்றைப் புத்தியெங்கே-கூற்றன்
வருமுன்ன ராஸ்திகர்காள் வந்துனர்ந்து நின்மின்
திரிபின்றி யெங்குஞ் செறிந்து. (உஇ)

தனுவா வகம்புறத்திற் சத்தியமாக் காண்பீர்
தனுவலவே யெவ்வுயிருஞ் சற்றும்-தனுவன்றித்
தன்னையுங் காணறியீர் சாதிப்பே ணஸ்திகர்காள்
உன்னுதென் னும்மடமை யுற்று. (உசு)

எதுவுலகாத் தோன்றி யிலதா மறையும்
அதுகாண் வகையறியீ ரந்தோ-பதிநிலையைக்
கண்டவர்போற் கோரணையாற் காட்டவலீ ராஸ்திகர்காள்
உண்டோ தளியன் புமக்கு. (உஎ)

இருந்தபொரு ளெவ்வா றிருந்தபடி கீரும்
இருந்துவிடி லன்றே விலகும்-இருந்தயலாக்

காணிலுல காக்காணுங் கண்டிலிரோ நாஸ்திகர்காள்
காணுதென் னிஞ்ஞாயங் காண். (உஅ)

விழிப்பிற் சகத்தும் விருப்பொழிவிற் பாழும்
அழிந்தொன்றுங் கண்டறியீ ரந்தோ-எழுத்தகத்தாற்
கண்டபடி சொல்லிற் களைந்திடுவ மாஸ்திகர்காள்
எண்டிசையுந் தங்கா திவை. (உக)

உடலுயிரொன் றுய்மீன் றிறவானேன் வேறுய்
உடலன்றே போக முவத்தல் உடனுனக்
கொள்வதெதையிவ்வுடல்பின்கொண்டதனுலன்றியற்கை
கொள்வதென்று நித்ததிர்த்தி கூறு. (நல)

இன்னமு நாஸ்திகர்கா ளேனயலே நானென்னல்
அன்னதறி வன்றியுடம் காகுமோ-இன்னமயல்
வந்ததெதி னுலே வருவானே னிர்நிமித்தம்
வந்ததெவன் மூன்றவத்தை மால். (நக)


காமாதி தர்க்குணமுங் காசகற்று நற்குணமும்
ஆமாறிங் கெத்தா லவாவெதனுல்-போமாறிங்
கேதா லியற்கையென்றே யென்சொலினு ஞாயமன்றே
ஏதாகு நம்புலமை யிங்கு. (நஉ)

ஆதாரம் பாவனைகட் காய்கிலிரோல் யாதுபயன்
ஆதாரங் காணவன்றே வாக்கினர்-ஆதாரந்
தேடிப் பிழைமினெனிற் றிட்டுவதென் னஸ்திகர்காள்
நாடிப் பாராதென் னலம். (நங)

அல்லவற்றை நானென்று மாகுஞ்சுகமென்றும்
மெல்லநீர் கொண்டமுயல் விட்டகல-ஒல்லுநெறி
நாடுமி னேன்கெடுவீர் நாஸ்திகர்கா ளாஸ்திகர்காள்
ஓடி மகானடிக்க ணுற்று. (நச)

ஆஸ்திகநாஸ்திகர்கட் குணர்வுறுத்தல்-முற்றிற்று.

படலம்-கஉ-க்கு-ஆ-கவி-எஙஅ.



உ

திருச்சிற்றம்பலம்.

கந—வது

போலிஞானக்கழற்றி.



[ள்

உண்மையென்றும் போலியென்றுமோதுமிருஞானத்து

[தாப்

உண்மையெனப் போலியினை யோர்ந்திங்கே-திண்மையய

போதிக்கு ஞானிகட்குப் போதமிஃ தென்றுணர்த்த

வாதிப்ப மென்றூர் மகிழ்ந்து. (அ)

சித்துசடத் தின்சகிதஞ் சித்துசடத் தின்ரகிதம்

ஒத்தவே கத்துவந்தா ரேரிரண்டாம்-இத்துவிதத்

தொன்றுபந்த மொன்றறுதி யோராத ஞானிகளே

இன்றுவந்து கேண்மினிதை யிங்கு. (உ)

அறிவனவெல் லாம்பொய் யறிவேமெய் யென்றல்

செறிரக மேயென்று செப்பும்-வெறிகொண்ட

ஞானிகளே கேண்மினிதை ஞானமிஃ தென்றறியீர்

ஆனரு கம்முமக்கே யாம். (ஊ)

வேதாந்த சித்தாந்த மெய்ந்நிலைமை காணாது

வேதாந்தஞ் சித்தாந்தம் வேறன்று-நாதாந்தத்

தென்றளறு ஞானிகளே யேதொன்றுப் நீர்விளங்கல்

இன்றே மதியென் னிது. (சு)

ஞானியென யாவருமே நன்குமதிக் கப்பெற்று
ஞானங் கனவிலுந்தா னண்ணுத-ஞானிகளே
சித்துசட மொன்றுக்குத் தேசாமை யோஞானம்
பித்தனுந்தான் சொல்லான் பிறழ்ந்து. (நு)

வழுக்குமயம் வேதாந்த வஸ்துநிலை யன்றே
விழிச்சொருகிக் காட்டுவீர் மெய்போல்-வழுக்கறுக்கீர்
பக்குவம்வந் தாற்றெரியும் பாரென்பீர் ஞானிகளே
இக்கதைக்கிங் கின்னடிப்பா லென். (சு)

உபாதான மோடிங் குபாதேயம் வேறன்
றுபாதானஞ் சிற்சடமா யொன்றும்-அபாவமதா
வாக்கம் கெவையு மறியாத ஞானிகளே
தாக்கறுவ தெங்ஙன் சகம். (எ)

விருப்புவெறுப் புக்கிடந்தான் மேவுலகென் றெண்ணி
யருவருப்பு கொள்வதெவ னங்தோ-தெரிகிலிரோ
நாமே யிடமாவோம் ஞானிகளே கேட்டறியீர்
நாமாரென் றேர்ந்தக்கா னன்கு. (அ)

என்னவொரு ஞானி யெழுந்தருகே வந்தையா
இன்னநிலை யென்றறியீ ரிவ்வுலகை-இன்னின்ன [ளும்
தின்னகுவை மின்னகுவை மென்றிருப்பா லெப்பொரு
ளன்னவற்றுற் றுன்பவின்ப மாம். (கூ)

எங்கே யுலகன்றி எங்கே தெரிவன்றி
எங்கே சகத்தன்றி யித்தெரிவும்-எங்கே
தெரிவன்றி யிவ்வுலகும் நீதுசுக மெங்கே
தெரிவுக் குலகன்றி செப்பு. (ஐ)

ஆகார மல்லி யகிலசுக துக்கமெங்கே
ஆகார மேதுலகை யன்றியே-ஆகாரம்
ஆத லறிவன்றே வாமோ வுலகின்றேல்
ஓதறிவின் கன்றி யுலகு. (கக)

காணப் படுமிதுவேம் காண்பதனைத் தள்ளியெங்கே
காணப் படுமிக்கல் கண்ணுமோ-காணத்
தகுங்கண் சுயம்பதனைக் கண்டிதுகல் லென்றுரல்
தகுங்கண் ணதற்கனியந் தான். (கஉ)

அப்படியார் சொல்வரெனி லப்படியல் லாதக்கால்
இப்படியா ரேற்பரிதை யிதறிவோ-எப்படிதான்
சொன்னலு நீமறப்பை சும்மா விருப்பனெனில்
என்னு முனக்கிதனு லிங்கு. (கங)

சும்மா விருத்தல் சுகஞ்சுகமென் றுசொன்னில்
சும்மா வெதுவிருத்தல் சொல்லென்ன-சும்மா
மொழியா திருத்தலெனின் மோகாதி போமோ
பழிமனந்தா னென்னிலது பார். (கச)

இரியாயோ கத்தாலே கிட்டினு மீளும்
ஒருவர்ஞா னத்தா லுதவும்-திரிபின்றிச்
சும்மா விருக்குநிலை சும்மா கிடைக்குமோ
அம்மா வரிதரிதிவ் காம். (கஞ)

ஏட்டில் வழக்கறுத்தா ரிங்குமிலை யெங்குமிலை
காட்டத்திற் கண்டன்றி ஞானிகளே-ஏட்டறிவால்
அம்பரமு மிந்தையிதென் றுக்க வகையறியீர்
இற்சொரூப மக்ஞரிரோ தேர்ந்து. (கசு)

பரமான்மா மாயை பதைமனமிந் நான்கும்
சுருதிமுதற் காரணமாச் சொல்லும்-விரியுலகுக்
கீதென்னே நான்காக வீங்கிசைத்தல் ஞானிகளே
ஓதுமினே யென்ன வுவந்து. (கள)

விழிப்புறக்கந் தன்னில் விரிந்தொடுங்கல் யாதோ.
எழுத்தில் படித்ததைவிட் டிங்கே-விழித்துள்ளே
கண்டைய மின்றியதைக் காட்டறியா ஞானிகளே
உண்டுகொல் ஞான முமக்கு. (கஅ)

எல்லாமா யல்லவுமா யீப்கிருப்பீர் நாடோறும்
எல்லாமன் றல்லவுமன் றீங்கறியீர்-நல்லார்போல்
ஞானநிலை பேசுவீர் ஞானமிஃ தென்றறியீர்
ஞானிகளே யீதோ நலம். (கக)

பசுபதிவே றென்றும் பசுபதியொன் றென்றும்
இசையவே யாவர்க்கு மிங்கே-வசையின்றி
நாட்டுவதென் வேதாந்தம் ஞானிகளே கேட்டறியீர்
ஏட்டறிவை விட்டுணர்மி னிங்கு. (உய)

எப்பொருளு நாட்டறியீ ரீதென்றுங் காட்டறியீர்
தப்பையே ஞானமெனச் சாதிப்பீர்-எப்பழிப்பும்
போக்காது ஞானிகளே போதமறி யாரேம்பர்
ஏக்கமிலை வாழ்த்துவதா லிங்கு. (உக)

சித்தஞ் சிவமாகச் சிந்திப்ப மென்றுரைப்பீர்
சித்தஞ் செகவடிவாச் சிந்திப்பீர்-மித்தையதா
வாக்கவறி யாதநிலை யையையோ ஞானிகளே
நீக்குவதென் றிருபழியை நின்று. (உஉ)

இலக்கணங்கம் முர்முன் னிலக்கியவல் லார்கள்
அலக்கணுறு வார்போலிங் காவீர்-கலக்கமின்றித்
தன்னிற் றெளிந்தார்முன் றற்றோரா ஞானிகளே
உன்னுவதென் னுங்குருவென் றுள். (உங)

விழிப்பிற் சகமும் விழிப்பொழிவிற் பாழும்
பழக்கமதாய்த் தம்மினிதம் பார்த்தும்-பழிப்பதெவன்
மித்தை யுலகமெனல் மெய்ஞ்ஞானி காள்போக்கீர்
புத்திமயக் கந்தன்னைப் புக்கு. (உச)

நினைவுள் ளளவு நிகழு முலகம்
நினைவன்றி யெங்கே நிகழும்-இனையதனைச்
சங்கற்ப மென்றுற் றடிப்பதெவன் ஞானிகளே
இங்கற்பந் தானு மிலை. (உஞ)

எதிரின்றி யில்லா விதுஞானந் தானே
பதியாதி யுண்மையதாப் பார்த்தல்-கெதியற்ற
ஞானிகளே சித்தாக நாடவறி யீரொலையும்
ஏனிகலு மைய மிதில். (உசு)

சிற்றறிவு சீவன் சிவன்பே ரறிவென்பீர்
சற்று மயக்கமிலை தானென்பீர்-கற்றுணர்ந்த
ஞானிகளே பேதந்தா னண்ணு மூபாதியதால்
ஏனணுகுஞ் சுத்தத்துக் கிங்கு. (உஎ)

அற்ப மகத்ததனு லாமோ மடுக்கடலா
அற்பமகத் தில்லீரீர்க் காயுங்கால்-கற்பிதமே
சித்திரண்டு மொன்றேயாஞ் சீர்தூக்கின் ஞானிகளே
அத்துவிதத் தோடமென்ன வாம். (உஅ)

ஈமுலக மாவமெனி லுமே பரமாவோம்
ஈமின்ன தென்றுண்மை காட்டுதியேல்-ஆமலவென்
றப்பா லறைதுமென வையா வறிவென்னில்
எப்பாலுஞ் சாயா திரு. (உஈ)

இருந்தறியக் காணுமே யேதொன்று மென்னில்
தெரிந்திடுமுன் ஞானியெனல் சிரோ-தெரிந்தெவரும்
பூசிக்கக் கற்ற புதுமைவே தாந்தியே
காசிக்கு மாகாய்நீ காண். (ஊய)

இப்படிநீர் செய்யி னெவர்க்கு மலட்சியமாம்
ஒப்பிலா ஞானிகளு மோராதென்-தப்புமதே
வெட்கத்தா லென்னென்று மெய்வளர்க்கு ஞானிகளே
கட்கமிது வாகுங் கடை. (ஊக)

புலிபசுத்தோல் போர்த்தற்றுபொய்ப்பகட்டைக்காணில்
ஈலியாதென் னுங்நெஞ்ச ஈடூர்-அலிபோன்ற
ஞானிகளே கேட்டறியீர் ஈல்லரச ஞானத்தைப்
போனகத்துக் கேவல்லீர் புக்கு. (ஊஉ)

சிற்றறிவும் பேரறிவுஞ் சிந்தித்தொன் ருக்கறியீர்
சிற்றின்பம் பேரின்பஞ் சிந்தித்திங்-கற்றுபயம்
ஆக்கிநிற்க வெங்ங னறிவீர்மெய்ஞ் ஞானிகளே
போக்குவிரோ மாயை புறம். (ஊஊ)

மாயைபொய் யென்பீர் முகத்துலகுக் காதியென்பீர்
மாயையீ தென்றுணர்த்த வல்லிரோ-பேயர்போல்
போதிக்கு ஞானிகளே புத்திமயக் கேமாயை
ஏதுக்கு ஞானியென லிங்கு. (ஊச)

ஆன்மசுகஞ் சொற்சுகமென் றுகுமிரண் டாகுந்தம்
ஆன்மசுகங் கேட்டறியா தையையோ-ஆன்மசுகம்
என்றுணருஞ் சொற்சுகத்தை யேமாந்த ஞானிகளே
என்றடைவீ ருண்மைதனை யிங்கு. (கூடு)

ஏட்டுச் சுகம்போல வீங்கறியி ரான்மசுகம்
காட்டங் கபோதியொப்பீர் ஞானிகளே-வாட்டமெவன்
உண்டிச் சுவையா லுபசாரத் தான்பதிப்பால்
விண்டிருப்ப தென்றே விளைந்து. (கூசு)

ஞானம் விடையமெனு காட்டமிரண் டாமிவற்றுள்
ஞானங் கனவிலுமே காடறியீர்-ஞானநூல்
போதிப்பால் ஞானிகளே புத்தே ளுலகொப்பீர்
ஏதுக்கு தன்னுட்ட மிங்கு. (கூஎ)

சுவையொளி யூறுசை காற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே புலகென்-றிகலிகந்த
வள்ளுவனார் சொன்ன வகைதெரிந்தும் ஞானிகளே
எள்ளுவதென் யான்சொல்லி னிங்கு. (கூஅ)

அறிவே யாதா மறிவே யனைத்தும்
அறிவன்றிக் காட்டி லுண்மை யாகுப்-பிறிதில்லை
என்றேட்டா லன்றியணு வீங்குணர்த்தீர் சோதனையால்
இன்றிதுவோ ஞானியென லிங்கு. (கூக)

சொல்லாகுந் தத்தாற் சொருகிவிழி நீர்சோர
நல்லார்போற் காட்டி நடித்திடுவீர்-பொல்லா
மயல்போக்கா ஞானிகளே மாயமென் சொல்வன்
அயல்வியக்குங் கோலமிது வாம். (சய)

எப்போது மித்தையென லிப்போது மித்தையன்றே
இப்போதிங் காக்கறியீ ரீதறிவீ-ரிப்போதம்
ஆர்சொன்னுர் ஞானிகளே யாராக் கெடுக்கவிது
பேர்பெரியீ ரென்ன பிழை. (சக)

திரிபுடிபே தத்துட் டெரியவொவ் வொன்றின்
றிரிபின்றி யுண்மைநிலை செப்பீர்-பெரிதுநூல்
கற்றுணர்ந்த ஞானிகளே கண்டார் வியக்களப்பீர்
பற்றையகன் றுய்யீர் பதைத்து. (சஉ)

காண்பவற்று ளொன்றுமயல்கட்டறுத்து நாமாக்கீர்[க்கு
மாண்புடையோர் நூன்மொழிகள் மாட்டியே-காண்பவர்
நூதனம்போற் பாடுவீர் நோக்கறியா ஞானிகளே
பாதகத்தைத் தீரீர் பதைத்து. (சங)

உலகமயல் போலெங்கு மொன்றுமிலை நீரோ
வுலகமயல் விர்த்திக்க வோதிப்-பலபலவாக்
காட்டுவீர் பூச்சி கதியேது ஞானிகளே
நாட்டம் பெறுவதென்றே நன்கு. (சச)

அகந்தொலையக் கற்பா ரறிவுடையோர் நீவீர்
அகம்வளரக் கற்றீர்க ளந்தோ-மிகத்தமையே
தெய்வம்போ லெண்ணிச் செருக்குவதென் ஞானிகளே
யுய்வதெவன் விட்டிங் குவந்து. (சடு)

எல்லாமா யல்லவுமா யிங்கிருத்தல் வத்துவென
நல்லாளைப் போன்மொழிவீர் நாடறியீர்-சொல்லாலே
காட்டி யபினயிக்குங் கண்கெட்ட ஞானிகளே
வட்டையன்றி யாதறிவீ ரிங்கு. (சஎ)

ஏட்டிற் படித்ததன்றி யிவ்வுலகுந் தன்னையுமே
நாட்டத்திற் கற்றறியீர் ஞானிகளே-வாட்டங்
தவிர்வதெவ னிவ்விரண்டுஞ் சத்தமும் தோற்றிற்
பவமகல்வ தெங்ஙன் பதைத்து. (சஎ)

ஞானங் குழகுழென்று நன்குணர்ந்த ஞானிகளே
ஞானமல வற்றையெலா ஞானமென்பீர்-ஞானியெனச்
சொல்வந்தாம் போதுமென்றே சொத்தேட்டி லேபடித்
[தீர்
நல்வழிபோம் காட்டி நயந்து. (சஅ)

தன்னை யறிவாகத் தான்கண்டு நிற்பளவும்
தன்னை யயலாகத் தான்காண்பர்-இன்னதற்கு
மாறுகு ஞானிகளே வஸ்துநிலை சொன்னலும்
தேறீ ரொருபோதுஞ் சென்று. (சக)

ஓருணர்வே யையுணர்வா மோரும் பிரிவதனல்
ஓருணர்விற் றேகாதி யொன்றுமே-கீறியா
தித்தனுவிற் காண்பதெவ னிங்கிலையால் ஞானிகளே
மெத்தவகங் கொண்டிருப்பீர் மேல். (கூ)

இவ்வுடல்முன் னிவ்வுடல்பின் னிவ்வுடலைக் கண்டறி
இவ்வுடலை நானென்ன லென்னமதி-இவ்வுடலாய்[யோம்
நின்றுதமை ஞானியென்பீர் நீக்கிசுயம் பாவதென்றே
என்றுணர்வீர் நுங்குற்ற மிங்கு. (கூக)

ஆகார மன்றி யனைத்துமிலை யோரிலெங்கும்
ஆகார மில்லை யறிவன்றி-ஆகார
மாமறிவு மில்லை யறிவாகா ரங்கடக்கில்
காமதமென் னெங்கே சகம். (கூஉ)

ஆருதா ரத்தி னனுபவங்கண் டேகளிப்பீர்
ஆருதா ரத்தான மாமுடலே-வேருகும்
பூதாதி யாவும் புறம்புகா தெங்கனுய்வீர்
ஏதாகு துஞ்ஞான மிங்கு. (நூங)

அகம்பாவ நீக்க மறிவுதயத் தன்றி
அகநிச் சயத்தா லறுமோ-மிகப்படித்த
ஞானிகளே யெந்தமட்டி ஞானந் தெரிவித்தான்
ஏனகலு மஞ்ஞான மிங்கு. (நுசு)

தன்முயல்வால் வந்தபந்தந் தன்முயல்வாற் றீர்வதன்றிப்
புன்மதியா லீசன்மேற் போட்டுவிட்டுத்-தன்செயலை
யுன்டியுறக் கத்தி லுடல்வளர்ப்பின் மேல்வைத்தீர்
உன்டுகொலோ வீடிங் குமக்கு. (நுடு)

உடனுனென் றுன்ன லுணர்வுகா னென்று
திடஞானக் காட்சியதாம் நீரும்-மடமையா
லேலா தவமதிப்பீ ரிங்கிலையை ஞானிகளே
மாலா லுழல்வீர் மடிந்து. (நுள)

தெரிவுசக மோரிரண்டாச் சேடிக்கு மெங்கும்
தெரிவுதனைக் கண்டாலென் சேதம்-விரியுலகைக்
கண்டதுபோன் ஞானிகளே கண்டானைப் போனடிப்பீர்
கண்டவர்பாற் சேர்மின் கனைந்து. (நுஎ)

உள்ள தறிவே யொழிந்தவெலாம் பொய்யென்பீர்
தெள்ளறிவா லோரணுவுஞ் சித்தாக்கீர்-கள்ளமய
ஞானிகளே யத்துவித நாட்டவுமக் கேதுவலி
மானதம்போக் கெங்கன் மடிந்து. (நுஅ)

தன்னே யறிவாகத் தான்கண் டிருக்கினன்றே
தன்னிறையி னுண்மைமிலே தான்விளங்கும்-தன்னே
அறிவாக நிச்சயிப்பீ ராணவப்போக் கெங்ஙன்
வெறிகொண்ட ஞானிகளே மேல். (நிக)

பண்டிதரும் பாமரரும் பார்மேற் றிரிசியத்தைக்
கண்டிருப்பார் போனீருங்கண்டிருப்பீர்-அண்டமெலாம்
ஞானியாஞ் ஞானியரு காட்டமதிற் பேதமிலை
ஞானியென லெண்ணமதி நன்கு. (சுவ)

இறந்தனவு மிப்போ திருப்பனவு மேலே
பிறப்பனவும் போகமே பேணும்-இறப்பிலா
இப்போகம் போக்கற் கிடங்காணீர் ஞானிகளே
எப்போது போக்குவிரோ விங்கு. (சுக)

அனேத்துலகு நாமு மறிவேயென் றேதும்
நினேத்திருக்கி லெம்மையலு நீங்கீர்-நினேத்துணையுங்
காணளவு ஞானிகளே கண்டார்பாற் கேட்டுய்ம்மின்
காணமதை விட்டடைந்து நன்கு. (சுஉ)

என்ன வொருஞானி யெழுந்தெதிரி னின்றையா
தன்னந் தனியே தனைக்காண்டல் என்னமதி
கண்டாற் றிரிபுடியாங் கண்டபடி வைவதெவன்
பண்டிதத்துக் கீதழகோ பார். (சுஊ)

என்றுனாக்கி லப்பா விதுபடமென் றுள்ளபடி
நன்றுத் திரிபுடிநீ காட்டுகென-அன்றே
படபடென்று காட்டவிப் பார்வையோ ஞானந்
திடமாக யான்காணச் செப்பு. (சுச)

என்ன வவ்வு மிசைத்தவெலா மல்லவென
என்னசெய் வேனென் றிசைத்தளவில்-அன்னபேர்
தப்பா நினைப்புமறப் பற்றுநில் லென்னவவன்
தப்பாது நின்று தனித்து. (சுடு)

ஐயா விதுசெய்ய வாராலு மாகாது
மெய்யா வெனத்தொழுது வேண்டவே-பையவ
இருந்துநீ சொல்லென்ன வென்சொல்வேன் சோதி
தெரிந்திடுத லெங்குஞ் செறிந்து. (சுசு)

இருந்தபடி நில்லென்ன விப்படியே நிற்கப்
பெரும்போக வின்பம் பிறக்கத்-தெரிந்திறந்து
சும்மா விருக்குஞ் சுயநிலையைக் கண்டெழுந்திங்
கெம்மானே யென்றிறைஞ்சி யேத்தி. (சுஎ)

ஐயந் திரிபற் றகண்டபரி பூரணமே
மெய்யதா நின்றொளிர மேவியே-ஐயனே
என்று பலவாக வேத்தி விடைகொண்டு
சென்றுதா ஞனன் சிறந்து. (சுஅ)

போலிஞானக்கழற்றி

முற்றிற்று.

படலம்-கஉ-க்கு ஆ—கவி—(அசசு)

திருச்சிற்றம்பலம்.

கச-வது

அடாஞானக்கழற்றி.

(*)

தன்னைத்தான் கண்டு தனைத்தான் சுகியாது
தன்னினு மிக்கசுகந் தானென்று-அன்னியர்தங்
கைம்பெண்ணை வேட்டுக் களிக்கின்ற ஞானிகளே
அம்புமக்கு வேறில்லை யாம். (க)

தனக்கனியந் தானுகாத் தான்கெய் கடமை
தனித்துநின்று செய்யாது தள்ளி-மனப்போக்கால்
கள்ளாதி யுண்டு களிக்கின்ற ஞானிகளே
கள்ளுமோ யானெனைதைத் தான். (உ)

தானின்ன தென்றறியாத் தன்மயலைப் போக்காது
தானகன்ற வேதாந்தந் தான்படித்து-ஞானகுரு
வென்றுணர்த்தி முன்டைகளை யேமாத்து ஞானிகளே
என்று வழிப்படுவீ ரிங்கு. (ங)

தன்னினும் போதையிலை தான்கண்டு மூழ்காது
அன்னியகஞ் சாவாதி யாசித்துத்-தன்னறிவை
யப்போதை மேலிட்டி லாழ்த்துகின்ற ஞானிகளே
எப்போது விட்டிருப்பீ ரிங்கு. (ச)

இல்லெனற்கு மாறு விருப்பதெனக் கொண்டுலகை
நல்லவே தாந்த மெலா ஞாபகங்கொண்-டல்லலற்றூர்
போற்காட்டி மாதர் புணர்ஞானி காளையோ
ஏற்குமோ தெய்வ மிது. (டு)

உலகமயல் போதைதனை யொன்றுமும் போக்கற்
கிலததனுற் றுக்கமின்றி யென்றும்-மனமுறும்
அன்னியபோ தைக்கே யலைந்தழலு ஞானிகளே
என்னபடி யுய்வீ ரினி. (சு)

கூத்தா டிடம்போலுங் குன்று வறிவினிலை
பார்த்துவக்கக் கல்லாது பாவையனைப்-பார்த்துவக்கக்
கற்றுணர்ந்த ஞானிகளே கண்டார் பழிக்கஞ்சீர்
பற்றகல்வ தென்றே பதைத்து. (எ)

அணுமகத்தாக் காணு மறிவினிலை யெங்ஙன்
ஈணுகிகிட்டை தன்னிலிதை நாடித்-தனைமாகக்
கண்டெல்லா நிற்பீர் களிக்குமது ஞானிகளே
உண்டுகொலோ தக்க முமக்கு. (அ)

சங்கற்ப சாலச் சகத்தோற் றரவென்னல்
சங்கையறத் தேர்தலின்றிச் சந்ததமும்-மங்கையனை
வேட்டுழலு ஞானிகளே மேவினர்க்கென் போதிப்பீர்
பாட்டுசொல வல்லீர் பரிந்து. (கூ)

சிற்சோதி தன்னைச் செகமுதலாக் காண்பதெவன்
சிற்சோதி யென்று தெரிதந்துஞ்-சிற்சோதி

கண்டறியாத் தன்மையினும் கள்ளுண்டு ஞானிகளே
கண்டபடி செய்வீர்கள் கற்று. (ஐ)

நேற்றிருந்தா நின்றிலனை நேர்ந்துங் கலங்காது
போற்றியுடம்பதனைப் போகிக்க-நூற்றாளைக்
கற்றுமட வார்தமையே காதலிக்கு ஞானிகளே
சற்று மதியிலையோ தான். (ஙக)

அறிவு மறிவனவு மாமிரண்டு கூறில்
அறிபவற்றி லாராய்ச்சி யன்றி-யறிவுதனில்
இல்லா தயல்போதைக் கென்றுமுழல் ஞானிகளே
பொல்லா மயலெங்ஙன் போம். (ஙஉ)

போக்கமயல் தேடாது பூரிக்க மாதுமயல்
நீக்கமற நின்றுழற னீதியோ-வக்கமிலை
கண்கெட்ட ஞானிகளேகண்ணுடையார்சேர்ந்துய்ம்மின்
கண்பஞ் சடைமுன்னர் கல்லு. (ஙஊ)

உள்ளும் புறம்பு முணர்வுதனைக் காண்டற்கோ
கள்ளுமயக் காழ்தற்கோ கற்றுணர்ந்தீர்-தெள்ளறிவில்
லில்லாத ஞானிகளே யீங்கறிவை யுற்றுணர்மின்
பொல்லா மயலெதுவும் போம். (சஎ)

எல்லா விபரீத மில்லை யறிவன்றிக்
கல்லாது கண்டதனைக் கற்றுணர்ந்தீர்-நல்லார்போற்
காட்டி மயல்வளர்ப்பீர் கூட்டறுக்கா ஞானிகளே
வீட்டுநெறி சொல்லளவா மேல். (சஙி)

சிந்தித்த போது செகத்திற் சுகதுக்கம்
சிந்திப்பை யன்றியிவை சேருமோ-சிந்தனைதா
னில்லை யறிவன்றி யீண்டறிவைக் கல்லாதென்
தொல்லை மயலதனிற் றோய்ந்து. (கசு)

அறிவுநாட்டங் கல்லா தனந்தநூல் கற்றும்
அறியாமை போக்கற்கிங் காமோ-வெறிவிலக்கு
வாங்குகின்ற ஞானிகளே மாளாச் சுயவெறியை
நீங்கிநிற்ப தென்றே நினைந்து. (உள)

பாவமொடு பாவிப்பான் பார்த்திதனிற் றோயாது
பாவாபா வங்கடந்த பாழுதனில்-தாவாது
மெய்யுணர்வைக் கண்டதனில் வீழாத ஞானிகளே
மையலென்று போக்குவிரோ வந்து. (கஷ)

தற்போதை மேலாக்கித் தானதனில் மூழ்காதிங்
கற்பபோ தைக்கலவி னையையோ-கற்பில்லா
ஞானிகளே யென்கற்றீர் ஞானநூ லேத்தற்கோ
ஆனதித ஞல்மடமை யாம். (கசு)

உலக மறக்கற் குணர்வா லறியீர்
கலகமயக் கள்ளதனுற் கண்டீர்-பலகற்ற
ஞானிகளே யெங்நோ நண்ணுமோ ஞானம்போல்
ஏனிதனை யுற்றுணரீ ரிங்கு. (உல)

சிந்தனைக்குக் காட்சியெது தீராது கண்டிருக்க
எந்தவுரு பாவனையு மீங்ககலும்-அந்தோ

அறியாது ஞானிகளே யன்னியபோ தைக்கே
வெறிகொள்ளி னெங்ஙனுய்வீர் மேல். (உக)

விழிப்பிற் சகத்தும் விழிப்பொழிவிற் பாழும்
அழித்தறிவைக் காணுதிவ் கந்தோ-பழிப்பகலாப்
போதைக்கும் மங்கையர்தம்போகத்துக் கும்முழல்வீர்
ஏதுக்குப் பாத்திரமோ விங்கு. (உஉ)

அகம்பிரம மென்பதனை யாய்ந்தனர்ந்து நில்லா
தகம்பிரம மென்றேதி யந்தோ-மிகமயல்கொண்
டன்னியதா ரத்தை யணைந்துசுகி ஞானிகளே
என்னமதிப் பார்கண்டா ரிங்கு. (உங)

அம்மொழியாம் குற்றமிலை யாயாமை நுக்குற்றம்
எம்மயலும் போக்கலெவ னீங்கிதனுல்-மெய்ம்மையுணர்
ஞானிகட்குந் தூடணமே நாடாதென் ஞானிகளே
உளறு மதுவுமெத்த வுண்டு. (உச)

பகலெல்லா ஞானிகளாய்ப் பாதிரவின் மோகம்
மிகுதலாற் காமிகளாய் மேவி-அகவிளக்கம்
இல்லதனுற் சையோகத் தின்பநுகர் ஞானிகளே
நல்லவர்போற் காண்பதெவ னன்கு. (உஙு)

சிவவேடம் பூண்டு சிவக்கொழுந்தாக் காட்டி
யுவக்கவே தாந்தனு லோதி-அவத்திலே
கள்ளுனே வேட்டுக் களிக்கின்ற ஞானிகளே
எள்ளுவார்க் கென்சொல்வீ ரிங்கு. (உசு)

ஞானவெட்டி சித்தாதி ஞானநூ லென்றுரை
ஞானமிஃ தென்றறியா ஞானிகளே-ஞானிகள்போற்
காட்டி மடவார் கரவிற் புணர்ந்துழல்வீர்
ஓட்டுமோ யானெனதை யோர்ந்து. (உஎ)

விதிவிலக்கிங் கற்ற விமலர்போற் றம்மை
மதிமயக்கா லெண்ணி வழிமாறி-விதிவிலக்கைப்
போக்கிமது போகமதைப் போற்றியுழல் ஞானிகளே
நீக்கியெங்க ணுய்வீரோ நின்று. (உஅ)

சித்துவிளக்கஞ் செடவிளக்க மிவ்விரண்டிற்
சித்துவிளக் கத்தாற் செடவிளக்கம்-எத்திறத்துங்
காண்பதென வோராது கள்ளுண்ணு ஞானிகளே
வீண்பயனுற் கொள்வதென்னை மேல். (உசு)

உலகமதைக் கண்டிங் குவப்பதனல் யாது
பலனெவர்க்கும் துக்கமதே பாரா-தலகிலதாக்
கற்றுமது போகங் கடவாத ஞானிகளே
சற்றுமதி யில்லாதென் முன். (நய)

மனிதாதி ரூபமெலா மண்ணுதி பூதம்
வனிதாதி யின்பமென மாள்வீர்-புனிதமாம்
ஆன்மசுக லேச மயலின்ப மெல்லாமென்
முன்மசுகங் கண்டுய்ம்மி னவ்கு. (நக)

உலகின்ப மெல்லா மொழியாத் துயரென்
நலகிலதாக் கண்டு மறியீர்-இலதறிவால்

ஞானியெனக் காட்டி நலிதலுறு ஞானிகளே
ஞானநிலை கண்டுய்ம்மி னன்கு. (கூஉ)

அயலறிவ தல்ல வகம்பாவ மில்ல
இயலறிவ தல்ல வெவையும்-மயல்விளக்கும்
ஆதலினன் ஞானமென லாயாது ஞானியென்பீர்
வேதனையே யின்பமிலை மேல். (கூங)

எங்கோ னென்பதுவு மெங்கே யெனதெனலும்
எங்கே செகத்தொடுக்க மெங்ஙனே-ங்கருத்திங்
காயாது போகத் தலைகின் றஞானிகளே
ஓயாது துன்ப முமக்கு. (கூச)

அல்லல்போ தாதென் றகமமதை கொண்டுமிக
அல்லல் பெருக்கவோ வாயாதிங்-கில்லல்லார்
போகத்துக் கேயுழலும் பொய்வேட ஞானிகளே
ஏதத்தை யெங்கடைவீ ரிங்கு. (கூஞ)

காமரூ பப்பொருளே நண்ணுவதா லெவ்விடத்துங்
காமகறம் கேற்றநெறி தாவாது-சாமத்துக்
கள்ளபோ கத்தைக் கருதியுழல் ஞானிகளே
உள்ளுவதென் றேதன்னை யுற்று. (கூசு)

அறிவின்ன தென்றிங் கறிந்தார்பாற் சென்று
பொறிவழியிற் செல்லாது புக்கு-நெறியோடு
காணுது தன்னைக் களித்துழலு ஞானிகளே
காணுதிங் குய்வதெவ னன்கு. (கூஎ)

தம்முளே மிக்கானைத் தாஞ்சகியா துன்மமைம்து
தம்மவரால் மிக்கதுன்பந் தந்திடுவீர்-அம்மா
கொலைபாதஞானிகளே குற்றமிலார் போல்வீர்
இலாவ தெங்ங னிமந்து. (கூஅ)

என்று பலவா றிசைத்துக் கருணையால்
அன்றவர்க்கு முத்திநெறி யாங்களித்து-மன்னே
புரிதற்கு யாரும் புகன்றமறைச் சிக்கை
யொருக்கித் தெரிவித்தா ரோர்ந்து. (கூசு)

அடாஞானக்கழற்றி-முற்றிற்று.

படலம் - கசை - க்கு - ஆகவி - அசரு.



திருச்சிற்றம்பலம்.

கடி-வது

கல்வியாதாரவிளக்கம்.

(*)

எப்பாடை கட்கு மிரும்புலவீர் கேண்மினிதை
எப்பீடை கட்குமுத லீதென்று-தப்பாது
ஆய்ந்திடீர் வம்மி னவற்றின் மயக்கமெலாம்
மாய்ந்திடுதற் குள்ளே மகிழ்ந்து. (க)

அதவதற்குக் காரணங்க ளாய்ந்தாய்ந்துட் செல்லில்
இதவிதுவென் றெட்டாம லேகும்-அததான்
எழுத்தாதா ரங்கணுழைக் கெட்டவெட்ட வின்றும்
எழுத்துமுத லெட்டினிலோ வின்று. (உ)

எழுத்தொலியின் மிக்கநிலை யெட்டினிலோ வில்லை
எழுக்தென் றிடையி லிருப்பீர்-அழுத்தமாய்
முன்பின் படியாத முற்றுணர்ந்தீ ரீதெட்டில்
இன்ப நிலை வேறொன் றிலை. (ங)

பெயர்ச்சொ னிலையதனைப் பேசுதம் வாரும்
பெயராம் பொருட்கென்பீர் பின்னும்-பெயர்க்கிங்
குருவருவஞ் சித்தசட முள்ளபொருட் பேதம்
உருவமதையாய்கு தம்யாமோர்ந்து. (ச)

உருவமதின் மன்னெனைநற்கிங் குள்ள வடிவந்
திரிபின்றிக் காட்டத் திடமின்-றொருவர்க்கும்
என்னி னனர்த்தமதா மெப்பெயருஞ் சொற்றேற்றம்
இன்னதற்கு மாமே லிசை. (டு)

மண்ணின்றேற் பூமி மலையாதி பல்லுருவம்
எண்ணில் பலவளப்ப மெத்தொழிலும்-உண்ணலுடை
இன்பதன்ப மேல்கீழிறப்புபிறப் பாதியின்றே
என்மொழியா றேற்பா ரிதை. (சு)

எதவுஞ் சுயம்பா விருக்கவென்குங் காட்டில்
இதுவெல்லா முன்மையென வேற்பம்-அதுகாணும்
துட்பவணு சையோக நுண்ணுணர்வோ ரேயறிவார்
மட்டிகளே னேற்பார் மகிழ்ந்து. (எ)

பந்த மகற்றுவார் பார்க்குநெறிக் கேற்குமிது
இந்த வகையறியார்க் கேற்குமோ-இந்தபட்டம்
நிற்க வினையி னிலையறியக் கூறுதும்யா ம்
ஒற்கத்திற் கோலா யுற. (அ)

வினைமுதலே தென்னில் விடாதொன்றை யொன்று
இனையதென வெட்டாம லேகும்-அனையதுகேள் [ன்
தேகமெனி னித்தினையிற் செத்தபிணம் போற்கிடப்பெ
தேகமல வென்றே தெரி. (கூ)

பிராணதி யென்னிற் பெருஞ்சுழுத்தி தன்னிற்
பிராண னிருந்தும் பிணம்போல்-திராணியின்றித்
தேக மிருப்பதனற் செப்பே மவைமுதலா
ஊகத்தா லாய்குதுமே லுற்று. (ஙு)

இச்சையன்றி ஞான மெழுமோ வினையன்றி
எச்செயலு மெங்ங னெழுமென்னல்-இச்சையுந்தான்
தோன்றுத வித்தையன்றிச்சொல்லினிங்ஙன் மேன்மே
தோன்றுமற் போகுமன்றே சொல். [சில()

தேகம் பொறிகரணஞ் சீவன் பரமாதி
யேகுமெனி லெத்தொழிற்கு மேதுமுதல் வுலகத்துக்
கெட்டா முதலறியா தென்னகற்றீர் பண்டிதர்காள்
எட்டுவரா தும்மையன்றி யில். (கஉ)

சென்று னெனுமிடத்துத் தேகம் வினைமுதலே
பென்றுலுன் ஞதசைவு மேன்காணும்-இன்றுகும்
இச்சையன்றி யுன்னலுந்தா னில்வாறே மேற்செல்லின்
நிச்சயிப்பார்க் கேது நிலை. (கங)

வினைமுதலி தென்று வினையாட்டாக் கொள்வீர்
வினைமுதலே யெட்டவெட்டமேலே-யினையதனைக்
காணது நிற்குநிலை கண்டகலா நிற்பதென்றே
வீணுகு துன்னிலைமை விட்டு. (கச)

ஆடிணை னென்னுமிடத் தாரவனென் றூரவனென்
றேடதனை விட்டாய்வா யெங்குமிலை-ஏடவனைக்
காட்டுமோ வுண்மையுரு கண்டா லொருவரிலை
காடுமகக் கண்ணுண்டே காண். (கஞ)

ஆண்பெண் ணலியன் றருவுருவு மேதுமன்று
காண்மினிதைக் கேவலத்திற்கற்றுணர்ந்தீர்-மாண்புடை
சொல்வதையுங் கேளீர் சுயபுத்தி யுங்காணும் [யோர்,
கல்வியெலாம் யாதுக்கோ கற்று. (கசு)

தேடினீர் தூலமட்டுஞ் சென்றுவினைமுதலை
யூடுருவிக் கண்டாருளாருமை-யாடுங்கால்
என்னென்ப னும்புலமை யீங்குவைப்பிர் மேலிதனில்
இன்னநிலை விட்டெம்மை யிங்கு. (சள)

எத்தொழிற்கும் தூலமன்றியென்கண்டீர்செய்கைமுதல்
இத்தையுணர்ந்தேன்மறந்தேனென்னுங்கால் மெத்தவுங்
கற்றிதலெட்டிமுதல் காண்டற்கே யெனைட்டீர் [தான்
உற்றுணர்தல் கட்டமென லோ. (கஅ)

கருவிற் படுமுன்னர் காணின் முதலைக்
கருவுட் படினுங் கலங்கோம்-கருதினிற்
பட்டதனு லின்னும் படுதுயெனற் கையமுண்டோ
விட்டபோ தேகபோக மெய். (கசு)

வினைமுதலென் றல்லவற்றை மெய்யாக்கக் கொள்ளில்
இனையதெனக் கண்டுணர்வ தென்றே-நினைவில்லீர்
இமைய மகலுமெனி னெப்பிறப்போ வென்செய்வம்
இம்மையிலே கண்டுய்ம்மி னிங்கு. (உல)

கண்கலக்க மில்லேங் கலங்கா நிலைநிற்க
மண்போக மெக்கணத்தின் மாண்டிடுமோ-கண்புதைந்த
பண்டிதர்காளிக்கணமேபார்த்துய்ம்மின் செய்கைமுதல்
உண்டில்லை யென்னு துவந்து. (உக)

எல்லாவினைமுதலு மேகமெனக் கண்டொளிர்வீர்
எல்லா வினைமுதலை யெட்டினுல்-வல்லீர்கள்
என்சொல் லசட்டைசெயா திப்போதே சோதிக்கில்
என்சொல்லெய் பொய்காண்பீ ரிங்கு. (உஉ)

எழுத்துப் பெயர்வினையை யிவ்வாறே காணின்
விழித்துறங்கி நிற்குலே மேவும்-பழிப்பின்றிப்
பண்டிதர்கா ளிங்கிதபோம் பார்த்தறியிர் கேட்டறியிர்
கண்டிட்டு ரென்னுலே காண்ள. (உசு)

உன்னினு னென்னுமிடத் துன்னுமுத லேதெதென்
றுன்னவுன்னச் சான்றோரா லோர்ந்திவிர்-அன்னநிலை
எட்டாப் பழம்பொருளே யிதுண்மை யிதுண்மை
எட்டாதீ தெவ்வெவர்க்கு மே. (உச)

அவசரங் கொள்ளா தமைந்துநின் றென்ன
அவசரத்தாற் சொன்னனென் றுயின்-அவசரந்தான்
காணு மழைக்குங் கதிகடந்த வுண்மைதனில்
நாணச் சமய நடை. (உரு)

எவ்வளவோ கற்றுணர்ந்தோ மிதற்ப மென்றிகழா
தெளவியம்பின் னிட்டிதனை யாய்ந்துணரிற்-செவ்விதாக்
கண்டகலா நிற்பிர் கலங்கா நிலையதனிற்
பண்டைமயல் போகப் பரிந்து. (உசு)

இது நிற்கக் கல்வி யெதுவுண்டே லுண்டாம்
அதுசற்று யாமொக்க வாய்தும்-மதிவல்லீர்
ஞாபகத்தைத் தள்ளியிதை நாட்டோ மெதில்வல்லோம்
ஞாபகமென் றேகல்வி நாம். (உஎ)

ஞாபகத்தி னுள்ளமையுரு நாடிற் சடமன்று
ஞாபகமன் றெங்ஙிலையு நாசமுறும்-ஞாபகத்தை
உற்றுநின்று காணி லொழியாச் சுயஞ்சோதி
கற்றும்பிராக்ககலிர் காண்ள. (உஅ)

கற்றுணர்தல் ஞாபகத்தைக் கண்டகலா நிற்றலிலிட்
டுற்றிடநீர் போகமதை யோயாது-சற்றுஞ்
சலியாதிங் கேயுழல்வீர் சந்ததமும் வல்லீர்
மெலியீ ரகம்பாவம் விட்டு. (உக)

ஞாபகத்திற் கற்றளவு நன்னூலுமிகை யெங்குனுண்டாம்
ஞாபகத்தைத் தள்ளியெதி ருடுவோம்-ஞாபகத்திற்
கொள்ளலையன்றியெங்ஙன்கொள்ளவிடங்கொடுக்கும்
உள்ளியதைக் கண்டுய்ம்மி னுற்று. (ஙூ)

ஞாபகத்தி னுண்மைநிலை நாமென்று கல்லாது
ஞாபகத்துக் கன்னியத்தி னுங்கழிக்கில்-ஞாபகத்தை
யாய்தல்மிகக் கட்டமென்றே வத்தனையும் பேரின்பம்
மாய்ந்திடுமுன் கண்டுய்ம்மின் வந்து. (ஙூக)

ஞாபகநாட் டத்தினிற்கி ருடுமோ வன்னிபங்தான்
ஞாபகநாட் டத்தைவிடி ருடுமே-ஞாபகத்தைக்
கற்றே லெவருமிலை கற்றமட்டும் போதுமினைக்
கற்றுணர்ந்து நின்மினினிக் கண்டு. (ஙூஉ)

இதுவே பயன்கல்விக் கீதொப்ப தில்லை
எதுவு மபாவமதே யெங்கும-இதுசத்யம்
சொல்வதனு லென்னபயன்சோதித்துப்பார்த்துய்ம்மின்
வெல்வதுமெய் போகம் விளைந்து. (ஙூங)

சும்மா விருக்குஞ் சுகநிலையே தக்கபலன்
அம்மாவிஞ் ஞாபகத்தை யாய்ந்துணரில்-தம்மில்
எதுவுமல வாயினுந்தா னெவ்வண்ணங் கான்பம்
அதுவிதுவென் றின்றி யகம். (ஙூச)

சின்னமவிச் சின்னமல சேருமிடம் வேறில்லை
உன்னுங்கால் ஞாபகத்தி னுண்மைநிலை-அன்னியமாய்ப்
பாழுமாய்க் காணுமெவர் பார்வைதனைக் கேற்றபடி.
ஆழமாய்க் காண்மி னதை. (கூஐ)

விடயஞ் சொரூபமென மேவு மிரண்டில்
விடையமிடர் தந்திட்டே வேறும்-கடைமுடிவில்
ஏனைபதாற் பேரின்ப மிவ்விரண்டு மல்லவிது
ஏனைய மாய்ந்துணர்மி னிக்கு. (கூக)

நிசயத்தி லொன்றுங் தெளியாத நில்லை
தெரிவதனைக் கண்டேன் தெளியீர்-திரிபுடியற்
றென்றும் பிழையென்னை யேனசட்டைசெய்திகழ்வீர்
ஒன்றுமறி யாதவர்போ லுற்று. (கூஎ)

எதுவுலகாத் தோன்றி யிலதாகத் தோற்றல்
அதுவே யறிகருவி யாமென்-றெதிணலும்
ஐயமின்றி யொன்று மனுபவிக்க வல்லிரோல்
மெய்யுணர்வுன் டோவயலா வேறு. (கூஅ)

ஞானமெனல் வேறன்று ஞாபகத்தி னுண்மைநிலை [ன்
மோனமுறக்காண்பதென்றுர் மூதுணர்ந்தோர்-ஈனமெல
மாப்புலவீர் செய்தற்கு வல்லார்பாற் கேட்டுய்ம்மின்
மூப்பு வருமுன் முதிர்ந்து. (கூக)

ஞாபகமே யாதார நண்ணுபந்த முத்திக்கு
ஞாபகமல் லாவுயிர்க ளுக்காணும்-ஞாபகத்தை
எப்பிறவி யென்றுணர்து மேகபரி பூரணமே
அப்பதத்தி னின்றுர்க் ககம். (சுய)

ஞாபகஙாட் டத்தைவிடி னண்ணும் விபாதம்
ஞாபகஙாட் டம்படிக்கீர் ஞாயமோ-ஞாபகத்தைக்
கம்றுணர்ந்து நின்மின் கலங்கா நிலையதனில்
மற்றவையெல் லாம்போக்கி வந்து. (சக)

செயற்கரிய சான்ரோரே செய்வர் சிறியர்
செயற்கரிய வல்லவற்றைச் செய்வர்-மயக்ககலா
தென்பவற்றி னுங்கருத்தே திங்ஙனமேசெய்துய்ம்மின்
என்சொல்லை ஙம்பாம லிங்கு. (சஉ)

ஙானே சமஷ்டியென ஞனே வியட்டியெனல்
ஙானன்றியில்லையிவை ஙாடுங்கால்-ஙானெனைலோ
சித்துசட மல்ல திரிபுடியுந் தாணுமல
சத்தசத்து மல்லவே தான். (சஙு)

கல்வியாதாரவிளக்கம்

முற்றிற்று.

படலம்-கநி-க்கு-ஆ-கவி-அஅஅ.

திருச்சிற்றம்பலம்.

கசு—வது

வஸ்துபரிசோதனைவிளக்கம்.



[ன்

இழ்மொழிகள் கோஷ்டிக்கு மிவ்வியாசர் முன்னெருவ
எம்மதமு மேலாம லீங்கிவனை-எம்மிறையே
யானெனதென் றல்லவற்றை யெள்ளுமடி யேன்மயலே
யானகல்வ தெங்ஙனிசை. (க)

என்றனே நோக்கி யிதுவதுவென் றுள்ளவெலாம்
பொன்று மயல்விளக்கப் போந்தனவே-என்றேர்ந்து
சாயாது நிற்றியேற் சர்வம் பிரமமெனல்
ஓயாது காட்டுவன்யா னுற்று. (உ)

இல்லையுண் டல்லவா மென்றவழக் கோர்வான்கும்
தொல்லைமயல் போக்கற்குச்சொன்னமுறை-வல்லையேல்
கேட்டிலற்றைச் சிந்தித்துக் கேடில் நிலையதனில்
காட்டமுறுறிக் குய்ந்திடுக கண்டு. (ங)

காரணத்தை யுண்டென்றுங் காரியத்தை யில்லென்றுங்
காரணத்தை யாமென்றுங் காட்டலொடு-காரியந்தான்
வுதல்லவென்று மிசைக்குமறை யின்காட்டை
ஓதயான் கேளிங் குவந்து. (ச)

பொன்னையன்றி யில்லைபணி பொன்னே பணியதனுல்
பொன்னையே யுண்டென்னும் போற்றுமறை-பொன்ன
[ல்ல
இப்பணிதா னென்று மியல்புருபொன் ணுமென்றுந்
தப்பின்றி யோதுமே தான். (டு)

இவ்வுவமை போலென் னினைசக்குமறை யென்றிடிலோ
இவ்வுலக ளெப்தியன்றி யீக்கில்லை-இவ்வுலகம்
ளெப்தியல காரணமோ ளெப்தியா முண்டென்னல்
ளெப்தியே யுண்மை நிலை. (சூ)

உலகமன்றித் தேகசுக மோர்காட்சி யுந்தான்
இலவாதம் கேதென் னெவர்க்கும்-உலகமிலை
என்றுரைத்தா லையாவென் றேத்தி யவன்கேட்க
நன்றினைக் கேட்பாய் நயந்து. (எ)

தெரிவன்றி யெங்கே செகத்தன்றி யெங்கே
தெரிவுண்டே லுண்டாஞ் செகமும்-தெரிவுந்தான்
உண்டா முலகுண்டே லுண்டோ நினைவின்மேல்
கண்டவருண் டோதெரிவைக் காண். (அ)

கண்டார் தெரிவன்றிக் கண்டையோ விவ்வுலகைக்
கண்டார் தெரிவோடு காண்கிலையோ-உண்டிரண்டும்
என்னுதென் னையா விருக்குமட்டுங் காண்பதெவன்
என்னுகு நின்வசன மிங்கு. (கூ)

எல்லார்க்குங் காண்பானே னீங்கொருவர்க் கின்றியக்க
நல்லாய் தெரிவிருத்த னுடிலையோ-எல்லார்க்கும் [ண்
எங்கெங் கறிவுண் டிருக்குமே யங்கங்கும்
எங்கெங் கிலையோ விலை. (ஐ)

கடபடம்போ னின்மொழியாற் காணுதே யென்னிற்
கடபடத்தின் மாறுகிற் காட்டாய்-படபடென
வுண்டில்லை போதறிவிக் குண்டிலதாக் காண்பதன்றி
வுண்டில்லை யேலோ தலகு. (உக)

இருபோது மாறு திருக்க வுலகைத்
திரிபதன்மே லேற்றுவது சிரோ-பெரிதுபிழை
யென்னிலறி வன்றி யிருபோதுங் காட்டுதியோ
என்னமதி யூகியலை யிங்கு. (கூ)

மனவிருத்தி யுள்ளளவு மண்ணுதி காணும்
மனவிருத்தி நிற்கின் மறையும்-தினமுநீ
கண்டிலையோ வென்றுனைக்கக் காண்ட லிருந்தன்றே
உண்டென்ப மென்று முலகு. (கஙு)

இருப்பதெனின் ஞெப்தியன்றி யிப்போது காட்டில்
இருப்பதற்கு மாறில்லை யென்ன-இருப்பதெது
கல்லுக்கு முண்ணுகக் கண்ணலலே மாப்பூகம்
வெண்ணைமின்றிச் சொல்வதெவ னிங்கு. (கச)

தனக்கென்றிக் குண்மையுரு சார்ந்திருப்ப தொன்றை
இனக்கலப் பின்றியெவ னேதும்-அனர்த்தமின்றிக்
காட்டுதியே லேற்பமெனக் காணுலகுக் கையமெவன்
காட்டுவன்யா னென்றுன் களித்து. (கஞ)

அணுக்கூட்ட மேனு மனுபவிக்கப் பாற்றிக்
கணுத்திரளே யுள்ளமையுல காகும்-பிணக்கின்றி
யென்னி லணுவுக்கா னில்லை வெளியன்றி
யன்னியமோ யில்லைவெளி யாம். (கசு)

வெளிமயமென் றேகிலெதிர் வேற்றுருமுட் டாதோ
வெளிமயத்துக் கையமுண்டோ மெய்யும் வெளிமயமே
யென்னத்தா னகி லிலையே யசைவும் தான்
அன்னியமே யில்லையத னல். (கஎ)

வேற்றுருவ மெல்லாம் வெளியதனிற் கற்பிதமே
வேற்றுருவ நோக்கால் விபரீதம்-நீக்கு
வெளிநாட்ட மாகில் விபரீத மின்றி
யெளிதிற் சுகநிலையா மிங்கு. (கஅ)

இதுபற்றிக் கூறு மிருமறையி னந்தம்
இதுமறுத்தல் துட்டமதி யேலோய்-இதுநோக்கத்
தென்றுநில் லென்ன விதுபொருளன் றென்னினுனர்
இன்றுசுக சாதனமா மிங்கு. (கசு)

உலகிருப்பைக் காட்டிங் குணர்வன்றி யெங்கும்
உலகோ வுருவருவா யொன்றும்-உலகுருவச்
சிந்தனையால் ராகாதி சேரு முலகருவச்
சிந்தனையா னிர்மலமாம் தேர். (உ0)

சிந்தனையன் றிச் செகத்திருப்பைக் காட்டுதியோ
சிந்தனைமட் டேசெகத்து தோற்றிலையோ-சிந்தனைதான்
உள்ளவிட மெல்லா முலக மஃதன்றி
யுள்ளதுல கென்னே லுலவந்து. (உக)

செகத்தின்ப துன்பமிலை சிந்தனைமட் டன்றேல்
செகத்துவே றென்பமித நிண்ணம்-செகத்துசடம்
ஆதலினு லென்னி லறிவன்றி யோரணுவுஞ்
சோதனையாம் காணுந் துணிந்து. (உஉ)

இல்லையுண் டாமலவென் றேலாத தோர்பொருளும்
இல்லையே யுண்டுலகென் றேற்பதெவன்-வல்லையோ
சொச்சமதாக் காட்டத் துணியில்லை யேயெவர்க்கும்
எச்சொல்லுஞ் சொல்லா திரு. (உக)

எந்தகூட்டி னலுமிஃ தில்லையல வென்பீர்
எதையாமுன் டென்பீரோ வென்றும-அதையாமும்
வாச்சியத்தா லோர்ந்தும் வலியோஞ் சலனத்தில்
ஆச்சியம்போற் காணுத தால். (உச)

மர்த்தையுண் டென்னின் மாத்தூள் யன்றி
மாமில்லை காணுமிந்த வஸ்தோ-மாமல்ல
ஆதலினு லெப்பொருளு மல்லவிலை யென்பனவாம்
ஓதுதியோ மாறு வுணர்ந்து. (உஞ)

முன்னுளது பின்னெங்கே மூடமதாற் பின்னில்லை
இன்ன விசாரணையா லிதறிவே-யன்னியமன்
றெல்லாமு மிப்படியே யீதறிஞர்க் கேதெரியும்
எல்லாரு மோரா ரிது. (உசு)

ஆடி யழுக்கை யகற்றக் காம்வேண்டும்
ஆடிதிபூல் போக்கற் கறிவன்றித்-தேடுவதின்
றன்னியத்தைப் போலென்பா ராகு மிருவழக்கும்
உன்னுவதாம் கண்டுணர்வை யுற்று. (உஎ)

முதற்கருவி சித்துசட மூற்றலகுக் கென்பர்
முதற்கருவி சித்தை மொழிவன்-எதற்குந்தான்
காரியமென் றேமுடியுங் காரணமு மாயுங்காற்
பூருவசித் தாந்தநெறி புக்கு. (உஅ)

எக்கா ரியமுந்தா னீங்காயின் முன்பினிலே
எக்கா ரணமுமன்றி யிப்போதும்-மிக்கோய்கேள்
எங்கே பணியென்ற லில்லாமம் போயிற்று
எங்கேமுன் னுள்ள தெமக்கு. (உக)

உண்டெனலுமில்லெனலு மொன்றையேகாண்கிலையோ
உண்டில்லை யென்றிரண்டு மொன்றிலொன்று-கண்டிலை
இல்லாமை யெங்கு மிருப்பதறி யாமையென [யோ
நல்லோ யிதைநாடி நன்கு. (ஙஐ)

திரிபுடிதா னேரிரண்டாஞ் சித்தசட மென்னத்
தெரியு மகம்புறத்தில் சீவர்க்-கிருவகையுஞ்
சித்தென்பர் ஞானி சடமென்ப ரேனையர்கள்
ஒத்திங் கிருவகையு மோர்ந்து. (ஙக)

விகாரமே யுள்ளதுபோல் மேவு லுலகம்
விகாரமெலா நீக்கில் விளங்குப்-விகாரமா
நிற்கு மறிவதுதா னின்மலத்தோர் நோக்கதனல்
நம்குன்றத்தோய் கண்டுணர்ந்து நன்கு. (ஙஉ)

உள்ளும் புறம்பு மொருவாத் திரிபுடிதான்
தெள்ளறிவை யன்றிச் சனிக்குமென்பம்-உள்ளபடி
ஐயுணர்வைத் தள்ளி யணுவிருக்கக் காட்டுதியேல்
மெய்யுணர்வை யன்றியிலை வேறு. (ஙங)

உலக மயக்க மொழியா துணர்வுக்
கலகிலதாக் கற்று மரிதாம்-உலகமதை
யன்னியமாக் காணளவு மற்றூர்க்கு மெம்மையலும்
தன்னதுரு வாக்காது தான். (ஙச)

வஸ்துவுண்மை காண வகைதெரித்தி யென்றிறைஞ்ச
நிஸ்தரங்கம் போல நிலைநிற்க-வஸ்துநிலை
சங்கைசமா தானமொடு சாற்றுவன்யா னுள்ளமையதா
இங்கொன்றும் பேசா தரு. (௩௫)

சங்கையிலே நிற்கிற் சலனமறு தெங்காளும்
இங்கெமக்கே பார மிதையகற்றல்-எங்கும்
இதுவதுவென் றுன்னு திருத்தியான் மெய்ப்பை
இதுவென்று சொல்லளவு மிற்று. (௩௬)

அறிவு மறிவனவு மாமிரண்டு கூறே
அறிவுடையோர் கண்ட வனைத்தும்-பிறிதில்லை
எங்கிலைய தேனு மிதிலைய மில்லையே
உன்னுங்கா லொவ்வொன்றை யுற்று. (௩௭)

சித்துசட மென்றிரண்டுட் சேர்க்கப் படுவனைத்தும்
சித்துசட சோதனையாற் சிந்தித்துச்-சத்துக்கள்
அன்றி யெவர்க்கேனு மாகா திதைவகுக்க
என்றுமறி யாரறிவை யிற்று. (௩௮)

பசுபதி பாசப் பகுப்புள்தாக் காண்டல்
நிசவறிவுக் கேயாகு நித்தம்-பிசகன்று
காட்சியுல கேனையவை காணுமனு மானத்தாம்
சாட்சிகா மேயிலைவக்குத் தான். (௩௯)

ஒருபோது தூல மொருபோது சாயை
ஒருபோது பாழிங் குணர்தல்-தெரிவதுவே
ஐயுணர்வாய் மானதமா யாவியாய் நின்றென்றும்
ஐயமிலை யாதேனு மாய். (௪௦)

இவ்வாறு கண்டுமறை வெங்கே யிடந்தேரில்
ஓவ்வா வறிவிடத்த துண்மையே-செவ்விதாச்
சித்துரூட்டத்திற் றெரியு மிந்தன்றி
யெத்திறூட்டத்து மிலை. (சக)

ஊனவு நினேவோடே கண்ணுங் கனவும்
மனவிழுப்பு மேமயமா மாளா தினையவன்றிக்
காலம் பொருளிடந்தான் காட்டவலா வொக்குமிலை
சாலப் படித்துணர்ந்தும் தான். (சஉ)

இங்ஙான்கு மன்றியிலை யெவ்வவத்தாக் காட்சிகளும்
இங்ஙான்கு மாறுவது மெங்கனே-அன்னவிடம்
காணி லணுவேனுங் காண தலகெங்கும்
ஞாணமிலார் வாதிப்பார் நன்கு. (சஊ)

தஸ்மாணை விஸ்மாணை தாமிரண்டாஞ் சொஸ்மாணை
தஸ்மாணை யில்லையுயிர் தாமென்கும்-விஸ்மாணை
யில்லா யுயிரில்லை யெல்லாம் ஸ்மாணைமயம்
நல்லா யிதைநாடு நன்கு. (சஎ)

ஸ்மாணையன்றி யுண்டுயிரோற் சாற்றேலயலை
ஸ்மாணையதா யில்லையெனிற் சாற்றுய்-ஸ்மாணையே
யுண்டிருரூட்டத்து முலகுண் டொருரூட்டத்
துண்டுகொலோ வுண்மை யுலகு. (சஏ)

பண்டிதரு நாடருமை பாமரா யென்சொல்வம்
அண்டர் முனிவருக்கு மாகாதேல்-கண்டிலைகொல்
தூர மணிமையல சொல்லற் கெளிதல்ல
யாருமே லாதல்ல வாய்ந்து. (சஐ)

பணியை யுருக்கிற் பணிவிகற்ப மாய்ந்து
பணிபொன்ன தாமென்னப் பாராய்-அனிமையதாக்
காண்ப வறிவாகக் கண்டுணர்ந்து சிந்திக்கில்
காண்பனமேலா வன்னியமாக் காண்க. (சஎ)

அறிவுகாட் டத்தி லலைகடல்போ லெங்கும்
பிறிதின்றித் தானே பிறங்கும்-அறிகிலைகொல்
இவ்வாறு சிந்தித் திருநிலையுங் கண்டுகொக்கில்
ஒவ்வாத தீர்ப்பென் முனர். (சஅ)

அறிவை யணுவளவென் றுக்குமவர் தீர்ப்போ
அறிதி யொருதலையென் றம்தோ-வெறியெங்கன்
தீர்ந்துய்வை யெம்மதத்துஞ் சேராதிவ் வுண்மைகிலை
ஓர்ந்துணர்ந் து நின்றிடுவை யுற்று. (சக)

ஆயுட்டத் தாலே யறிவணுவா மென்ச்
சுயவறிவு காட்டத்தாற் றோன்றும்-ஆயலெல்லாம்
அற்பமதா வெங்கணுநீ யாராயி லேயமறும்
கற்பனையி னுண்மையன்று காண்க. (நுஅ)

அறிவு மறிவனவு மாமிரண்டி லுண்மை
யறிவே யபாவ மனைத்தும்-அறிவன்றிக்
காட்டவலா ரில்லையதாற் காணு மசந்தாதி
காட்டுதும்யா முண்மைதனை நன்கு. (நுக)

சத்தாதி பைத்தும் தடையின்றி முன்பினிடை
யொத்தே விளங்க லுணர்வென்றே-வத்துநிலை
சாற்றுவன்யான் கண்ணுறுமே சாந்தமதா ஞாயத்துக்
கேற்றமுறைக் கெல்லா மியைந்து. (நுஉ)

பரிச்சின்ன மில்லாப் பரவஸ்து வீதே
யுரக்குறியாம் காட்டுதும்யா மோரத்-நிரப்படவே
எம்மதத்தோர்க் கேனு மிரியாதிங் கையமறச்
சம்மதமாகத் தணிந்து. (நுங)

ஆபேதவா தத்தைத் தடக்குவே தாந்தத்
தபாநுகுண மின்றி யொளிர்தல்-சுபாவமதா
நின்ற பரவறிவை நேராகக் கண்டதுவா
நின்றவர்க்கு யாரே நிகர். (நுச)

அறிவாக நின்ரு லயலெங்குங் காணு
அறிவாக் கரைக்கிலெதி ராமோ-பிறிதெல்லாம்
காணுத குற்றமே கண்டாரடி வணங்கிக்
காணர்க்குச் சொல்லாங் கடை. (நுஞ)

கண்டுணர்வாய் நின்ற கருத்தின் மதாம்போல்
கண்டிலம்யா மாரு தாண்பவற்றுள்-அண்டர்பிரா
னேனு மறியாமே யிவ்வறிவா யன்றிசுகம்
எனுனக்கிங் கைய மிதில். (நுசு)

அறிவா கலினு லனைத்துயிரு மின்பஞ்
செறியுலகை யன்றித் தெரியா-பிறிதாகக்
காளைவும் தானுகக் காணிற் சுகந்தானும்
காணுமோ துன்பமிதிற் கான். (நுஎ)

உலகுசுக மென்றளவு மோயாத் துயரே
உலகமுயிர்க் கன்னியமா யொன்றில்-பலகற்றும்
அன்னிபமா நில்லாதே யாராயிற் சோதனையால்
தன்னுருவாக் காணுஞ் சகம். (நுஅ)

தெரிவன்றி யென்னைத் தினந்தேடி னலும்
தெரிவன்றிக் கண்டிலன்யான் றிண்ணம்-தெரிவொன்றே
மெய்மெய்மெய் யெவ்விதத்து மெய்யலதை நானென்ன
பொய்பொய்பொய் யொய்பொய்பொய் பொய். [லோ

கோசமைந்து நானன்றுக் கொள்ளப் படுவதெவன்
நாசஞ் சடந்துக்க நண்ணுமே-யேசுமிவற்
றுலறினை யானெனற்கிங் கையமிலை யென்சொலினும்
சாலப் படித்தார்க்கும் தான். (சுவ)

அசத்துசட தக்கமதே யாமைந்து கோசம்
அசத்தலவென் றுர்க்கேனு மாமோ-நிசத்திலே
நாட்டமுற்றிங் கொவ்வொன்று ஞாயத்தா லாராயின்
சேட்டித்து நிற்றலுண்மை சித்து. (சுக)

நானறிவன் றென்கைக்கு ஞாயமிலையுண்டாயின்
நானறியச் சொல்லவலார் நான்காணேன்-ஊனறின்றிப்
பொய்யல்ல வெவ்விதத்தும் போதமே யானென்னல்
மெய்மெய்மெய் மெய்மெய்மெய் மெய். (சுஉ)

நனவு நினைவோடே நண்ணுங் கனவுங்
கனவறிவின் லேசமதாக் காணும்-இனையவல
அவ்வறிவை யன்றியிலை யாயுங்கா ணுமெனலும்
இவ்வகைய தாலேக மே. (சுங)

என்னனவு வெண்ணினவு வெண்கனவு வெண்மறதி
என்ன விவகரிப்பா லேகமே-யின்னமுஞ்சேர்
யாமறிவன் மேலிங்க னெவ்வாறு கொள்ளுதும்யாம்
தாமதமே னேற்கவிதைத் தான். (சுச)

விருப்பு வெறுப்போடே மேவுசுக துக்கம்
உரித்துருமக் கன்றே வுணர்வே-தெரித்தாரம்
தோன்றி மறையினைபோற் றோன்றி மறைகிலம்யாம்
சான்றுருமை யன்றியுண்டோ தான். (சுரு)

வால குமார வயோதிகமென் றிப்மூன்றும்
சாலவுரு மாயிடினுஞ் சான்றுவோம்-மேலுணர்வே
யாமெனம்மிங் கையமிலை யாமாய்த லின்றேனும்
நீமனனஞ் செய்துய்வாய் நின்று. (சுசு)

மூன்றவத்தை தம்மோடே மூன்றவத்தாக் காட்சிகளும்
வுன்றிரின் றுங்காங்கே யோர்ந்துமல-சான்றுரும்
என்னு மனுபவத்தா லேகமெனற் கையமிலை
இன்னு மறைகுதும்யா மிங்கு. (சுஎ)

இப்பிறவி முன்பின் னிருப்பதற்கிங் ஙையமிலை
யிப்பிறவி ரூமென் றிராகதினுல்-இப்பிறப்பிற்
கேவலத்தி லெல்லாங் கிடக்காம லெங்கொழிந்தோம்
ஓவலின்றி நிற்ப முணர்ந்து. (சுஅ)

அவத்தைதொறு மங்கங் கதுவதுவா நிற்பம்
அவத்தைமுன்பின் னப்போ தறியோம்-பவத்தையோ
முன்பின் னறிவதெங்ஙன் மூடவா தத்தாலே
முன்பின் பிறப்பிலையோ மொய்த்து. (சுசு)

ரூமுடலன் றுயிருக்க ரூமுடலா நிற்பதனுல்
ரூமுன்பின் சென்மத்தை ரூடலெவன்-ஆமிதனும்
சென்மமிலை யென்றதெவன் சித்தரூ மில்லமோ
உன்மனநி லாய்ந்துணர்ந்து யுற்று. (எம)

எங்கே செகத்தோற்ற மெங்கே யொடுக்கநிதம்
அங்கேநின் றேதுதந்தே லாகுமே-சங்கையிலாத்
தீப்பதுரா மென்றே திடங்கொண்டு நிற்றியினிப்
பார்க்கா துலகைப் பரிந்து. (எக)

மூன்றவத்தைக் காதார மூதறிவே மூன்றுகா
சான்றெப் பிறவிக்குஞ் சாற்றறிவே-யூன்றி
உணருங்கா லெப்போது முள்ளதே காலம்
அணவா தறிவென் றறி. (எஉ)

அறிவுகனைச் சார்ந்தங் ககலு மனந்த
பிறவியறி வாகாது பேசில்-அறிவிதனைக்
காலங் கடந்ததெனல் கண்டோ மயலில்லை
சாலப் படித்தார்க்குந் தான். (எங)

தன்னை யயலாகத் தானறித றுணென்று
தன்னைத்தா னயறித றுணென்று-முன்னையது
அப்போ தப்போதறியு மாபாசம் பின்னையதோ
எப்போது மேயறியு மே. (எச)

அகம்புறத்திற் காணிவ் வறிவில்வா றின்றும்
புகலேல் புறகாட்டம் புக்கு-மிகுமறிவை
முன்பின் னிலதாக மூதறிவே சத்தாகும்
என்கொலோ வையமினும். (எந)

ஸ்மரனையன்றி யெவ்விடமுஞ் சாற்றக் கிடையா
ஸ்மரனையே யெங்கிலேக்குஞ் சார்வாம்-ஸ்மரனைக்குத்
தேசபரிச் சேதஞ் சிறிதுமிலை யுற்றுணரில்
ஏசுதற்கிங் கில்லை யிடம். (எசு)

அந்தர்முக நாட்டத் தறிவகண்ட மாவிளங்கும்
வந்த வுடலளவா மற்றையர்க்குச்-சந்ததமும்
தேசபரிச் சேதமிலை சிந்திக்கி லிவ்வறிவுக்
காசடைவ லோத வர். (எஎ)

ஆர்க்காகு மாகா தறிவெங்குங் காணுமே
ஆர்க்குஞ் சுயவடிவீ தாதலினற்-போர்த்தெவர்க்கும்
வத்துபரிச் சேத மருவா தறிவிதனும்
சத்திதுபோ லில்லை தனி. (எஅ)

பரிச்சின்ன மில்லாப் பரஞ்சோதி யீதே
உரித்தெவர்க்கு மல்ல வுணாத்-தரித்துள்ளே
காண்பார்க்கே யன்றிக் கவிஞரோ யாயினுமென்
காண்டவமில் லாததினுங் காண். (எக)

காரணமுங் காரியமுங் காணு மறிவன்றிக்
காரணமுங் காரியமுங் கற்பிதமே-ஆரணமுஞ்
சொல்லு நெறியிதுவே சோதித் ததுவாகச்
செல்லுமுறை கண்டுநீ செல். (அ)

சத்தெனலே யேற்றதுபோற் சந்ததமு மாறின்றிச்[வே
சித்தெனலேயேற்பதெங்ஙன் செப்பெனிலோ-இத்தெரி
கற்பிதமு மல்லதுமாய்க் கண்டுணரா நேரமிலை
சிற்சொரூபந் தானே தெரி. (அக)

தன்னையறி யாதெல்லாஞ் சாற்றே மறிவென்னத்
தன்னை யயலாகத் தானறியத்-தன்னைத்தான்
காணு வகையுண்டோ கண்டார் பணிபூண்டு
காணுதார் குற்றமே காண். (அஉ)

தன்னே யயலாக்கித் தான்காண்ட றன்னுலே
தன்னேத்தா னுள்ளபடி தான்காண்ட-றன்னதன்றே
சித்துருவந் தானே சிறிதுமிந் லேயமிலே
எத்தடையு மில்லாம லே. (அக)

சத்துசித் தேற்றதுபோ ருனின்ப மென்பதையும்
ஒத்துத் தெரித்தியெனி லோதுதுட்யாம் பித்தகலத்
தானயலா நிற்பளவுந் தன்னின்ப மன்னியமாம்
தானுன்னை யாகிலின்பந் தான். (அச)

அறிவன்றி யுண்டே லயலெதுவு மின்பம்
அறிவன்றி யுண்டென்ன லாகும்-அறிவன்றி
யில்லையெனி லின்றென்ப மிங்கெறியா லின்பமதே
வல்லையோ நீமறுக்க வந்து. (அடு)

சுகவடிவ மெல்லாஞ் சுகசா தனங்காண்
சுகவடிவஞ் சித்தே சுயம்பிங்-ககமமதை
யற்றறிவா னுருக் கறிலே சுகபோகம்
மற்றையருக் கேதிவ் வகை. (அசு)

சுயவறிவுக் கில்லே சுசாதியாதி மூன்றும்
வியந்தறிவ தெங்ஙனெனின் மேலே-நயந்ததுகேள்
சித்துருவ மல்லாத சிவேச ரின்றிதனுற்
சித்தைப்போ லில்லையொரு சித்து. (அள

கடபேதத் தாலே கடவின் பலவேல்
உடல்பேதத் தாலே யுயிருந்-திடம்பெறவே
பற்பலவா மென்பம் படாதேற் படாதிதுவும்
கற்பனை நாட்டந்தவிர்ந்தக் கால். (அஅ)

தேகபோக கன்மமிரு தேகாபி மானமதா
லேகபல வெவ்வுயிர்க்கு மென்றிடிலோ-ஏகமே
உண்மையுயிர் கூட்டத் துபாதிகூட் டத்தனந்தம்
உண்மையெது கண்டுகில் லோர்ந்து. (அசு)

சுசாதிகந்தா னிக்ஷமே சோதிக்கி லில்லை
விசாதிகமோ விவ்வுலகம் வேறும்-விசாதிகந்தான்
எவ்வா றிலையென்னி லெங்கு மறிவன்றி
எவ்வாறெங் குண்டா மிது. (கூய)

அன்னியந்தா னுதலினு லாகா விசாதிகமும்
தன்னுளே சர்வமெனிற் றானன்றி-அன்னியந்தான்
இல்லா தொளிர்வதினு லின்றே சுகதமுந்தான்
நல்லாய் சுகமெதுவோ நாடு. (கூக)

அறிவின்ப மாயினயலின்ப மாக
அறிவேனலெவதெனி னந்தோ-பிறிதாகத்
தன்னை யறிவதினும் றானறிவ தாவிளங்கிற்
பின்னைசுகம் வேறே பிழை. (கூஉ)

நாமே யறிவாகி ஞஞ்சச்சி தானந்தம்
நாமே யசத்தாதி நாமயங்கில்-நாமாரென்
றுன்னும் விசார மொழியாது நிற்றியேல்
தன்னந் தனியாவை தான் (கூங)

சிதாகாச மன்றியிலை சிந்தையெனில் யாதும்
சிதாகாச மன்றியுண்டாய்ச் செப்போம்-சிதாகாசத்
துள்ளைநிலை நாட்டத் தொழிபாது நிற்றியேல்
உண்மையதா யாது முரு. (கூச)

இதையன்றி யுன்சிந்தை யெங்கேகா ணென்னப்
பதையாது நின்றுற்றுப் பார்க்க-எதையும்தான்
காணேன் வெளியன்றிக் கண்ட வெளியிருளாக
காணுதே னென்னிலிதைக் காண். (சுடு)

வெளியுலகாக் காணின் வெளியிருளாத் தோன்றும்
வெளியை வெளியாக மெய்யாத்-தெளிந்துணர்ந்து
காணிற் சதாகாலங் காணு திருளெங்குங்
காணுஞ் சுயஞ்சோதி காண். (சுசு)

இதுவோஞ் சொற்கவுரு வீதன்றிக் காணும்
இதுவே சுருதியுத்திக் கேற்றல்-புதியதல
என்றும் பழமையதே யிதாக நீபழகில்
என்றுங் கவலை யிலை. (சுள)

பந்தமுத்திக் கேது பகரசுத்த சுத்தகுணம்
சந்ததமு நிற்குமிடஞ் சைதன்யம்-இந்தவறி
வல்லா வுயிரிலையா லாயாது நிற்பதெவன்
வல்லா யிதிலென் மயல். (சுஅ)

உடலிலக்காற் றுன்ப முணர்விலக்கா லின்பம்
உடல்கற் பனையதனு லுண்மை-திடம்பெறவே
மூன்றுடலைக் காணுது மூன்றுடலா நிற்பதறி
வுன்றியதைக் கண்டிங் கொளிர். (சுக)

உடலிலக்கு மூன்று மொருங்கே யொழிக்கத்
திடவுணர்வு தானே திகழும்-இடமில்லை
ஐம்முறற் காதலினு லாய்ந்துணர்ந்து நிற்றியேல்
பைய வகலும் பயம். (ஈ)

உடலெடுத்த தன்மூங் குறங்கற்கே யென்பர்
உடலன்றித் தன்னை யுணரார்-மடந்தீர்ந்தார்
சித்துருவா தற்கென்பர் சித்துண்மை யாதலினுல்
எத்துயரு மில்லாம லே. (ரக)

அறிவன்றி நானெனைக்கிங் கையமிலா வஸ்து
பிறிதில்லை யெங்குமெனிற் பேசா-தறிவாகில்
சொந்தநான் சொந்தவுட ல்சொந்தசுகம் வேறில்லை
இந்தநெறி போலெங்கு மில். (ரஉ)

ஆரோடார் சொல்வதெதை யன்னியமா நிற்பதெங்கே
தோரா ருனையன்றே தேருங்கால்-தோரார்க்கிங்
கன்னியமாச் சொல்லி யறிவாக்க வேண்டுவதால்
நன்னயமாஞ் சொன்னதுவு நாடு. (ரஙு)

தேகநோய் மானதநோய் செப்புங்கால் மும்மூன்றுந்
தேகநோய் வாதமுதல் தீராநோய்-சோகமன
நோய்மயலோ டையம் நுவலுந் திரிபினையேன்
மாய்வுறு மில்லை வலிந்து. (ரச)

சிதம்பரமே சிவன் சிதம்பரமே யீசன்
சிதம்பரமே யெவ்வுலகந் தேரில்-சிதம்பரமோ
சிற்சோதி வெற்றவெளி தீர்வையிதி லேயமிலை
கற்பிதமே மாறுக்கில் காண். (ரடு)

சிந்திக்குஞ் சிந்தை சிதம்பரமே யெவ்வுயிர்க்கும்
சிந்தித்துப் பார்க்கிற் றெரியுமே-யிந்தநிலை
கண்டிருக்கி லெம்மயலுங் கட்டறுவ தையமிலை
உண்டுகொலோ விந்நெறிபோ லோது. (ரசு)

சிதம்பரமே நானென்றுச் செம்பொருளாத் தேரில்
சிதம்பரந்தா னுமளவுஞ் சிந்தித்-திதமகிதம்
உள்ளபோ தெல்லா முணர்வுருவாத் தற்காணில்
எள்ளளவுங் காணு திவை. (ள்எ)

உடலன்றிக் காணு யொருவனையு மெங்கும்
உடலலவே யெவ்வுயிரு மோராய்-உடலன்றி
யுன்னேநீ கண்டிலதா லோர்வதெதி லீதொழியில்
என்னபிறப் பாமோ வினி. (ள அ)

பொய்யிதென்று காண்பு புகன்றதசத் தாதியெனல்
மெய்யிதென்று கான விளம்பியதிற்-கையமுமச்
சத்தாதி யாகுஞ் சதசத்தும் மித்தையதே
எத்தானு மெக்கடையு மில். (ள்க)

அறிவேமெய் யாகு மறிவனபொய் யாகும்
அறிவோ தனேயறிவ தாகும்-அறிவனவோ [தான்
அன்னியஞ்சீ வாதியென லாய்ந்துணரார்க் கெங்கணும்
என்னுலண்டு துன்பமன்றி யில். (ள்ஐ)

பொய்யைமெய் யென்றறிவார் பொய்யாக மெய்யறிவார்
பொய்யைப்பொய்யென்றகற்றிப் போதமுடன்-மெய்யை
[மெய்
யென்றுணர்ந்து நிற்க விதைவகுத்த தென்றுணர்க
என்று மொருதகையா ரிங்கு. (ளக)

சத்தாதி யைந்திற்குந் தக்கதறி வாமுடியும்
பித்தாகு மற்றதற்குப் பேசுங்கால்-எத்தானும்
தன்னேத்தா னுள்ளபடி சந்ததங்கா ணப்பயில்வார்க்
கின்னதே தீர்வென்றிரு. (ள உ)

அறிவின் மயக்கமதே யன்னியம்வே றின்றுரல்
அறிவே யறியாமை யர்கும்-அறிவுணர்த்துஞ்
சத்தாதி யைந்துகுணந் தானே யசத்தாதி
வித்தாதற் கில்லைவெறி வேறு. (ககஈ)

சத்தே யசத்தாகுந் தானே குணியதனுல்
சத்துக்கு வேறன்று சந்ததமும்-யுத்திக்கு
மாறன்று சிந்திக்கில் வத்துநிலை யாய்வார்க்குத்
தேறின்று சந்தேகந் தீர்ந்து. (ககச)

சத்தே யசத்தன்றேற் சத்தியம்போற் றோந்றுது
சித்தே சடமன்றேற் சித்துப்போ-லெத்திறத்துந்
தோற்றுப பிரியமே துன்பமன்றே லின்பம்போற்
றோற்றுமோ வென்னே துணிவு. (ககடு)

தானேமெய் பொய்யதாத் தானலவாக் காணறிவு
தானேதென் றுய்ந்ததுவாத் தானுகில்-வானுதி
கற்பனைசின் மாத்திரமாக் கண்டோன் றிரண்டற்று
நிற்பதுவே தீர்ந்த நிலை. (ககக)

என்றளவி லுண்மையுதித் தெங்குஞ் சுகவடிவாய்
நின்றடியில் வீழ்ந்தேத்தி நின்மலமாய்-அன்றுங்கே
நிர்விகற்ப மாயினை னேர்ந்திதனைத் தானுணர்ந்தார்
நிர்விகற்ப மாவார் நிறைந்து. (ககள)

வஸ்துபரிசோதனவிளக்கம்


முற்றிற்று.

படலம்-கசு-க்கு-ஆ-கவி-தூடு.

திருச்சிற்றம்பலம்.

களவது

தத்துவ விளக்கம்.



அங்கொருவன் வந்தவர்பா லையனே யென்றேத்தி [க்
யங்களிக்க மென்பவெலா மாய்ந்துணர்ந்தும்-இங்கெவரு
கின்பதுன்ப மென்றறியே னிதுணர்த்தி யென்றடியில்
அன்புடன்வீழ்ந் தேயெழுந்தா னங்கு. (க)

தேகநா னென்றளவும் தேகத்துக் கென்றுரைப்பந்
தேகஞ் சடமென்னிற் செப்பலே-தேகமன்றி
யுள்ளோ வணுபவந்தா னுலகத்துக் கொத்திலதேற்
கண்டதுண்டோ வொத்துணர்ந்துங் காண். (உ)

காணுமற் போயிடினுங் கைக்குமல மூட்டையன்றே
வீணர் வீண்வசனம் வேறுண்டோ-காணுற்றீ
இவ்வுடலை யன்றியென வீதோர் முதலன்றேல்
எவ்விதத்தும் பேச்சன்றி யில். (ங)

குடம்பை யுடலென்னிற் குறுகிற்றே பாவம்
இடும்பையே யென்னி லிலையே-யெடும்போது
வந்தபோ தன்றி வராதிருக்கிற் சம்மதமாம்
இந்தமொழி விட்டிங் கிசை. (ச)

எங்காளு நாமெனினு மீதுநமக் கன்னியமேல்
அன்னியமா காதிருக்கி லாகுமோ-தன்னுல்
அறியப் படுவதெனி லாமோ வறியில்
நெறியாகு மென்னி னினை. (இ)

பொறிகாணுஞ் சீவன் புகன்றமுத லாமோ
அறிவதனு லன்னியத்தை யந்தோ-வறிதாகும்'
சொல்லாலிங் காய்வதினுஞ் சோதிக்கி னிட்டைதனில்
எல்லாம்வந் தெய்து மிதில். (ஈ)

என்றளவில் வீழ்ந்தருளென் றேத்தியபின் கண்மூடி
யின்றளத்தி னின்வடிவை யீங்குற்று-நின்றிருந்திங்
கெவ்வண்ணை மாவதனை யீங்குளர்த்து கென்னவவன்
அவ்வண்ணைங் கண்டறைவா னங்கு. (உ)

தூலவுரு நாணைகத் தோற்றுதெனின் மாறுது
சாலவதைக் கண்டிருந்து சாற்றெனவே-தூலவுரு
மெல்லக் கரைவதெனின் மேலெவ்வா றுகுதென
மெல்லவெளி யென்றுன் விளைந்து. (ஊ)

அவ்வா றிருந்தப்பா லாகுநீலை சொல்லென்ன
ஒவ்வாச் சிதானந்த மோங்கிற்றே-யிவ்வாறென்
றென்னையறி யேனப்பா லேதொன்றுங் கண்டறியேன்
உன்னரிய மோன முறும். (எ)

என்றவனை நோக்கி யிதுநானங் கில்லாதென்
னன்றறிவா யின்றுடலா' யாயினேன்-நன்றேகாண்
ஆனவவ னுவென்ன வன்னே னைசவமுனின்
நுனைபின் சொல்லா னதை. (ஏ)

ஒன்றுமல னன்றல்ல னுற்றுணரி னுனென்றுன்
என்றவனீ யாயதெவ னிவ்வுடலாய்-நன்றுக
இம்முறைநீ யோதென்ன லெற்கிங் கரிதென்றுன்
எம்முறையால் கேட்டா யெனே. (கக)

ஸ்மரணையன்றி யெங்குஞ் சகத்திருப்பு க்காணன்
ஸ்மரணைக்கே யின்பதன்பஞ் சாரும்-ஸ்மரணைதான்
முந்நீர்த் துளிபோலு முற்றுமாய் நின்றறிவில்
ளுன்னீர்மை சொல்வதெவ னிங்கு. (கஉ)

சகத்தருவ மாயில் ஸ்மரணையன்றி யில்லை
மிகப்படித்து மன்டாதார் மேலோர்-தகைத்தென்னே
ஞானி கடைநாட்ட நண்ணினர்க் கேதில்லை
யானகன்றே னெயமெலா மிங்கு. (கங)

அறிவான போதில்லை யாமின்ப துன்பம்
பிறிதான போதுண்டு பேதம்-அறிவாரோ.
நின்னருட்கு வேறுனர் நின்மலனே யென்றிறைஞ்சி
உன்னலுன் ணமையில லுற்று. (கச)

நடுநோ மிவ்வாறு நின்று விழித்துப்
படியில் விழுந்து பணிந்திங்-கடியேனுக்
கின்னு மொருகுறையுண் டுதகற்று வாயென்ன
அன்னதுயா தென்று ரவர். (கஞ)

விழிப்புறக்கம் யாதென்ன மேலா நிலையைப்
பழிப்பின்றி நீயடைத்தம் பாராய்-விழிப்புறக்கம்
நின்பாலு முண்டதனு னீயே யுரையென்றுர்
அன்போடு நின்றனைவ ரங்கு. (கசு)

எதைப்பொருளாக் காண்ட லெதையாஞ் சுகித்தல்
எதுவும் பொருளலவே யெங்கும்-அதுவும்
ஆராய்ச்சிக் கண்ணே யபாவமாப் போவதினல்
ஆராய்ச்சி யேதக்க தாம். (கஎ)

சின்னத்தைப் பற்றியவிச் சின்னமுற்ற தாதலினல்
உன்னலம்யாமிவ்விரண்டுமோர்பொருளா-இன்னவற்றை
காணறிவே யுண்மையதைக் கண்ட துவா னலுறக்கங்
காணலிலை யென்றுணர்ந்தேன் கண்டு. (கஅ)

ஸ்மரணையன்றி யில்லை சகத்தெனத் தேர்ந்தும்
ஸ்மரணதனை நாடாதார் சற்றும்-ஸ்மரணைக்கு
வேறுசக மென்னுமயல் விட்டொழிவ தெங்ஙனிலை
நீறுசடை தாடியதா நின்று. (கக)

சந்தேக மற்றுர் ஸ்மரணநாட் டத்தென்றும்
சந்தேகங் கொள்ளார் சகமசத்தில்-அந்தோ
அறியா ரிதனை யயலாகக் கொண்டு
வெறிவிடயந் தான்டார் மிகுந்து. (உ)

அறிவிலே தோன்றி யறிவில் விளங்கி
அறிவில் மறையு மினைத்தும்-அறிவன்றி
யில்லையெனக் காண்போர்க்கே யில்லை விழிப்புறக்கம்
இல்லையோ வேனையருக் கிங்கு. (உக)

அறிவனவே மெய்யென் றகம்பாவ முற்றுர்
அறிபவற்றை யன்றி யறியார்-அறிவனவே
தோற்ற னனவாஞ் சுழுத்தியவை தோற்றுமை
மாற்றியினவ வேறென்பர் மற்று. (உஉ)

அறிவே சடசித்தா யாங்காங்கு தோன்றும்
அறிவசதி யேயுறக்க மாகும்-அறிபவற்றைச்
சத்தென்பார்க் கேய்வத்தை சுத்துக்கட் கேதவத்தை
எத்திறத்து மென்றிறைஞ்சி யிங்கு. (உங)

அறிவாகி நின்றுலு மையோ வுலக
வெறிதா னடிக்கடிக்கு மேவா-துறுதியாய்
நிற்க வருள்புரிக நின்மலனே யென்றேத்த
அற்புதனின் றீதுனைப்பா னங்கு. (உச)

எப்பொருளு மெக்கெக்கே யெத்தன்மைத் தாயிடினும்
அப்பொருளைச் சோதனைசெய் தாங்காங்கே-மெய்ப்பொ
[ருளாக்
காண்ப தறிவெனலைக் கற்றுமுண் ராதெவன்கொல்
மாண்புடையோ யென்ன மகன். (உஞ)

தோல்மூடி யாவுயிர்க டோற்றுதற்கென் செய்வனெனில்
தோல்மூடி பூதமதாஞ் சோதனையில்-சால்புணர்ந்தோய்
அல்லவல்ல வென்றே யறிவாகு மட்டெனையு
மெல்லமெல்ல வாய்ந்துநிற்றல் வீடு. (உசு)

காரணமுங் காரியமுங் காணுமற் போமளவும்
ஆரணத்துக் கொத்த வனுபவத்தாற்-பூரணத்தை
விட்டகலா தேயிருக்கில் வேற்றுமையெல் லாமதுவாங்
கட்டங் தராதெதுவோ காண். (உஎ)

ஓவாது தோற்றிடினு மோயா திதுசெய்க
மாயா மயலெல்லா மாண்டிடுமே-நீயேகாண்
என்னவனு மிறைஞ்சிப் புகன்றிட்டான்
இன்னு மொருகுறையுண் டென்று. (உஅ)

உண்மைபோற் றோற்று முலக மறிவாக
உண்மையாக் காணுதென் னுத்திபோல்-உண்மையாக்
காண்பதறி வுக்கன்றோ கண்டிருக்கி லவ்வறிவைக்
காண்பதெங்ங னிவ்வுலகங் காண். (உசூ)

அதுவு மிதே லகன்றவெளி யன்றி
எதுவுமிலை யென்றபடி யிங்கே-அதுவதுவா
யாகாது நிற்றி யறிவாய் விளங்குவைபின்
போகா மயலெதுவும் போய். (ஈ0)

அரிதே லிதுவு மவத்தை யிரண்டுங்
திரிவதனுற் சாயாது சிந்தித்-தொருவசத்தும்
நிற்றிவிளங் காதெனினு நின்றவுழப் பேன்பொய்க்கும்
பற்றறப் பற்றும் பரம். (ஈக)

ஆகா தெனிலிதுவு மவ்வவ் வுருவுமயம்
ஆகாது சோதிக்க வாங்காங்கே-மோகாதி
நிற்குமட்டு மொவ்வொன்று நீங்கா ததைவிட்டுச்
சற்குணனே யெவ்விதத்துந் தான். (ஈஉ)

பொற்பணியெல் லாமுருக்கிற்பொன்னன்றியண்ணுமோ
கற்பிதமெல் லாமுருக்கிற் கல்லாமோ-சிற்சொரூபம்
அன்றித் தனித்திங் கறிந்திடுக வெப்பற்றும்
இன்றிப் புறங்காட்ட வின்று. (ஈங)

சேறுநீ ரும்போலுஞ் சிந்தைசக சம்பந்தம்
தேறவிக்குங் கொட்டையெனத் தேறுதற்கு-மாறின்றிக்
கண்டிடுக நின்னுளத்தைக் காண்பவன்போல்வான்மீனை
விண்டையநீங்க விளைந்து. (ஈச)

காமக் குரோதக் கலகமுருத் தோற்றத்தில்
ஆமென் றுணர்தற்கிங் கையமிலை-தாமதமின்
றெவ்வுருவும் பொய்செய்க வீதே யவைகொல்லும்
இவ்வுபா யத்தையன்றி யில். (கூடு)

திரிபுடியுள் ஞானத்தைச் சிந்தித் திடுக
ஒருகம் பனையுமின்றி யொன்றுய்த் திரிபின்றி
நிற்குநிலை வாய்க்குமதா னிர்விகற்புக் காசிக்கில்
தற்குநிலை வேறில்லை காண். (கூசு)

உடலாளாக் கற்றுணர்ந்த வூனக்கண் போக்கி
உடலவனீ னானென் றுணரும்-திடமதையும்
போக்கி யுணர்வுருவாப் புந்திகனிற் கண்டுணர்க
நீக்கமின்றித் தானுவை நீ. (கூள)

என்று மொருபடித்தா யெவ்விகற்ப மற்றதுவாய்
நின்று விழிதுயிலி னீங்காது-ஒன்றுகில்
சிந்தைபய நானந் திகிலைய மாருதல்
எந்தவிதத் தம்மில்லை யே. (கூஅ)

கற்பனைகள் விட்டொழிதல் கற்பனைக டானுதல்
அற்புதத்தி லாசைகொள லாங்கொழிதல்-சிற்சொருபந்
தானுக லன்றுதல் சந்ததமுங் கண்டுணர்க
தானேதா னுதற்குத் தான். (கூசு)

ஏதேது கண்டாலு மேதேது வந்தாலும்
ஏதேது பந்தத் திருந்தாலும்-ஏதேதும்
தானுகா வண்ணம் தனித்திருக்கக் கண்டுணர்க
ஞானுகா ரத்தா னன்கு. (சஅ)

புத்தி விகற்பமதே பொய்மாயை யென்பதினும்
புத்தி விகற்பமதைப் போக்கிடுக-சித்தங்
கலங்காமை தந்து கனையின்றி யின்பந்
துலங்குவதற் கையமெவன் சொல். (சக)

எதிலுங் களிக்கா திருந்தறிவா நின்று
பதியாதி சோதித்துப் பார்த்திங்-கதுவதுவாய்
ஆகாது நிற்றி யதுவேகான் முத்திநிலை
மோகாதி போக்கு முடிவு. (சஉ)

இவ்வண்ணஞ் சொல்லவவ னேத்தி யடிவணங்கி
அவ்வவ் வனுபவத்தை யாங்காங்கே-செவ்விதாக்
காட்டினுய் கைம்மாறு கண்டிலனென் மேகித்தன்
நாட்டமதி னின்றிட்டா னன்கு. (சஙு)

தத்துவவிளக்கம்.

முற்றிற்று.

படலம்-கஎ-க்கு-ஆகவி-கூசுஅ.

திருச்சிற்றம்பலம்.

கழ-வது

அத்துவிதவிளக்கம்.

(*)

வித்துபரி சோதனையான் மாயை தவிர்த்தாற்போல்
அத்துவிதத் துண்மை யறிவித்திங்-கெத்தடையும்
இன்றி யிலக விறையே யருள்புரிக
வென்று ளெருவ னிறைஞ்சி. (க)

துவிதமிஃ தென்றுணர்த்திச் தூய நிலையத்
துவிதமிஃ தென்றுணரச் சொல்வம்-துவிதமதோ
ளெப்திப் பிரியமென னீங்கு மவத்தையிலே
ளெப்தியாய்க் கேட்டிடுக நின்று. (உ)

ளெப்திமய மன்றி நிகழுஞ் சகலமிலே
ளெப்திமய மன்றென்பார் நில்லாரோ-சப்தமாய்
வாதித்து மின்ப மயங்கே வலமாகும்
நீதிக்கு மாறென் னினை. (ங)

அறிவோடிங் கானந்த மாமிரண்டு கூறும்
அறிவுசுக மொன்றுகா தாகில்-நெறிமாறி
மிரவத்தை யொன்று பிருக்கு மனுபவமே
தோருதியுன் னுள்ளே யுணர்ந்து. (சு)

அறிவிழப்பே யானந்த மான்மப் பேர்க்கே
யறிவுநிதங் கான்பை யகலா-திறையேனு
மிவ்விரண்டை யன்றி யிருக்கவிடங் கண்டிலம்யாம்
எவ்வுயிர்க்கு மெப்போது மே. (நி)

விழிப்புறக்கந் தம்முட்டா மேவில் கலப்பேல்
பழிப்பி லலையும் பகர்வம்-வழுக்கியே
சின்னமவிச் சின்னந் திரிவிலதாற் றம்முட்டாம்
இன்னதனு லொன்றன் நினவ. (சு)

அறிவுதனி லானந்த மான்மந் தன்னில்
அறிவிலதா லேகமென லாகா-தறுதியாய்
இத்துவித மெங்ங னிறந்தொளிருஞ் சொல்லேயாம்
அத்துவித மென்ப தறி. (எ)

அருந்தல் பொருந்த லலைச்ச லறிவில்
இருந்தாறல் கேவலத்த தின்பில்-தெரிந்திலகொல்
சும்மா விருத்தலெனல் சொல்லளவே யன்றியிலை
எம்மாலென் சொல்வோ மினி. (அ)

அறிவன்றிச் சாக்கிரமு மானந்த மன்றி
வெறிகே வலமுமின்றுல் வேறுப்-உறுதியாய்
உள்ளதறி வானந்த மொன்றுகா தெங்ஙனும்
தள்ளா லெவருமிதைத் தான் (கூ)

இவ்விரண்டை யன்றி யெதைத்துவித மென்றிடினும்
அவ்வவற்றிற் கானி யணுகுமே-எவ்விதத்துங்
கற்பிதமே யாதலினுற் காணுது நீமயங்கேல்
அம்பைப்போலுள்ளமை யறி. (ஙு)

இன்னபொரு ளென்றறியா ரீசனுயி ரென்றுளர்வர்
அன்னவர்க்கு மாதார மாகுமே-சொன்ன
அறிவானந் தத்துவித மாய்ந்திவற்றைக் காணில்
வெறியெல்லாம் போகும் விளைந்து. (கக)

அறிவின்பப் போலி யறிவின்ப மென்னு
நறுதியா யுண்மைதனை யோரில்-அறிவின்பம்
இன்னதெனக் காண்பை யிதுவே யறியுநெறி
இன்னதற்கு மாறென் னிசை. (கஉ)

இதுவே துவித மிதைமறுப்ப தெங்ஙன்
விதியேது மில்லை விவர்த்தம்-மதியாலே
சொல்வதெலா மென்னத் துவிதத்தை நாட்டவே
கல்வியெலாங் கெட்டான் கனைந்து. (கங)

ஐயாவென் றேத்தி யடிபணிந்திங் கித்துவிதத்
தய்யும்வனக கண்டிலன்யா னேயாது-மெய்யாய்
நிலைபிறழ்வா லொன்று நிறுத்துகெனக் கேட்கத்
தலையிட்டார் சொல்லத் தனித்து. (கச)

யானெனினு மல்லவற்றை யானன்றுப் போவதினுல்
நானென்ப தின்னதென நாடளவும்-ஏனென்றும்
இத்துவிதங் கண்டிலகொ லென்ன வவனுந்தான்
மெத்தவிசா ரங்கொண்டு மேல். (கஙி)

நானென்ன வெங்குமில நானென்ப தேதுமல
நானறிவ தாத்தீர நானுணர்ந்தேன்-நானறியும்
தத்துவம்போ லன்றதனுந் சங்கற்ப மற்றவுரு
சத்துசித் தானந்தந் தான். (கசு)

சுருதியுத்தி யாலே துணிந்தே னறிவின்
பிரதிபிம்ப நானென்று பின்னுங்-தெரிகிலன்யான்
கண்டு களிக்கவதைக் காட்டவலார் நின்னையன்றி
தொண்டனேயா ளென்றுன் றொழுது. (கஎ)

அறிவன்றி நானென்ன லன்னியமே லின்பம்
அறிவன்றி வேறென்ன லாகும்-அறிவன்று
அன்னியத்தை நானெனலா லவ்வாறிங் காவதெது
அன்னியமு மன்றே லறை. (கஅ)

வழக்குமயம் வேதாந்த மாண்டவிடத் தின்பம்
வழக்கின்றி நம்பல் மயக்கங்-குழகுழப்பாம்
மற்றையசித் தாந்தமெலா மாளாத் துயர்வினவே
கற்றுணர்ந்து மோர்வதிலே காண். (ககூ)

எந்தநா னுந்தா னிலையே யறிவன்றி
எந்தவிதத் தாய்ந்திடினு மெவ்வெவருஞ்-சந்ததமும்
தானல்ல வல்லவெனத் தானுக நிற்பதிது
மோனமதாக் காட்டு முடிவு. (உல)

அறிவுதனு வாவளவு மன்னியமே யின்பம்
அறிவேநா னுயிடலங் கப்பால்-அறிவின்பம்
என்னுங் துவித மிறந்தொளிரு நானெனலே
யுன்னுமுறை கண்டிங் குணர். (உக)

அறிவின்ப மேகமே யன்னியமாக் காணும்
பிறிதுநா னென்றளவும் பின்னும்-அறிவோன்
இப்பிறவி நானன்று மீங்ககறல் போலுமே
எப்பிறவி தானு மிசை. (உஉ)

அறிவே பிறப்புற் றவைஞானென் றேர்ந்தும்
அறிவன்றுப் போவதிலை லங்தோ-அறிவேஞான்
அன்றென்பார் சோதனையா லாபாச மேயுறுவர்
இன்றிதற்கிங் கையமிலை. (உஞ)

அண்டபிண்டம் யாவு மறிவாக் கனாதலினுல்
அண்டபிண்டம் யாவு மறிவுருவே-அண்டபிண்டம்
ஆவதுவே பந்த மழிவதுவே முத்திநெறி
ஆவதழி வல்ல வறிவு. (உச)

அதுவதுவாத் தோன்றியதுவதுவன் றுகி
யிதமகித மின்றுகி யெங்கும்-புதியதல
என்றும் பழயதல விவ்வறிவே ஞானென்னல்
அன்றே யுபாதி யது. (உரு)

பூதப்பௌதிகமே பூரணமா முட்புறம்பில்
ஏதக்கு மாகா விலைதோற்றம்-சாதக்கள்
யானெனதென்றீதென்னுர் யானெனதென்றுன்னறிவை
யானெனதென் பாரெங்கு மே. (உசு)

அல்லவற்றை யானெனதென் றுயாது கொள்வானேன்
அல்லவெனத் தன்னுவதென் னுனையோ-தொல்லையே
ஆன்மாக்கள் கஷ்ட மலமாக் காணுதே
தான்றுன தாகுமட்டுங் தான். (உள)

ஆனதொன்று மில்லை யழிந்ததொன்று மில்லையெனத்
தானுணர்காட் சித்தெளிவே தாகும்-ஈனமுறு
தென்று மொருபடித்தா மிவ்வறிவே ஞானுகில்
அன்றின்ப பேத மறும். (உஅ)

பிரதிபிம்ப நானென்னிற் பேதமையே துன்பம்
திரவறிவு நானுகி நின்னம்-பெருவெள்ள
மானந்த மாத லணுவளவு மையமிலை
தானறிவா னந்தமென றுன். (உசு)

சகமாதி யுண்டென்று சாற்றலு நாமே
யிகழ்தலு நாமே யிலையென்-றகமலவே
மூடந் தெளிவளவே முன்பின் னிலையிரண்டும்
நாடறிவை நானென்ன னன்கு. (ஙய)

அல்லவற்றை நானெனலு மன்றெனலு மவ்வறிவே
அல்லவே யுண்மையினை யாரோபம்-மெல்ல
அறிவுருவைக் கண்டிங் கதுவாகி லின்பம்
பிறிதாகா யென்றும் பிறழ்ந்து. (ஙக)

அறிவன்றி வேறென்ன றறியாது நானென்
றுறுதியிதி லையமிலை யோரில்-அறிவேநான்
என்னுருவை யான்காண வீங்குளார்த்து வாரில்லை
உன்னையன்றி யையா வுவந்து. (ஙஉ)

என்றுபல வாவிரந்திங் கேத்தி யடிவீழ
அன்றே வியாச ரதைவிளக்க-அன்றிழந்து
கற்பனையெல் லாந்தன்னைக் கண்டுவியந் தேயழுதீ
தற்புதமீ தற்புதம தாம். (ஙங)

எனமூவ மென்றலு மேனை வழுகைமிகும்
வணுவப்ப மென்றலு மீதமிகும்-யானறியேன்
அப்பனே ஞான வரசே யெனவணங்கிச்
செப்பினன் சிந்தனையைத் தேர்ந்து. (ஙச)

அனுபவமீ தூர வறிவுகா னென்றவ்
வனுபவமீ தூர வனேத்தும்-தனதுருவ
மாகிமே லிட்டா லனேத்தின்பந் தன்னுருவ
மாகித்தா ளை னவன். (௧௫)

சிலநாளவ் வாறிருந்து சென்றிறைதா ளேத்திப்
பலகலைக்கு மெட்டாப் பயனே-உலகிழக்கக்
காட்டினதா லத்துவிதங் கண்டே னினதருளால்
நாட்டுவன்யா னங்நிலையை நன்கு. (௧௬)

அறிவுதனக் காதார மானந்த மீதுக்
கறிவதுவே யாதா மாகும்-பிறிதன்றிங்
கானந்த மன்றே லறிவே னலையுமதம்
கானந்த மாகி லறும். (௧௭)

அறிவன்றே லின்ப மறியுயில்வ தேதுக்
கறிவின்ப மேமுத்தி யாகும்-பிறிதென்னிற்
கேவலத்தை முத்தியென்பங்கேவலந்தான்மூட மெனில்
ஆவதது வேமுத்தி யாம். (௧௮)

மயக்கம் தெளிவிரண்டா மன்னு மறிவே
மயக்கஞ் செகமுளதா மாறல்-வியக்குந்
தெளிவோ சுயம்பாகத் தோற்றல் தொழிலே
எளிதில் விளங்கா தது. (௧௯)

உள்ளமெலாஞ் சிற்சோதி யுள்ளார்க்குலகுமயம்
கொள்ளுவரோ வத்துவிதங் கோதின்றிக்-கள்ளமயக்
கற்றூர்போற் காணுகினு மாசாரக் கள்ளரோ
சற்றேனு நில்லார் தனி. (௨௦)

தன்னைத் தடியுருவாத் தான்காண்பா ரத்துவிதந்
தன்னையெங்க னேற்றிடுவர் தாம்படித்தும்-தன்னைச்
சுயஞ்சோதி யாக்காணுர் தூடிப்ப ரெங்கும்
பயஞ்சற்று மில்லார் பகைத்து. (சக)

அறிவன்றிச் சீவேச ராயுங்கா ணுண்டேல்
உறுமோகா னென்னவவை யுன்னில்-அறிவன்றி
உள்ளதல வென்னி லுபாதியாக் காண்பானேன்
உள்ளது வேறு யுறும். (சஉ)

உள்ளதை யுள்ளபடி யோயாது கண்டறைவார்
கள்ளத் துவிதமதைக் காணேனே-கள்ளமோ
அத்துவிதந் தூடிப்பா ராயா ரிருபக்கம்
பித்தொன்று லென்னே பிழை. (சங)

சமஷ்டி வியஷ்டியலாச் சத்தா மறிவை
சமஷ்டி வியஷ்டியதாச் சாதித்-தமைக்குந்
துவிதந் துவிதமதோ சொல்லளவே யல்ல
எவிதத்து மாயினுண்மை யிங்கு. (சச)

உபாதித் திரிய முயிரே லிறையும்
உபாதித் திரியமதா யோர்தும்-அபாவமெனில்
சித்தெனற்குத் தோடமிலை சித்தாகக் காணிலிலை
எத்துவிதந் தானுமெங்கு மே. (சடு)

சித்திற் றுவிதமெனிற் சித்தாகக் காணிலிலை
அத்துவித மென்பதற்கிங் கானியிலை-இத்திறத்தைக்
காணுதா னேனேற்பர் கண்டு மயறவிரார்
விணுர வீணனெனல் பெய். (சசு)

சொல்லளவா யன்றிச் சுயமா யறிவுதனே
யெல்லையின்றிக் காண்பார்க் கிரண்டுண்டோ-தொல்லை
சகசமெனி லேதுழப்பு தான்றோர்க் கேன்வாய்
அகமமதை போமோ வதில். (சஎ)

அறிவாங் தனைத்தள்ளி யற்பமுங் காட்டார்
அறிவரோ வத்துவித மந்தோ-வெறிகொண்டு
வைவதெவன் போதிப்பேன் வத்துநிலை கேட்டறியார்
சைவமத மாதியரோ தாம். (சஅ)

அவத்தைமய மல்லா வறிவுகா னென்னூர்
அவத்தையுட னானென் றதுவாய்-உவப்பெய்தி
எல்லா முணர்ந்தவர்போ லீங்கிகழ்வ ரத்துவிதம்
நல்லார்போற் காட்டி நடித்து. (சக)

பேரறிவாய்ச் சிற்றறிவாய்ப் பேதமிரண் டாக்காணும்
ஓரறிவே யென்றுணரா ரோதுவரோ-பீரறிவென்
றிம்மடையர் சொல்லேற்பா ரென்னமதி யோவென்பம்
எம்மொழியேற் பாரெங்கு மில். (நவ)

அறிவினிலை கண்டறியா ரானந்த மாகார்
அறிவாகி லானந்த மாவர்-நெறியன்றே
ஏகாத் துவமிதே யீதறியார் கூறுபிற
ஏகாத் துவிதமதோ வின்கு. (நக)

எச்சிலெலா மொன்றதனு லேகமதே முத்தியென்பர்
எச்சில் பொறுக்கிகளுக் கீதுண்டோ-நச்சியகா
மாதி யொழிந்திலதால் வன்பிறவி மாள்வதல
லேதுக்கு மாகா திது. (நஉ)

யோனியெலா மொன்றதனுல் யோனிசுக பேதமமல்
ஆனியிலா முத்தியென்ப ராகாதே-னனகலும்
முக்குற்றங் கற்பிதத்தால் மோகமதே மீக்கொள்ளும்
இக்கருத்தா லேலோ மிதை. (நுக)

சாதிபேத மற்ற சமரசமே முத்தியென்பர்
சாதி மனிதனெனல் சாய்கிலையே-ஓதும்
மிருகாதி கட்குடல்போல் மேவிற்றே பூதம்
சரியன்று முத்தியிது தான். (நுச)

தன்மதமே யாதல் சமயமெலாம் விட்டொருங்கு
நின்மலமா முத்தியென்பர் நீதியல-தன்மதந்தான்
தேகமன்றி யின்றதனும் றேகந்தா னல்லவெனில்
ஆகுமுத்தி யென்ப தறும். (நுஞ)

இன்னவெலா மேகமல வீதெல்லாங் கற்பிதமே
தன்னிகரி லத்துவிதந் தானுமோ-நின்னருளா
லெல்லாமா யல்லவுமா யீங்கொளிரும் வத்துநிலை
கல்லாமற் கற்றேன் கனைந்து. (நுசு)

நினைவெல்லாஞ் சிற்சோதி நீக்கமற நிற்கும்
அனையதாக் காண்ப ரறிஞர்-இனையதற்கு
மாறுகக் காண்பர் மதிமயக்கந் தீராதார்
பேறுகு மோமுத்தி பின். (நுஎ)

எவ்வுயிருஞ் சிற்சோதி யேகமெனக் காணுமல்
அவ்வவ் வுடலளவா யாங்காங்கே-எவ்வெவருங்
காணினவை வேட்மன்றே கற்று னெலெங்கே
ஆணல்லர் பேடி யவர். (நுஅ)

ஆரோபத் தோடே யபவாத யுத்தியிரண்
டோராதென் காண்டுமோ வுண்மையுரு-தீராத
முக்குற்றம் தீர்ப்பதிது மூடமதத் தில்லையிது
மிக்கதிலே யிவ்வுத்தி மேல். (குசு)

இவ்வுத்தி யோரிரண்டா லிங்குணர்ந்தேன் பந்தமுத்தி
எவ்வெவரு முற்றுணர்தற் கேகருமை-செவ்விதாக்
கற்றுணர்ந்துங் காட்டாந்தங் கானல் மிகவரிது
சற்றுமின்றி யையமது தான். (சுஅ)

பேத மபேதமெனப் பேசிரண்டு வாதந்தான்
வேதமெலாஞ் சிக்கறுக்க மேவிற்றே-மீதுமிலே
எம்மதத்து மென்றுணர்ந்தே னெவ்வாறுமுத்தியென்பர்
சம்மதம தாக்கார்க டாம். (சுக)

நம்பிக்கை யாலன்றி ஞாயமதா லுட்டறியார்
வம்பனெற் கானி மருவுமோ-தோம்பதமீ
தென்றுணரார் ஞானியென்ப ரீதெல்லா மூடமதம்
இன்றிதற்கிங் கையமிலே. (சுஉ)

அறிவொன்றே யுண்மை யனேத்துமல வென்னல்
அறிவுருவந் தானுதற் கன்றே-பிறிதலவே
மூட ரிகழ்வதெவன் முற்றுணர்ந்தார் போனினைந்து
நாடறியார் தன்னுண்மை நன்கு. (சுஙு)

அறிவாஞ் சுயஞ்சோதி யன்னியம்போற் றோன்றி
அறிவை மறைத்தகலு மன்றிப்-பிறிதன்றே
அன்னியமாக் காண்பவிவலா மையோ வெறுந்தயரே
எங்ஙிலையாற் றுய்த்திடினு மிங்கு. (சுச)

அத்துவித மன்றி யியலெல்லாம் பேதமயம்
எத்துணிவாம் சாதித்து மெவ்வெவரும்-யுத்திக்
கவிரோத மாகா தனுபவத்துக் கேதாம்
துவிதமறி யார்சொல்லுஞ் சொல். (சுடு)

உயிருருவா நிற்கி லுலகுருவாத் தோன்றும்
உயிரருவா நிற்கிலதா வொன்றும்-வியனுலகும்
சிற்சொருப மாநிற்கிற் சிற்சொருப மாவினங்கும்
தற்சொருப பேதமதாந் முன். (சுசு)

வெற்ற வெளியன்றி வேறுரென்றிங் காயிலிலை
வெற்றவெளி காட்டமதில் வேறுகா-தற்றுணர்ந்து
தீர்ப்பதுவே தீர்ப்பாந் திரிபாகு மேனியவை
தீர்ப்பெனினு மேலோந் திகைத்து. (சுஎ)

உருவமெலா முற்றுணரி லோயா வெளியாம்
அருவாம் வெளியி லழுந்தித்-திரிபின்றி
ஆயுங்காற் சங்கற்ப மன்றி யிலையதனை
ஆயுங்கால் மெய்யுணர்வே யாம். (சுஅ)

மெய்யுணர்வை யுற்றுணரில் மேல்கீழொப் பின்றியே
ஐயந் திரிபின் றகன்றெளிரும்-பையப்
பழகப் பழகப் பறக்குந் துயர்கள்
பழயபற் றேடே பணிந்து. (சுக)

அதுகானென் றுகு மனுபவமீ தா
அதுகூவி நானதுவா மப்பால்-எதுவுமல
தாகுமன வாக்குக் கடங்காது நிற்பததா
னகுநிலை முத்திமுடி வாம். (எல)

உடலிலக்கா லன்றி யுணர்விலக்காற் செய்யும்
திடங்கொண்ட தீர்வதுவே தீர்வாம்-உடலுயிரன்
றுதலினு லுண்மையதிங் கத்துவிதம் வேறலவே
ஈதறியா தெம்மதமு மே. (எக)

உணர்விலக்கிங் கென்பதுதா னேயாது சாயா
துணர்வுகனைக் கண்டோத லுண்மை-யுணர்விலார்
காணப் படாததினும் கைக்கொள்ளோமென்றுரைப்பர்
வீணுக்கே யாமிவர்சொல் வீடு. (எஉ)

உணர்விலக்கா லன்றே லுணர்விலக்க ணங்கள்
உணர்வுதனிலொத்திருப்ப துண்டோ-உணர்வுடையோர்
கண்டே யுரைத்தார்கள் கட்டுரையின் றீதுண்மை
கண்டவரோ யேற்பார்கள் காண். (எங)

நானெனற்கு மெய்வடிவம் ஞானமே வேறில்லை
னேயவை பொய்வடிவ மீங்கழியும்-ஞானமதைக்
கண்டதுவா நின்றக்காற் காணுமோ சாவச்சம்
பண்டிருந்தா னுகியதாம் பண்பு. (எச)

உருவமன்றிச் சாயை யுளதே லுளவாம்
தெரிவன்றி யெப்பொருளுந் தேரில்-தெரிவன்றி
ஆதார மாதேய மற்றபொரு ளில்லென்பம்
யாதேனு மைய மிலை. (எடு)

ஆதார மென்பதென வன்னியத்தைப் பற்றியே
ஆதார மன்றியிலை யன்னியமேல்-ஆதேயம்
அன்றதனுற் றுனெங்ங ஞதார மாம்பொய்யே
அன்னெனவு மாமெனவு மாம். (எசு)

அன்றல்ல வாமல்ல வப்பாலிப் பாலல்ல
நன்றல்ல தீதல்ல நானுமல-ஒன்றுபல
அல்லவென நின்ற தத்துவாதல் முத்திநெறி
யில்லையே யெம்மதத்து மே. (ஏஎ)

இவ்வண்ணங் கண்ட விவன்றன் னனுபவத்தை
யெவ்வணமுங் கோணு தியம்பியே-செவ்விதா
யேத்திக் குருபானே யேகித் தனதிடத்தில்
வீற்றிருந்தான் கற்பனைக ணின்று. (எஅ)

அத்துவிதவிளக்கம்.

முற்றிற்று.

படலம்-கஅ-க்கு ஆ—கவி—(மூஉசு)



திருச்சிற்றம்பலம்.

கசூ-வது

நாட்டபேதவிளக்கம்.

போகசித்தை நாட்டமொடு போகந் தவிர்நாட்டம்
ஏகநாட்ட மிம்மூன்று மீங்கிசைக்கும்-ஆகமங்கள்
அவ்வவ் வளவா யனேத்து மிலகுவதால்
இவ்விடத்திற் சொல்ல னிதை. (க)

அறிவுநாட் டங்தவிர்வே யச்சாதி மூன்றும்
அறிவுநாட் டத்தி லறியம்-அறிவன்று
நாட்டங் தவிர்வே னனவென்ப ரந்நனவில்
நாட்டுதும்யா மொவ்வொன்று நன்கு. (உ)

சித்தைமய னுட்டஞ் செகத்துண்மை யாக்காட்டுஞ்
சித்தைமய லொன்றையொன்றுத் தோர்ந்திடுதல்-சித்தை
சுயஞ்சோதி லேசமெனச் சோதிக்க வெட்டார்
செயுங்கண் டனேயென் செயும். (ங)

விகாரமெனச் சோதித்தும் வேண்டிபோ கத்தை
விகாரவடி வுக்கே விழைவார்-விகாரவுரு
நானெனநாட் டங்தவிர நாடறியார் கண்டனேதான்
ஞனமுரு தென்சிறக்கு மே. (ச)

மனிதாதி ரூபங்கள் மன்னுருவாக் காணத்
தினைத்துணையு ஈட்டமிலார் தேர்ந்திங்-கனைத்தையுமே
சித்துருவா ஈட்டுவர்மேற் செய்கன்மனையுன்னில்
யித்தையொத்த மூடமெங்கு மில். (சு)

இல்லையென தாய்தலின்கணைப்பொருளுங்காட்டறியார்
இல்லையெனச் சொன்னலு மேலாதார்-வல்லார்
வேதாந்த கன்மனையில் வேடமன்றித் தற்காணர்
ஓதாந்த போதகரிற் கீழ். (சூ)

ஈனுமொன் றென்னபிலார் ஈடறியார் கன்மறியார்
ஊனு ருடலன்றி யுத்தமர்போல்-ஞானரசக்
கன்மனைசெய் தேகளிப்பர் கட்டடங்காப்பேதையரோ
டன்மடப் புரட்டனெ லாம். (எ)

தனக்கென் றுளவடிவந் தான்சுயம்பார்க் காட்டார்
தனக்கனிய முங்காட்டார் சற்றும்-மனச்சுயம்பும்
ஏற்கவுனாயா தொதுவாந்தங் கன்மனைதான்
தோற்குமோ வேதாந்தச் சொல். (அ)

மனநிலைக்கக் கற்றறியார் வாதுக்கே நிற்பார்
மனிதக் குழாம்வளைக்க வல்லார்-தனைத்தானே
காண வகையறியார் கன்மனையென் கண்டுரைப்பார்
ஈனமின்றிச் சற்று ஈகைத்து. (சு)

ஆன்மா வெலாமுடலன் றுயுங்கா லென்னதினை
ஆன்மா பலவொன்றே வாங்கறியார்-ஆன்மாவைக்
கன்மறியார்கன்மனையேன் கற்பனைமெய் யாக்காண்பார்
துன்மடப் பயல்கள் தொடர்பு. (ஏ)

உலகெங்கே தோன்றி யுடனே மறையும்
உலகைச்சோ திக்க வுதவார்-அலைவகலக்
கல்லார்வே தாந்தத்தைக் கண்டிக்க லென்கண்டார்
கல்லார்முன் னென்னுவார் கன்கு. (யக)

ஈதெல்லாம் தட்டசெய லென்றுணரக் கல்லாதென்
தீதகலார் மல்லனெனச் சேர்வதிலுல்-யாதுக்காம்
பொய்யைப்பொய் யாக்கிப் பொருளைப் பொருளாக்கி
மெய்யாக்கும் வேதாந்த மெய். (கஉ)

இரும்பைப்பொன் னென்ற லெவரேற்பர் மூடர்
வருந்திப் பொருமையால் மாள்வர்-இருந்திருந்து
ஞாயத்தா லுகத்தா லுடுங்கால் வேதாந்தம்
ஞாயமய மாய்விளக்கு கன்கு. (கஊ)

அறியாமை தன்னை யறிவென்று கொள்வர்
வெறியகலா ரிவ்வுலகை மெய்யென்-றுறுதிகொடு
செய்ஞான கண்டனையைச் சிந்திக்க லென்சிறப்பு
உய்வாருக் கேதா யுறும். (கச)

தன்னிலையைக் கண்டு தனியா விருத்துதயர்
தன்னை விலக்கத் தவியாதார்-இன்னவிதக்
கண்டனைசெய் தேகளிப்பர் கட்டடங்காத்துட்டமொடு
தொண்டர்செய் வாரோ துணிந்து. (கடு)

உடலன்றித் தன்னை யுயிரு மறியார்
உடல்பொருளாக் கண்டிங் குவப்பர்-மடையரிவர்
செய்ஞான கண்டனையைச் சிந்திப்ப தோபொருளா
மெய்கண்டார் சம்மே விழைந்து. (கசு)

ஒருபொருளும் தீர வுணர்ந்தறியார் கேளார்
மருளே மிகப்படித்த வல்லார்-திரிபகலார்
செய்ஞான கண்டனேதான் மேன்மாரி பெய்ததொக்கும்
பொய்ஞானி யுள்ளும் புறம். (கள)

தன்னே விளக்குஞ் சகமயல்கா ணுதகற்றும்
உன்னுவான் சித்தா வொளிர்விக்குப்-இன்ன
மகிமைசெயும் வேதாந்த வாழ்வறியார் போலும்
இகல்வாளைக் காணுமிடத் திங்கு. (கஅ)

இல்லா விகார மெழுவானே னென்பர்ப்ரத்
தெல்லா முணர்ந்தவர்போ லேதுமிலார்-சொல்லாலே
பாம்புவந்து போனதுபோற் பார்வைக்குத் தோற்றமன்
பாம்பெங்கே நாருண்மை பார். [றிப் ()

பாம்பாகக் காண்பானேன் பாம்பன்றுப் போவானேன்
பாம்புமுன் கண்ட பழக்கமெனின்-பாம்புருவாய்
ஆயதெது நின்றதெதிங் கன்று யறிவன்றே
ஆயதிங்ங ஞான் றறி. (உ)

நார்முன்ன ரிக்கூத்து ணண்ணலெனச் சிற்சோதி
நேர்நிகழு மிம்மாயை நீயறிதி-பேர்மாயை
விர்த்தி நிவிர்த்தியதா மேவுமிரண் டாக்காண்டி
அர்த்தமிதென் றுயாதென் னங்கு. (உக)

பிரம விகாரமெனப் பேசுவதென் னூல்கள்
பிரமத்துக் கன்னியமாப் பேசுந்-திறமதனே
நீக்கற் கதுவு நிசமன்று தந்திரமே
தாக்கற்று நிற்பதற்குத் தான். (உஉ)

மாயையும் வேறன்றே மாளாச் சுயஞ்சோதி
சாயையன்றி வேறன்று தான்விளங்க-மாயையெனச்
சொன்ன கருத்தறியாய் சொல்கற்றுப் பேசுவதென்
அன்னியமு மன்றதுவு மன்று. (உக)

மாயையன்றி யில்லைசக மாயையும் வத்துவுக்குச்
சாயையெனும் வேதாந்த சாத்திரங்கள்-மாயையெனல்
பொய்ப்பொருளென் றேதியதாம்பொய்யேயனைத்துமெ
மெய்ப்பிரம மன்றியிலை வேறு. [னல் ()

புகன்றவிவர் போல்வலொலாம் போகசிங்தை காட்டத்
தகலாத கள்வனெ லாகும்-அகன்றவரோல்
சத்தென்ப ரோவுலகஞ் சான்றுளா வைவரோ
பித்தரெனல் பத்தாது பேய். (உடு)

சத்தானும் காரியமாச் சாற்றுவதென் னிவ்வுலகைப்
பத்தர்போற் காட்டிப் பகட்டிடுவர்-மெத்த
மயல்கரந்து பூசிக்கும் வஞ்சகத் தாசர்
கயவரோ யையமிலை காண். (உசு)

என்ன படித்தாலு மின்னிலையை யுய்த்துணரார்
அன்னியர்சொன் னலு மலமதிப்பர்-இன்னேர்
மனிதமிரு கப்பிறப்பே மாறில்லை வீழுன்மின்
புனிதம்போற் காட்டுமடை புக்கு. (உஎ)

போகமகல் நாட்டமதோ புல்லின்பம் வேண்டாதிங்
காகமுதல் யாவையுமே யாய்ந்தாய்ந்து-மோகம்
தலைகாட்டா தேகச் சலியா நிலையில்
அலைவின்றி நிற்கு மகம். (உஅ)

ஏகநாட்ட மாவ திருநாட்டப் பண்டிதத்தால்
ஆகுநிலை வேறன்றிங் காயுங்கால்-யோகியரே
அன்றி யெவரறிவா ரந்நிலையைத் தேர்ந்தளவிங்
கின்றறைதுங் கேண்மி னிதை. (உக)

பூதமன்றித் தேகமிலை பூதமிலை வானன்றி
யீதுமிலை சிந்தையன்றி யிம்மனமும்-போதமன்றி
இல்லையா நந்தமன்றி யிப்போ தமுமில்லை
இல்லையிதுந் தானன்றியே. (ஙஎ)

என்றுய்ந்து சோதனையா லெங்கியேகித்தற்பதத்தில்
நின்றுநின்று தேர்ந்ததற்பி னேராக-அன்றுதனில்
ஏறியது போலே யிறங்குநிலை யுங்கண்டு
மாறின்றி வாழ்லதே வாழ்வு. (ஙக)

ஏற்றத்தி லன்று யிறக்கத்திற் முனுகித்
தோற்று மனத்துமெனத் தோய்வறின்-றூற்றுஞ்
சுகவாரி யாநிற்பர் தூர மணிமை
யிகந்தா னெனப்படுவ ரே. (ஙஉ)

இந்நிலையே காணென்ப ரேகநாட்ட மென்பதுதான்
இந்நிலைக்கு மேலுட்ட மில்லையே-பன்னுகலை
முத்தி முடிவிதுவே மோனநிலை தானுமிதே
சத்தியஞ் சத்தியமே தான். (ஙங)

தன்னு ளனைத்துமாய்த் தானனைத்தி னுள்ளுமாய்
மன்னுக னம்போலும் வஸ்துநிலை-இன்னமுந்தான்
தானுகி யன்றுகிச் சார்ந்துஞ்சா ராதனைத்தும்
தானேதா னுகுநிலை தான். (ஙச)

மணகாலத் தின்புருவா மன்னு முலகம்
பிணகாலத் தன்றுப் பிறழ்வேன்-உணருமினே
நாட்டபேதத்தளவா நண்ணு முலகமெனல்
காட்டெவன்கொல் வேறுகக் காண். (நடு)

உண்மையாய்ப் பொய்யா யுணர்வுருவா யிவ்வுலகம்
கண்முன் னிலைக்களவாக் காண்பானேன்-திண்மையாக்
கொள்வதிதி லியமெவன் குன்று வனுபவமே
தள்வொவர் மூடரிதைத் தான். (நசு)

தற்பாவ மென்றன் சகத்துருவாக் காணுமென்றன்
தற்பாவ மன்றியென்றன் முன்காணும்-அற்புதமே
காணிற் பொதுச்சிறப்பாக் காணுமே யன்றனன்றன்
வீணென்ன லென்றனமா மேல். (நஎ)

அவத்தைதொறுங் காண்பானே னந்தந்த வாறே
அவத்தைதொறு நாமென்ற னுக்கே-அவத்தைதொறும்
எவ்வுயிருங் காண்பதனு லீதே யனுபவமாம்
எவ்விதத்து மையமிலை யிங்கு. (நஅ)

கன்மபத்தி காண்டியிதைக் கைத்திங் கவமதிப்பார்
தன்மறதி பந்தமெனத் தாமறியார்-என்செய்வார்
நிட்காமி யத்தரலர் நீங்காச் சகசத்தர்
கட்காம லோபமுதற் காண். (நசு)

சிற்சோதி தானே செசசீவ ரீசனெனல்
சற்குருவா லன்றியென்றன் முன்விளங்குங்-கற்பனையே
சாத்திரத்தாற் மன்னினைவாற் முன்கோட லியமிலை
தோத்திரத்தா லென்னே துணை. (சஎ)

மூடந் தெளிவுபற்றி முத்திபந்தம் வந்ததினுல்
ஓடுமே லிவ்விரண்டு மோடுமவை-நாடுங்கால்
தன்முயல்வா லன்றியொன்றுஞ் சாராது போகாது
தன்முயல்வே காட்டமென முன். (சக)

நானெனலைக் காணரிது நானல்ல வல்லவென
நானெனலே யானந்த நாணுகும்-நானெனலைக்
காணுர் சகபாத்தைக் கண்டின் புறுவதெங்ஙன்
காணுர் சுயசுகத்தைக் காண். (சஉ)

உத்தியினுற் காட்சியினு லோயாமற் சோதிக்க
இத்திமமென் றூர்க்கு மிலகுமே-முத்தியெனல்
இன்பமதேயவ்வின்ப மேகா நிதசயம்
தன்சொருபங் கண்டவர்க்கே தான். (சங)

காட்டபே தத்தினிலை நன்குணர்ந்து சற்குருவால்
காட்டபே தத்தையொன்று நாடுபவர்-தாட்டா
மனைப்பொடி சிங்தைதனில் வைத்துப்பூ சிப்பார்
கனையிலா நந்தக் கடல். (சச)

காட்டபேதவிளக்கம்

முற்றிற்று.

படலம்-கசு-க்கு-ஆ-கவி-தூளெ.

திருச்சிற்றம்பலம்.

உய—வது

சுக நிலை.

நாமோ சுகவடிவம் நம்மறிவிற் காண்பனவோ
நாமாயி லன்னியத்தை நாடுவதென்-நாமன்று
அன்னியமே லென்வெறுப்பிங் கப்போதப் போதததில்
என்னவிடை மேலென்று னிங்கு (க)

அன்னியத்தைத் தள்ளி யறியோ நமையெங்கும்
என்னவித மாத்தீர்ப்ப மிவ்வழக்கை-அன்னியமோ
தூலமொடு சாயையுரு சூனியமென் றிம்மூன்றுஞ்
சாலவினை நாமன்று தான். (உ)

அன்னியமா நின்றுணர்த லல்ல வறிவன்றி
அன்னியமன் றுண்மை யறிவேநாம்-இன்ன
தனுபவ மாகி லறிவின்ப மாவம்
பனுவலா லில்லை பயன். (ங)

பதியே யுயிர்க்குயிராய்ப் பற்றமுத்திக் கேற்க
மதியின்ப மாவனெனின் மாண்பே-பதிதன்னைக்
கண்டோ வனுமானக் கட்டுரையோ வென்னவரில்
உண்டுகொலோ தக்கவிடை யோது. (ச)

[ன்பை
கண்டென்னிற் காட்டென்பை கட்டுரையேற் றேற்றமெ
வின்டிடவா யில்லையெனின் வேண்டாதென்-கண்டுரை
அந்நிலைபை யென்பை யறியவலி யில்லையெனின் [த்க
என்னறிவிக் காதென்பை யிங்கு. (ஞ)

இயற்கையெனி னின்ப மியற்கையோ துன்பம்
இயற்கையே யிவ்விரண்டு மென்னில்-இயற்கை
அவாவறுன்ப மன்றே யதுவருவ தேனை
அவாத்தவறி லென்னி லறை. (கூ)

அவாவிரண்ட தாயிற்றே யாராலோ வெண்ண
அவாவி னியற்கையெனி னெந்தோ-அவாவுதரூன்
செய்கை முதலாமோ செய்வானே யன்றியென
செய்வா னியற்கையதேற் செப்பு. (எ)

தெரியாத செய்கையினற் றின்ணமே துன்பம்
தெரிந்தார்க் கறியாது சேர்தல்-தெரிந்திலன்யான்
செப்பென்ன வன்னேன் றிகைத்துச்சுபாவமென்றூன்
ஒப்புவார் ஞாயமின்றி யுற்று. (அ)

பந்தம் விடுதியெனப் பட்டவவா வோரிரண்டாம்
எந்தவிதத் தானியற்கை யேற்பதெவன்-இந்தவகை
செய்வானைக் காட்டிச் செயற்கையதே தீர்ப்பென்னும்
செய்வான் செயலென்னத் தேர்ந்து. (கூ)

அறிவறியா மைத்தவிரி லப்போ தெரியும்
நிறையின்பந் தானென்று மேரோ-குறைவின்றி
ஈதுண்மை மீதுண்மை யென்றுமிதி லேயமிலை
சாதுசங்கச் சேர்க்கையதாற் றூன். (ஙு)

மூடமதத் துண்மையிதின் முன்னிற்கா தேனுமிதை
நாடியுன்னு வாருமை ஞாயத்தால்-மூடர்மயக் [மோ
தென்னுன்மை காண்பவரா ரில்லை யதாற் போய்விடு
தன்னிற்று ஞகியது தான். (கக)

அறிவி னினைவு மறிவிற் கனவும்
அறிவிலை பாழு மறிவம்-அறிவதனல்

ஆகாயம் போலறிவென் றுய்ந்துணர்ந்த மையமிலை
ஏகாதெஞ் சித்தாந்த மிங்கு. (கஉ)

விசாரணைக்கு முன்னுண்டாய் மெய்யா முலகம்
விசாரணைக்குப் பின்னேன் வெறுமை-உசாவுங்கால்
முன்னுளது பின்னெங்கே முன்னெங்கே பின்னுளது
இன்னதற்குத் தீர்ப்பென் னிசை. (கங)

அவற்றின் விகாரமதே லாய்வார்க்கே யன்றி
எவர்க்கு மிலாதென்னை யிங்கே-அவர்க்குள்ள
சித்தத் திரிபென்னிற் சித்தமெனக் கொள்வதெவன்
அத்திரிபிக் கேதில்லை யாம். (கச)

சின்னமவிச் சின்னத் திரிபறிவின் றர்ம்மமெனில்
என்ன விபரீத மேற்பதெவன்-அன்னன்ன
ஆகாரந் தாஞ்சி லக்ஷணங்ஙன் றோற்றுமெனல்
ஆகார மாய்க்கண்டே னங்கு. (கஞ)

பசுபதி பாசப் பகுப்பு நனவே
நிசவப வாதத்தா னினைவாம்-நிசமாக
ஆய்ந்துதெளி வாரேற்ப ராயாதா ரேனேற்பர்
மாய்ந்திடுமுன் கண்டிடுமின் வந்து. (கசு)

நினைவே சமஷ்டி நினைவே வியஷ்டி
நினைவிலாக் கேவலத்தி னீகாண்-இனையவிலை
இல்லாமை யெவ்வெவர்க்கு மெங்ஙனு மாயிடுதல்
வல்லையோ நீமறுக்க வந்து. (கஎ)

நினைவே சடசித்தா நிற்றலைக் காண்டல்
அனைவர்க்குங் கூடாத தாங்கே-தனைக்கண்ட
ஞானியரு ளாலன்றி நன்குதெளிந் தாலேனும்
ஞானியெங்கே யென்றோடி நாடு. (கஅ)

ஆனைத்துநினைப் பேயாயி னுக்குமோ வற்பம்
ஆனைத்துணின் றோராதென் னைந்தோ-தினைத்துணையும்
என்னிற் படைப்பாயி னேன்றிரியு மவ்வினமா
இன்னதுபோ லன்றியெங்கு மில். (கசு)

இயற்கை யெனினு மிதுகா ரணமோ
இயற்கையென லாயுங்கா லெங்கும்-அயலின்றி
நிற்றற்கே தென்னை நினைப்பொன்றே கண்டிலையோ
முற்று நினைவே முதல். (உம)

நினைவி னிசவழிவை நீகாணி னன்றே
இனையவெலா நியறினை யிங்கே-தினையளவும்
ஐயமின்றி யென்ன வடிவீழ்ந் தருளிங்ஙன்
மெய்யனே யென்றேத்த மேல். (உக)

அன்னைகைக் கேற்க வருளி விளக்கியபின்
தன்னையன்றி யொன்றுமிலை தானன்று-தன்னையே
ஆராந்த மென்றங் கயலாகா தேநின்றான்
ஆனந்த மாக்கடலி லாழ்ந்து. (உஉ)

அறிவே சுகசொரூப மன்னியமொன் றுண்டேல்
அறிவன்றி யுண்டென்ன லாகும்-நெறிமுறையில்
ஆயுங்கா லில்லையதா லாநந்த மேயறிவாம்
தாயநிலை யிதே துணிவு. (உங)

சிற்சொரூபம் வாழி சிறந்தமறை நால்வாழி
சற்குருவின் றாள்வாழி சற்சனர்க-ளற்புதமாம்
ஆன்மசங்கம் வாழி யணைகூலர் வாழியவே
தான்றுன தாகவுயிர் தான். (உச)

திருச்சிற்றபலம்.

சுகநிலை-முற்றிற்று.

படலம்-உம-க்கு-ஆ கவி-கூகூ.



உ

திருச்சிற்றம்பலம்.

உக-வது

இந்துவேதமகத்துவம்.

உலகி லனந்தமத முண்டவற்றின் வேதம்
பலவுண்டு மிக்கதெது பார்த்திங்-கலிவின்றிச்
சும்மா விருக்கவதைச் சொல்லென் றடிவீழ்ந்தான்
எம்மால் கணிக்கரியா னிங்கு. (க)

இந்துவேத மொன்றே யெவைக்குஞ் சிறந்ததெனச்
சிந்தைமய றீரத் தெளிவுற்றோம்-எந்த
விஞ்ஞவுக் கெனினும் விடைபஞ்ச மில்லை
விஞ்ஞவிலெங்ங னென்றறைது மேல். (உ)

கன்மபத்தி ஞானமெனக் கட்டுரைக்கு மூன்றெனவே
கன்மமது யாகாதி கன்மங்கள்-தன்போகம்
மேன்மே லுகர்தற்கு வேண்டுபவர்க் கேயாகும்
வன்கொள்வர் மற்றையவ ரிங்கு. (ங)

போகசலிப் புற்றோர்க்குப் புந்திபரத் தேயென்றும்
ஏகுமதம் பத்தியவர்க் கேயுரித்தாம்-ஆகையினற்
பத்தி விதித்ததிதாம் பற்றிரண்டும் விட்டிடுவோர்க்
கித்துவிதத் திச்சையெழா திங்கு. (ச)

ஞானரசத் தன்றி யுணுகாது சிந்தையயல்
ஞானரசம் போன்றிடினு மண்ணிடினும்-ஆனதுகொண்
டாங்கவர்க்கே ஞான மறைந்ததுவே தக்கருத்தை
யீங்கிதுவா மென்றே யிரு. (ஞ)

அததற்குத் தக்கா ரதிகாரி யலலார்
அததற்கிங் காயிடினு மாகார்-எதெதற்கும்
பாத்திரமே யல்லர் பகடிகளே யையமிலை
சாத்திரம்பொய் சொல்லாது தான். (கூ)

விதிவிலக்கா நிற்கும் விதித்தமூன்று காண்டம்
மதிவழியே செல்லாது மாற்ற-விதிப்பானேன்
போகமியல் பாயிருக்கப் போகத்தைப் போக்காது
ஆகமங்க ளெங்ஙனுண்மை யாம். (எ)

தடுக்கினு மாகார் தமதிட்டம் போக்கார்
நடக்கும் வழியே நடத்தி-யிடக்குறுங்காற்
காட்டித் திருப்பிற் கடிதிற் றிருப்புமெனும்
நாட்டமதாற் சொல்லிற்று நன்கு. (அ)

அருந்தல் பொருந்த லவாவியற்கை யேனும்
அருந்தல் பொருந்தல்மிகை யாக்கிப்-பெருந்தம்
திரத்தாற் சுருக்குஞ் சிறிதுசிறி தாக
உரங்கொண்டு கேளிதனை யுற்று. (கூ)

வாமபூசையாணு மணத்தாணு மாக்களிட்ட
வேமத்தக் குட்டடல்போ லிங்கிசைந்து-நேமம்போற்
காட்டி முழுதுங் களிவிக்கு மூட்டாது
நாட்டுமோ விம்மறைபோ னன்கு. (ஙு)

பூர்வபட்ச சித்தாந்தப் போக்கு நிலையுணர்த்திப்
பூர்வபட்ச சித்தாந்தப் போக்கதனுல்-யார்க்கும்
விதிவிலக்கைக் காட்டிவிமலமாக்கு மந்தத்
திதின்மகிமை போலெங்கு மில். (ஙக)

பிணிக்குவெல்லங் காட்டியெதிர் பிள்ளை யழைத்துப்
பிணிக்குமருந் தூட்டுவர்போற் பேணி-யிணக்கமுறப்
போகத்தைக் காட்டிப் புனிதஞான மூட்டுமுறை
மோகப் பிணிக்கு முனிந்து. (கஉ)

இதுகாறுங் கன்ம மியம்பிலை மேலே
பதியிருப்பைக் காட்டிப் பகர்தும்-எதிரில்
உலகிருப்பாற் கர்த்தா வொருவனுண் டென்று
பலஷிதத்தாற் கூறும் பகிர்ந்து. (கஙு)

விதிபத்தி மார்க்கமென மேலே விதித்து
அததற்குத் தக்கமுறை யாங்கே-யிதுவிதுவென்
றேற்ற பலன்விதித்திங் கெவ்வுயிருஞ் சன்மார்க்கத்
தேற்ற நெறிசெலுத்து மே. (கச)

தெய்வமொன் றென்று தெளிவுற்ற வேதம்பின்
தெய்வம் பலவாகச் செப்புவதென்-உய்வதெவன்
வேடிக்கை காட்சி வினைதர்க்கு மெய்பொய்க்கும்
நாடி யுணாத்தனென நாடு. (கஞ)

இவர்க்கே பலமுகூர்த்த மென்னிலாக் கோயில்
இவர்க்கே திருவிழா வெங்கும்-இவர்க்கே
விரதாதி யாகுமனு மெய்யன்பர்க் கெற்றுக்
குரியர் மனச்சாட்சி யொன்று. (கசு)

மனச்சாட்சி யென்று மனதிலு முன்னர்
மனமறியப் போகசிந்தை மாறுர்-இனையரலர்
மாப்பூசைக் கென்றகற்று மற்றையர்க்கே சாற்றுமறை
காப்பர் விதிவிலக்கைக் காண். (கன)

கிரியையொடு ஞானத்தும் கேடிலாப் பூசை
இருவகைய தென்னு மிவற்றுட்-கிரியைக்கே
தக்கா ருருமை தகாதா ரிலாரில்லை
மிக்க பிரளி விழைந்து. (கஅ)

உருவல் லதனை யுருவாகச் செப்து
திருவிழா வாதி செயலேன்-அருவாகக்
கொள்ளிற் குறிபாவங் கொள்வதின்றிப் பாழாகுங்
கள்ளமயல் போவதெங்ஙன் காண். (கக)

குறிபாவம் போக்கலெங்ஙன் குன்ற மயலேல்
குறியைக் குறியாக் குறித்து-நெறிமுறையே
சற்குருவை யண்டிற் றனியே விளங்குமெனும்
சிற்சோதி யெங்குஞ் செறிந்து. (உம)

அகண்டமும் பாவனையே யல்லவே யுண்மை
அகண்டமெனல் கற்பிதமே யன்றேல்-அகண்டமாப்
பாவிப்பைத் தள்ளியெங்கே பாவனைகின் சூக்கவுடல்
பாவித்த லுன்னையே பார். (உக)

கண்ட மகண்டமிது காணுங்காற் றற்பாவம்
அண்டர்பிரா னென்றுனைத்த லற்பமோ-உண்டோ
உணர்வென்சொன் னலு முளவறியா மூடர்க்
குணரவதைச் சொல்லுவன்கே ளுற்று. (உஉ)

பலநினைவி லொன்று பகவானென் றுன்னல்
பலவாகி லில்லை பகவான்-நிலையின்றி
ஆங்நினைவு மேகு மரைக்கணத்தி லென்னுமிடத்
தென்னசிறப் புண்டிங் கிசை. (உங)

அதினுலே பூசை யனைவர்ள் முழுவர்ள்
விதிமுறையே செய்யென்று வேதம்-விதித்தவகை
கண்டிலிரோ தன்னினேலே கண்ட மகண்டமெனல்
உண்டுகொலோ வைய முளர். (உச)

காணுன்னல் முன்னகண்டஞ் சற்றும் தனக்கிலைபோல்
காணுன்னல் பின்னுமிலை தன்னினேவில்-எனறியார்
யார்க்கு மனுபவமே யெல்லாந்தற் பாவமெனல்
தீர்க்குநஞ் சித்தாந்தம் தேர். (உரு)

கண்ட மகண்டமெனல் கண்டிலம்யாம் கேவலத்திற்
பண்டுநினே வின்றதனற் பார்த்திலையோ-உண்டோ
சிறிதேனு மையம் திரிபிவற்றுட் காண்டி
குறிகொண்டு செய்பூசை கோன். (உசா)

தனக்கென் றிலாதுரிமை தானவனு மட்டும்
மனப்பூசை போதிக்கு மான்பை-நினைத்திலைகொல்
இப்பத்தி தன்னே யெவர்மறையு ஞானமெனுங்
கப்பென்னு நான்மறையுந் தான். (உஎ)

இதுகாறும் பத்தி யிசைத்தே மினியாம்
அதிசயஞா னத்தை யறைதும்-மதிவழியே
செல்லாது கேட்டி சிறிதுசிறி தாவின்று
சொல்லாது சொல்வன் துணிந்து. (உஅ)

ஞானமென்பர் தன்னையன்றி நன்காய்ந் துணர்ந்ததனை
ஞானமல்ல வென்றுணர்த்து ஞானநூல்-ஞானமதோ
எல்லாம் படித்துணர்ந்த தெவ்வறிவோ வவ்வறிவை
நல்லாய் படித்துணர்தனன்கு. (உகூ)

வித்தையிலெல் லாமிதுவே மேலான வித்தையெனும்
வித்தையெனல் ஞானமென்பர் மேலோர்கள்-வித்தை
அயலறிவ தென்ப ரறியா தென்றே
மயலகன்று நிற்பர் மகிழ்ந்து. (೫೦)

ஞானமென லெம்மதத்தும் ஈடறியார் கேட்டறியார்
ஞானமென்பர் பத்திதனை ஞானமிலார்-ஞானம்
பரமபர மென்னப் பகுப்பாக நிற்கும்
பரமபர மல்லவென்றே பார். (೫೬)

பரமபர மெனனல் பராபரமென் றாகும்
பரமபரத் துண்மைநிலை பார்க்கப்-பிரித்ததுகாண்
ஒன்றே பராபரமென் றேதினு லென்னபயன்
என்று மொழியா மிவர்க்கு. (೫೭)

சற்குருவாற் பேதித்துத் தான்தெளிந்தார்க் கொன்றுகச்
சிற்பர மாவிளக்குஞ் சித்தியார்க்-கற்பநிலை
யாவிளக்குஞ் சொல்லாலே யன்பர்போற் காட்டிடினும்
தேவியல்பைத் தேர்வதென்றே சென்று. (೫೮)

என்று வியாச ரியம்பியபின் னுண்மகிழ்ந்து
அன்றடியில் வீழ்ந்துண்மை யாங்கடைந்து-சென்று
ஈனவிற் சுழுத்திநிலை நண்ணிக்தா னானென்
இனையதே தீர்ந்தநிலை யென்று. (೫೯)

அடியார்கள் வாழி யருமறைகள் வாழி
தடுத்தாண்டான் முள்வாழி சங்கை-விடுவித்த
ஆத்தரடி வாழி யருள்பெறுவோர் தாள்வாழி
காத்தளிக்க வின்பக் கடல். (೬೦)

திருச்சிற்றம்பலம்.

இந்துவேதமகத்துவம்-முற்றிற்று.